பக்கங்கள்: பதினாறு+VIII=24

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 10 வெள்ளிக்கிழமை (25.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 029

### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக

# கூட்டமைப்பு சரியான முடிவை உரிய நேரத்தில் அறிவிக்கும்

## தமிழ் மக்களைக் குழப்பம் அடைய வேண்டாம் என்கிறார் சம்பந்தன்



கொழும்பு, டிசெம்பர் 25

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உரிய நேரத்தில் சரியான முடிவை எடுக்கும். அந்த முடிவு தமிழ் மக்களின் நலன் கருதியதாகவே இருக்கும். அதற்கு முரணாக இருக்காது. எனவே, இந்த விடயம் குறித்துத் தமிழ் மக்கள் வீணாகக் குழப்பமடையவோ, சஞ்சலப்படவோ தேவையில்லை.

- இப்படித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் அறிவிப்பு விடுத்திருக்கின்றது.

தமிழ்க் கூட்டமைப்பின் இந்த நிலைப்பாட்டை அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் எம்.பி. நேற்று வெளியிட்டார்.

2005 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பாக எடுக்கப்பட்ட முடிவு தவறானது என்பதனால் தான் இன்று பல்வேறுபட்ட இன்னல்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள தனது இல்லத்தில் நேற்று

(16ஆம் பக்கம் பார்க்க)

## மக்களின் வாழ்வை மீளக் கட்டி எழுப்ப இயேசு போதித்த அன்பு இன்று தேவை

### நத்தார் தினச்செய்தியில் ஜனாதிபதி



கொழும்பு, டிசெ. 25

எமது மக்களின் சிதைந்து போன வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு இயேசு போதித்த அன்பையும் கருணையையும் இலங்கை மக்கள் பெரிதும் வேண்டி நிற்கின்றனர்.

- இப்படித் தமது கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

அச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-சமாதானத்தின் இளவரசரான இயேசு நாதரின் பிறந்த நாளை முழு உலகமும் பேருவகையுடன் கொண்டாடும் இவ்வேளையில், பயங்கரவாத அச்சுறுத்தலைவிட்டும் நீங்கிய ஒரு நாட்

(16ஆம் பக்கம் பார்க்க)

## நீதியும் சமாதானமும் நிறைந்த சமூகத்தை உருவாக்குவோம்



### பொன்சேகா நத்தார் செய்தி

கொழும்பு, டிசெ. 25

நீதியும், சமாதானமும் நிறைந்தொரு சமூகத்தைக் கட்டியெழுப்புவோம் என ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட் சிகளின் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் ஜெனரல் சரத் பொன்சேகா தமது நத்தார் செய்தியில் தெரிவித்திருக்கின்றார்.

அச்செய்தியில் அவர் தெரிவித்துள்ளவை வருமாறு:-

உலகம் முழுவதும் உள்ள மக்களுக்கு சுபீட்சமான வாழ்க்கையைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும், பாவ சாபத்தில் இருந்து மீட்கும்படியாகவும் சிலுவையில் தன்னைத் தானே ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வந்த இயேசு கிறிஸ்துவின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## 'உதயன்', 'சுடர் ஒளி' இரண்டு பத்திரிகைகளுமே ஐ.தே.க. நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றனவாம்

### சிவாஜிலிங்கம் கண்டுபிடிப்பு; லண்டன் சென்று தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 25

'உதயன்', 'சுடர் ஒளி' ஆகிய இரு பத்திரிகைகளும் ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலில் இயங்குகின்றன என்ற தமது புதிய கண்டுபிடிப்பை லண்டனில் போய் வெளியிட்டிருக்கின்றார் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் எம்.கே.சிவாஜிலிங்கம் எம்.பி.

இந்தப் பத்திரிகைகளின் ஆசிரியரான வித்தியாதரனின் மைத்துனரும், இப்பத்திரிகைகளின் நிர்வாக இயக்குநருமான சரவணபவனுக்குக் கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிட்டு அமைச்சராக வர ஆசை என்றும், ஆனால் தாம் உயிருடன் இருக்கும் வரை அதற்குத் தாம் இடைஞ்சலாக இருப்பார் என்பதை அவர்கள் நினைவில் வைத்திருக்கவேண்டும் என்றும் கூட அவர் கூறியிருக்கின்றார்.

லண்டனில் தமிழ் இணையத்தளம்

(16ஆம் பக்கம் பார்க்க)

நத்தார் வாழ்த்துக்கள்

உதயன் வாசகர்கள்,
விளம்பரதாரர்கள், செய்தியாளர்கள்,
விற்பனை முகவர்கள் மற்றும்
அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது இனிய நத்தார்
வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.



யாழ். பெரியகோயிலில் நேற்று நள்ளிரவு நடைபெற்ற நத்தார் ஆராதனையின் போது யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் நத்தார் திருப்பலியை ஒப்புக்கொடுப்பதையும் திருப்பலியில் கலந்துகொண்ட பெரும் மக்கள் கூட்டத்தில் சிறு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## பல வருடங்களின் பின் நத்தார் ஆராதனைகளில் பெரும் எண்ணிக்கையினர்; நிகழ்வுகள் களைகட்டின

யாழ்ப்பாணம்,டிசெ.25.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் விசேட நத் தார் ஆராதனைகள் நேற்றிரவு பக்தி பூர்வமாக நடைபெற்றன. தேவாலயங்கள் பலவும் மக்கள் கூட்டத்தால்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இந்தோனேஷியாவில் தடுத்து வைக்கப்பட்ட கப்பலிலிருந்த இலங்கைத் தமிழர் மரணம்!

கொழும்பு, டிசெ. 25

ஆஸ்திரேலியாவிற்கு செல்லும் வழி யில் இந்தோனேஷிய அதிகாரிகளால் சில மாதங்களுக்கு முன்னர் கைப்பற்றப்பட்டுத் தடுத்துவைக்கப்பட்ட படகிலிருந்த இலங்கைத் தமிழர் ஒருவர்

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொழும்பில் ஒரு மாதத்துக்கு மேல் தங்கியிருப்பவர்கள் பொலிஸ் பதிவுகளை மேற்கொள்ள அறிவுறுத்து

## தற்காலிகமாகத் தங்குபவர்களுக்குத் தேவையில்லை என அறிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25

கொழும்பில் ஒரு மாதத்துக்கு மேலாக தங்கியிருப்பவர்கள் முன்னைய நடைமுறைப்படி பொலிஸ் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

இத்தகவலைப் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் மெதிவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

வடக்குக் கிழக்கு மாகாணங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் கொழும்புக்கு வந்து தற்காலிகமாகத் தங்கியிருக்கின்ற தமிழர்கள் பொலிஸ் பதிவுகளை மேற்கொள்ளத் தேவையில்லை.

அத்துடன் கொழும்பில் ஒரு மாதத்துக்கு மேலாகத் தங்கியிருப்பவர்கள் பழைய முறைப்படி பொலிஸ் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இதேவேளை அண்மையில் ஹட்டனில் நடைபெற்ற மலையக மக்கள் முன்னணியின் கூட்டமொன்றில் கலந்துகொண்ட ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ கருத்துத் தெரிவிக்கையில்,

கொழும்புக்குச் செல்லும் தமிழர்கள்தங்களைபொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யத் தேவையில்லை என்று தெரிவித்துள்ளார் என்று 'உதயனில்' கடந்த புதன்கிழமை முதலாம் பக்கத்தில் செய்தி வெளியாகியமை தெரிந்ததே. (01-09)

# தமது வீடுகளைப் பார்க்கலாம் என எண்ணிச் சென்ற எழுதுமட்டுவாழ் மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்!

யாழ்ப்பாணம்,டிசெ.25

தமது சொந்த இருப்பிடங்களைப் பார்ப்பதற்கு ஆவலுடன் சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பியுள்ளனர். எழுதுமட்டுவாழ் தெற்கு, கரம்பகம், ஓட்டுவெளி ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மக்களே ஏமாற்றமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்பிரிவுகளில் உலகவங்கியினால் 2010 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ள வீடமைப்புத் திட்டம் தொடர்பாக பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காக அப்பிரிவுகளைச் சேர்ந்த மக்களைக் கொடிகாமம் அ.த.க. பாடசாலைக்கு கடந்த செவ்வாய்க்கிழமை வருகை தருமாறு கிராம அலுவலர்கள் அறிவித்திருந்தனர்.

ஆனால் மக்களோ வளவுகளைத் துப்பரவு செய்யும் பொருள்களுடன் உணவு மற்றும் குடிதண்ணீர் ஆகியவற்றுடனும் பாடசாலைக்கு சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதம் இப்பிரிவுகளைச் சேர்ந்த ஒரு சிலர் தமது காணிகளைப் பார்க்க அனுமதிக்கப்பட்டதுடன் 3 வாரங்களில் மீளக்குடியமர ஒழுங்கு செய்து தரப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனாலேயே கிராம அலுவலர்கள் விடுத்த அழைப்பினை மக்கள தவறாகக் கருதி தமது வீடுகளைப் பார்க்கவும் துப்பரவு செய்வதற்கான ஆயத்தங்களுடன் கொட்டும் மழையிலும் வந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அப்பகுதிகளில் இன்னமும் வெடிப் பொருள்கள் அகற்றும் பணிகள் முடிவடையவில்லை எனவும் கூறப்பட்டது. (01-207)

## கண்ணீர் அஞ்சலி



எமது சன சமூக நிலைய, விளையாட்டுக்கழக நிர்வாகசபை உறுப்பினர் சி.ஜெயசங்கர், விளையாட்டுகழக அங்கத்தவர்களான சி.ஜெயமனோகரன், சி.ஜெயச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தை

**வீரகத்தி சிவசுப்பிரமணியம் (J.P)**

அவர்கள் சிவபதமடைந்த செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கரம்பைக் குறிச்சி மேற்கு,<br>குருக்கள்குடியிருப்பு, வரணி.

கற்குழுக்கந்தன் சனசமூகநிலையத்தினரும்<br>விளையாட்டுக்கழகத்தினரும்.

## கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்



எமது நிர்வாகசபைக் கணக்காய்வாளர் திரு.சி.ஜெயசங்கர் அவர்களின் அன்புத் தந்தை

**வீரகத்தி சிவசுப்பிரமணியம்**

(அகில இலங்கை சமாதான நீதிவான்)

அவர்கள் 24.12.2009 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய கரம்பான் வீரகத்தி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

கரவை கரம்பான் வீரகத்தி விநாயகர் ஆலயம்.<br>பரிபாலன சபையினர்.

## கண்ணீர் அஞ்சலி

வேலணைப் பிரதேச செயலகத்தில் சிற்றூழியராகக் கடமையாற்றும் திரு.பொ.தில்லைநாதன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பொன்னையா அம்மணி**

அவர்களின் மறைவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்,<br>பிரதேச செயலகம்,<br>வேலணை.

பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்.

(91790)

## கணிதபாட ஆசிரியர்களுக்கு விசேட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்குட்பட்ட நல்லூர் கோட்டப் பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் எதிர்வரும் திங்கள் காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை யாழ். இந்துமகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். வலயக்கல்விப் பணிமனையின் கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளார்.

அனைத்துப் பாடசாலைகளினதும் கணித பாட ஆசிரியர்கள் தவறாது சமுகமளிக்குமாறு நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராசா கேட்டுக் கொண்டுள்ளார்.


## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ் தினமும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(சுத்தம் செய்தல் இலவசம்)

A.S.S பாம், தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.


## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் சொக்கலிங்கம் துரைஐயா**

(உரிமையாளர் - கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ்)

தோற்றம்<br>30★04★1934

மறைவு<br>20★12★2004

(திதி - 25.12.2009)

எம் குடும்பத்தின் குலவிளக்கே!<br>ஆண்டுகள் ஐந்து சென்றாலும்<br>மாறவில்லை உங்கள் நினைவு!<br>நெஞ்சமெங்கும் நிர்மலமாய் நிறைந்திருக்கும்!<br>ஊன உடல் அழிந்தாலும்<br>உயிராய் நிறைந்திருப்பீர் எம் நெஞ்சமெல்லாம்!<br>தேடுகின்றோம், நித்தம் உம்மை!

சந்திரன் பான்சி பலஸ், துரைஐயா மண்டபம்<br>நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (91794)

குடும்பத்தினர்<br>சங்கரப்பிள்ளை வீதி,<br>ஆனைக்கோட்டை.

## காணி மாவட்டப் பதிவகப் பணிகள் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், டிசெ.25.

வருட இறுதிப் பணிகளை முன்னிட்டு எதிர்வரும் 29ஆம் 30ஆம் திகதிகளில் விவாக, பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திர விண்ணப்பங்களும் காணி உறுதிப் பிரதிக்கான விண்ணப்பங்களும் ஏற்கும் பணிகள் மாவட்டச் செயலக காணி மாவட்டப் பதிவகத்தில் இடம்பெற மாட்டாது. எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் வழமைபோல் சகல பணிகளும் இடம்பெறும் என்று காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் பி. பிரபாகர் தெரிவித்தார். (01)

## தேசிய சேமிப்பு வங்கி மாணவர்களைக் கௌரவிக்கிறது

யாழ்ப்பாணம்,டிசெ.25

தேசிய சேமிப்பு வங்கியின் தபால் ஹப்பன் கணக்கை வைத்திருக்கும் மாணவர்கள் 2009 - 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின், அவர்களைக் கௌரவித்து பரிசில்கள் வழங்குவதற்கு தேசிய சேமிப்பு வங்கி வடமாகாண அஞ்சல் வங்கி நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

01.10.2009 அன்று தபால் ஹப்பன் கணக்கில் 1,000, மிகுதியை உடைய புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை உடனடியாக 29 ஆம் திகதிக்கு முன்னர் தன்னுடன் தொடர்பு கொள்ளும்படி முகாமையாளர் இ. இராஜா மகேந்திரசிங்கம் கேட்டுள்ளார். (01)

## கணனி வன்பொருள் திருத்தப் பயிற்சிப் பரீட்சை

யாழ். கல்வி வலயத்தினால் எமது பாடசாலையில் நடத்தப்பட்ட கணனி வன்பொருள் திருத்தற்பயிற்சி (அணி1, அணி2,), சிங்களம், ஆங்கிலம் ஆகியவற்றிக்கான இறுதிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் வைத்துவழங்கப்படவிருக்கின்றன. பயிற்சியில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவரும் காலை 9 மணிக்கு தவறாது சமுகமளித்து அனுமதி அட்டைகளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். (1)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**<br>61, Kachcheri - Nallur Road, Jaffna.<br>Phone: 021 222 8093<br>E-mail: alliancejaffna@yahoo.com

*Learn French the French Way French Classes*

சர்வதேச மொழியான French மொழி யாழ்ப்பாணத்தில் French Embassy இன் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.

எங்களுடைய நூலகத்தை மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடுகளில் உயர்கல்வி கற்க விரும்புவோர் மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.

**புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.

(91778)


## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் செல்வநாயகம்

(ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்)



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பு, பிள்ளையார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் செல்வநாயகம் 23.12.2009 புதன்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், கனகத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசநாயகம்- இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற நல்லையா மற்றும் அன்னம்மா ஆகியோரின் சகோதரனும் பாலச்சந்திரன், பவானி, கிருபாநாயகி, கிரிதரன், யோகச்செல்வி, ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகராணி, தர்மரத்தினம், சந்திரகாந்தன், தயானந்தி, கணேசலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பபஷாந், அபிராமி, ஆரணி, டிலக்ஷன், கிரிஷாந்தன், ஷர்மிலி, அக்ஷை, ஆருஷன், ஆருஷா, அபிஷா, கவிஷ்னா, கயூரதா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் வேலாயுதம், விக்னேஸ்வரன், காசிநாதன், நடராஜா, கனகம்மா, செல்லம், அன்னம், மகேஸ்வரி, சறோஜினிதேவி, விக்னேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் தெய்வநாயகி, காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் விவேகானந்தன், காலஞ்சென்ற மகாதேவன், மற்றும் நடராஜா, காசிநாதன், யோகலட்சுமி, பத்மலோஜினி ஆகியோரின் சகலனும் ஆவரர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2009) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் விளாவெளி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் கோவிலடி,<br>வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (91788)

தகவல்:-மனைவி, மக்கள்,<br>மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### திருமதி இராசம்மா வல்லிபுரம் (வல்லிக்கோன்)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா வல்லிபுரம் 20.12.2009 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.12.2009) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகள் - பேராசிரியர் கலைவாணி இராமநாதன்<br>(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்),<br>மகன் - வாசவன் வல்லிபுரம்<br>(கணக்காளர், யூனிவேசல் பிறைவேற் லிமிட் டெட், கொழும்பு)

றொட்டியாலடி, அம்பலவாணர் வீதி,<br>முதலாம் குறுக்கு ஒழுங்கை,<br>உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(91791)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## சமாதானத்தை நோக்கிச் செல்ல... வழி...?

இன்று நத்தார் தினம். சமாதானத்தின் தேவன் அவதரித்த நன்னாள். உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் இன்றைய தினத்தைக் கொண்டாடுகிறார்கள். விடுதலையின்றித் தவிக்கும் மனுக்குலத்தின் ஆத்ம விடுதலைக்காகத் தம்மையே மரணத்துக்கு ஒப்புக் கொடுக்க வந்த கிறிஸ்து பிறந்த தினம்தான் இன்று.

சமாதானத்துக்காக - மானுட அமைதிக்காக - தன் சொல்லாலும், செயலாலும், ஜீவனாலும் நற்பணி புரிந்த ஆண்டவர் அதற்காகவே தமது உயிரையும், உடலையும் கூட அர்ப்பணித்தார் என்பதே அவரது வாழ்வு காட்டும் சிறப்பாகும்.

ஆனால், இன்று சமாதானம் பூமியில் இருக்கின்றதா? எமது நாட்டில் இருக்கின்றதா? பூமியானது பாவத்தில் ஆழ்ந்துவிட்டது. இலங்கை, ஈராக், ஆப்கானிஸ்தான் உட்பட உலகின் பல நாடுகளில் சமாதானம் இன்னும் எட்டாத தூரத்தில் இருக்கிறது.

போர் ஓய்ந்தபோதும் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. எனவே நிரந்தரத் தீர்வொன்று காணப்படவேண்டியது அவசியம் என்று யாழ்.ஆயர் அதிமேதகு தோமஸ் சவுந்தரநாயகம் கூறியிருப்பது இன்றைய நாளில் கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும்.

போரின் பயனாக நடந்த பிரச்சினைகள் இன்னும் முழுதும் தீர்க்கப்படவில்லை. இடம்பெயர்ந்த மக்களின் அவலநிலை இன்னும் முடியவில்லை. அவர்கள் தம் இல்லங்களுக்கும் நிலபுலங்களுக்கும் திரும்பி நாளாந்த வாழ்வை மேற்கொள்ளும்போதுதான் அவர்கள் நிம்மதி அடைவார்கள்.

நாளாந்தம் அசுரவேகத்தில் ஏறிவரும் விலைவாசிகளும் அதனால் ஏற்படும் சிரமங்களும் பரந்து நிற்கும் வறுமையும், வாழ்வதற்குத் தகுந்த இல்லிடமற்ற நிலைமையும், வேலைவாய்ப்பு இன்றிய நிலையும் இன்று மக்களை வாட்டி நிற்கின்றன. இவற்றுக்கு நிரந்தரத் தீர்வு காண்பது அரசினுடையதும் ஏனைய உதவி நிறுவனங்களினதும் கடமையாகும் - என்று ஆயர் கூறுவதை அரசியல்வாதிகளும், தொண்டு நிறுவனங்களும் மனதில் இருத்தவேண்டியது அவசியம்.

இறைமகன் இயேசு காட்டிய சமாதான வழியில் மற்ற மனிதர்களையும், இனத்தையும் தம்மைப்போல் மாண்புடன் மதிக்கின்ற வகையில் செயற்படுகின்ற மேலான மனப்பாங்கும் மனப்பக்குவமும் இல்லாதவரை, எமது இலங்கைத் தீவின் தலைவர்களுக்கு வராத வரையில், தேவன் காட்டிய சமாதான வாழ்வு எமக்குக் கிட்டப்போவதில்லை.

இலங்கையில் முப்பது வருடங்களாக நீடித்த போர் ஓய்ந்த காலத்தின் முதலாவது நத்தாராக, யேசு பிரானின் பிறப்பு நாளாக இன்றைய அமைகிறது. அதனால் சமூகத்துக்கு ஆண்டவர் சமாதானத்தைக் கொண்டுவந்த இந்நாளில், சமாதானம் குறித்த அவாவும், வேண்டுதலும் மக்கள் மனங்களில் என்றும் இல்லாதவாறு மேலோங்கி நிற்கின்றன.

நாட்டில் அரசுத் தலைவரைத் தெரிவு செய்யும் காலமும் இவ்வேளை வந்துள்ளதால், தமிழர்கள் தமக்குரிய ஜனநாயக உரிமைகளை, தமது பிறப்புரிமைகளைப் பிசகின்றிப் பெறுவதற்கு வாய்ப்புக் கிடைக்க வழிதிறக்குமோ என்ற கேள்வியும் உயர்ந்து நிற்கிறது.

அதனை நிர்ணயிக்க வேண்டிய, முடிவு செய்யவேண்டிய பெரும் பொறுப்பும் சிங்கள மக்களைவிட தமிழர்கள் நமக்கே வந்துசேரும் புறச்சூழல் ஒன்று என்றுமில்லாதவாறு ''புதிதாகச்'' சேர்ந்துள்ளது.

இதனைப் புத்திக்கூர்மையுடன் தக்கவாறு பயன்படுத்துவதற்கு, சமாதானப் பிரபுவான யேசு பிறந்த இந்நாளில் மனதிற்கொண்டு செயற்படுவோமாக.

# யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான மினிபஸ் சேவை திங்கட்கிழமை முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான நேரடி தனியார் மினி பஸ் சேவை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கத்தலைவர் பொ.கங்காதரன் இத்தகவலைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கும் இடையிலான தனியார் மினிபஸ் சேவை கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டு தற்போது சீராக நடைபெற்று வருகின்றது.

யாழ்.மோட்டார் திணைக்களத்தின் அலுவலகத்தால் தரப் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட 50 மினிபஸ்கள் யாழ்ப்பாணம் - வவுனியா இடையிலான பஸ் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

மேலும் மினி பஸ்கள் தரப்பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. யாழ்.மாவட்ட தனியார் சிற்றூர்தி சேவைச்சங்கம் ஏ-9 பாதை ஊடாகப் பயணிகள் பஸ்சேவையில் ஈடுபடுவதற்காக 113 மினிபஸ்களின் விவரங்களை யாழ்.மோட்டார் திணைக்களத்திடம் கையளித்துள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான நேரடி மினிபஸ் சேவைகள் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன - என்றார் அவர். (50-9)

## யாழ்.மாவட்ட நீதிபதியாக பிரேம்சங்கர் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதியாக தற்போது சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகக் கடமையாற்றும் அ.பிரேம்சங்கர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

நீதிச் சேவைகள் ஆணைக்குழு ஜனவரி முதலாம் திகதி முதல் இந்த இடமாற்றத்தை வழங்கியுள்ளது.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களில் கடமையாற்றும் நீதிபதிகளுக்கும் இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பருத்தித்துறை மாவட்ட நீதிபதி கே.அரியநாயகம் மல்லாகம் மாவட்ட நீதிபதியாகவும், மல்லாகம் மாவட்ட நீதிபதி ரி.ஜே.பிரபாகரன் சாவகச்சேரி மாவட்ட நீதிபதியாகவும், யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.வசந்தசேனன் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதியாகவும், ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி ஜோய் மகிழ் மகாதேவா பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகவும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நீதிச்சேவை ஆணைக்குழுவால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (50-224-207)

## யாழ்.பொதுநூலகத்தின் சிறுவர் பகுதிக்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள்

### சம்பத் வங்கி அன்பளிப்பாக வழங்கியது

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்.பொதுநூலகத்தின் சிறுவர் பகுதிக்கு சம்பத் வங்கியினால் ஒரு தொகுதி நூல்கள் நேற்றுக் கையளிக்கப்பட்டன.



[illegible]தொடர்பான நிகழ்வு யாழ். பொ[illegible]லகக் கேட்போர்கூடத்தில் நேற்[illegible] நடைபெற்றது.

இதன்போது பொதுநூலகத்தின் சிறுவர் பகு திக்கான சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் கையளிக்கப்பட்டன.

சம்பத் வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் பி.சங்கர் இந்த நூல்களை யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவிடம் கையளித்தார்.

யாழ்.மாநகரசபை முதல்வர் அந்த நூல்களை யாழ். பொதுநூலகரிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.பொது நூலக உத்தியோகத்தர்கள், சம்பத்வங்கி அதிகாரிகள் கலந்துகொண்டனர். (50-16)

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.25

மட்டுவில் வடக்கு பனையடிப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் இன்று வெள்ளி இரவு 7 மணி முதல் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது.

இவ்வாலயத்தில் திருவெம்பாவை பூசை வழிபாடுகளும் நடைபெற்று வருகின்றன. (1-131)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.25

உரும்பிராய் காமாட்சி அம்பாள் கோயில் பௌர்ணமி விழா இன்று வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.

கோயில் கல்யாண மண்டபத்தில் இடம்பெறும் இவ்விழாவில் பிற்பகல் 4 மணிக்கு ' பூச்சியம்' என்னும் தலைப்பில் பண்டிதர், சைவப் புலவர் பொன். சுகந்தன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

தொடர்ந்து கவிமணி அன்னைதாசன் குழுவினரின் தொடர் இசைச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது. (1-236)

## யாழ்ப்பாணத்தில் இன்று முதல் 450 கிராம் பாணின் விலை 36 ரூபா

யாழ்ப்பாணம்,டிசெ.25

மாவின் விலை குறைக்கப்பட்டதையடுத்து யாழ்ப்பாணத்தில் பாணின் விலையும் இன்று வெள்ளிக்கிழமை முதல் 7 ரூபாவினால் குறைவடைகின்றது. இன்று முதல் 450 கிராம் நிறையுடைய பாணின் விலை 36 ரூபா.

யாழ்.மாவட்ட வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

இன்று தொடக்கம் 450 கிராம் பாண் ஒன்று 36 ரூபாவாகக் க[illegible]களில் விற்கப்படும்.

கோதுமைமாவின் விலை குறைக்கப்பட்டமையே பாணின் விலை குறைப்புக்குக் காரணம் என அறிவிக்கப்பட்டுள்ளது. நுகர்வோர் பாணைக் கூடிய அளவில் கொள்வனவு செய்கின்றமையும் அதன் விலைக் குறைப்புக்குக் காரண[illegible]னத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை[illegible]ணிஸ் மற்றும் உப பொருள்கள[illegible] விலைகளில் மாற்றம் செய்யாது அதன் ஒட்டு மொத்தக் கழிவினையும் பாணின் விலையில் குறைத்துள்ளதாகவும் வெதுப்பக உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அறிவித்துள்ளது.

அத்துடன் இவ்வளவு காலமும் விற்பனைக் கழிவாக வியாபாரிகளுக்கு வழங்கப்பட்ட 2 ரூபாவானது ஒரு ரூபாவாகவும் விநியோகஸ்தர்களுக்கான கொடுப்பனவு ஒரு ரூபா 50 சதமாகவும் மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (50-224)

## குருநகர் மேற்கில் வடிகால் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.25

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் நிதிப்பங்களிப்புடன் 'கமநெகும' திட்டத்தின் கீழ் குருநகர் மேற்கு செபஸ்ரியார் வீதியில் உள்ள கழிவு நீர் வாய்க்கால் 2 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாகச் சமுர்த்தி செயலணி உத்தியோகத்தர் எஸ்.சபேசன் தெரிவித்தார்.

யாழ்.கதீற்றல் வீதியையும் புனரமைப்புச் செய்வதற்கு 3 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தற்போது இந்த வீதியின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார். (50-23)

## கொழும்புத்துறை பிரதான வீதியில் பயன்தரு மரங்கள் நடுகை

யாழ்ப்பாணம்,டிசெ.25

கொழும்புத்துறை பிரதான வீதியில் பயன்தரு மரங்கள் நாட்டப்பட்டு வருகின்றன.

வீதியோரத்தில் நாட்டப்பட்டு வரும் இந்த மரங்களுக்குப் பாதுகாப்புக் கூடுகளும் போடப்பட்டு வருகின்றன.

பயன்தரு மரங்களை நாட்டும் பணியில் அப்பகுதியைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை இலகுவேலைத் திட்டத்தின் கீழ் இப்பிரதேசத்தின் வீதியோரங்களும் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

வீதியோரத்தில் இருக்கும் பற்றைகள், முட்புதர்கள் வெட்டி அகற்றப்படுகின்றன. (50-224)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 11 | 26.12.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | நவமி |
| | காலை 08.22 வரை |
| நட்சத்திரம்: | ரேவதி |
| | மு.ப. 11.30 வரை |
| சுபநேரம்: | 03.27-04.57 வரை |
| ராகுகாலம்: | 09.27-10.57 வரை |

## தனியார் சிற்றூர்திச் சங்கத் தலைவர் கெமுனு விஜயரட்ண யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம்,டிசெ.25

இலங்கைத் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார் என யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கத்தின் தேவைகள் தொடர்பாகவும், தனியார் மினிபஸ் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராய்வதற்காக சிற்றூர்திச் சேவை சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரட்ண நாளை யாழ்ப்பாணம் வருகை தருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவர் யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்ட மினிபஸ் சங்கத்தின் நிர்வாகத்தினரையும் போக்குவரத்துத் திணைக்கள அதிகாரிகளையும் நாளை சனிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (50-9-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவெட்டி மல்லாகம் பல.நோ.கூ. சங்கம் (வ.து)

### கூட்டுறவுக் கலந்துரையாடல்.

மல்லாகம் பகுதி கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்களுடனான முக்கிய கலந்துரையாடல் ஒன்று 27.12.2009 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி பாடசாலை மண்டபத்தில், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கௌரவ திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளதால் இக்கலந்துரையாடலிற்கு சகல மல்லாகம் பகுதி கூட்டுறவு அங்கத்தவர்கள் அனைவரும் சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு - மேற்படி கலந்துரையாடலிற்கு அழைப்பிதழ் கடிதம் எம்மால் அனுப்ப தவறவிடப்பட்ட அங்கத்தவர்களும் இக் கலந்துரையாடலிற்கு சமுகம் தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர். (சி/563478) செயலாளர்.

## 2010 இன் அபிவிருத்திக்கு பொதுமக்களுக்கான முன் அறிவித்தல் வலி.மேற்குப் பிரதேசசபை- சுழிபுரம்

**01. படவரைஞராகப் பதிவு செய்தல்**

வலிகாமம் மேற்கு - சுழிபுரம் பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தின் 2010ஆம் ஆண்டுக்கான படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும், ஏற்கனவே 2009 ஆம் ஆண்டில் பதிவு செய்துள்ளோரும் 2010 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ள தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**02. வியாபார உரிம அனுமதிப்பத்திரம்- 2010**

வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் வியாபாரம் செய்வோர், உரிய விண்ணப்பப்படிவங்களை 2009.12.31 ஆம் திகதிக்கு முன்னர் சுழிபுரம், சங்கானை, வட்டுக்கோட்டை, அராலி ஆகிய உப அலுவலகங்களில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி அவ்அவ் உப அலுவலகங்களில் சமர்ப்பித்து 2010.01.31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2010ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரங்களைப் (Trade Licence) பெற்றுக்கொள்ளவும்.

**03. வீடுகள், கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள், குழாய்க்கிணறுகள், கிணறுகள் அமைத்தலும், புதுப்பித்தலும்**

எமது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் மேற்படி அமைப்பு வேலைகளை அனுமதியின்றி மேற்கொள்ளல் வீடமைப்பு, நகர சீர்திருத்த கட்டளைச்சட்டம் பிரிவு 268இன் பிரகாரம் தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே உரிய விண்ணப்பப்பத்திரங்களை அவ்அவ் உப அலுவலகங்களில் பெற்று சபையின் முன் அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு முன் அனுமதி பெறப்படாத கட்டடங்கள் அனைத்தும் எவ்வித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும். ஏற்கனவே அனுமதி பெற்று அவ்வாண்டுக்குள் கட்டட வேலைகள் பூர்த்தியாகாதவிடத்து அவ் விண்ணப்பதாரிகள் அனுமதியினை புதுப்பித்துக்கொள்வதோடு கட்டடத்தைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரிகள் உரிய அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளவும். மேலும் அனுமதியற்ற சகல கட்டடங்கள் மீதும் சட்டத்தின் முன் நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளேன்.

**04. வாகன, மிருகவரி-2010**

மேற்படி துவிச்சக்கர வண்டிகள், மாட்டு வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2010.03.31 ஆம் திகதிக்கு முன்னர் அவ் அவ் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2010ஆம் ஆண்டுக்கான வாகன, மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**05. ஆதன வரி அறிவித்தல்-2010**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் கட் டளைச் சட்டத்தின் கீழ் நடப்பு வருடத்தில் அறவிடப்பட்ட ஆதன வரி வீதத்தின் பிரகாரம் 2010ஆம் ஆண்டுக்கான ஆதன வரி அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2010ஆம் ஆண்டுக்கான ஆதன வரியினை 2010.01.31 இற்கு முன்னர் செலுத்துவதனூடாக அவ் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டுக்குமான வரியினை அந்தந்தக் கந்தாயத்தின் முதல் மாத முடிவுக்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட காலத்திற்குள் ஆதனவரி செலுத்தத் தவறும் பட்சத்தில், 15% விறாந்துக் கட்டணம் ஆதன வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதனவரிகளை 2010.01.31 இற்கு முன்னர் அவ்வவ் உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(மேலும் வடக்குமாகாண ஆளுநரின் அனுமதியின் பிரகாரம் வரி அறவீட்டில் மாற்றம் ஏற்படலாம்).

**06. ஆதனவரி பதிவேட்டில் பெயர் மாற்றம்**

வலிகாமம் மேற்கு - சுழிபுரம் பிரதேச சபையின் நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் ஆதனங்களைக் கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து ஆதனவரி பதிவேட்டில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் அவ்அவ் உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளுமாறும், மேலதிக ஆலோசனை தேவைப்படின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**7. சூழல் பாதுகாப்பு உரிமம் (E.P.L - 2010)**

வலிகாமம் மேற்கு சுழிபுரம் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் சிறிய மற்றும் நடுத்தர வியாபார/ தொழில் முயற்சிகளில் ஈடுபடும் சகலரும் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் (E.P.L) 2010.01.31 இற்கு முன்னர் பெற்றுகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். விதந்துரைக்கப்பட்ட தொழில்/ வியாபார நடவடிக்கைகளின் விவரங்களை உப அலுவலகங்களில் பார்வையிடலாம். மேலும் அவ்வாறு சூழல் பாதுகாப்பு உரிமத்தினை பெறத்தவறுபவர்கள் 2010 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்/ வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை, க.புத்திசிகாமணி, செயலாளர்,

சுழிபுரம். 23.12.2009 (சி/563486) வலிமேற்குப் பிரதேசசபை, சுழிபுரம்.

## தென்மராட்சி இணைப்புக் குழுவின் கூட்டம் செவ்வாயன்று

யாழ்ப்பாணம்,டிசெ.25

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்பு மற்றும் விவசாயக் குழு ஆகியவற்றின் கூட்டங்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார். (01-207)

## தெல்லிப்பழைக் கோட்ட அதிபர்களுக்கு கூட்டம்

வலி.வடக்கு,டிசெ.25

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்விக்கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்துப் பாடசாலைகளின் அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி கல்விக்கோட்டப் பணிப்பாளர் அ.கைலைநாதன் அறிவித்துள்ளார். (01-86)

## கடமை நிறைவேற்று அதிபர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,டிசெ.25.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆரியகுளம் சந்தியிலிருக்கும் புதிய உயர்கல்லூரில் இடம்பெறவிருக்கின்றது.

இக்கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த ஆசிரியர்களை நிரந்தர அதிபர்களாக்கும் கோரிக்கையை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவிடம் முன் வைக்க உள்ளதால் சகல கடமை நிறைவேற்று அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர் வல்வை றோ.க.த.க. பாடசாலை அதிபர் நா.கண்ணதாசன் கேட்டுள்ளார். (01-70)

### தவறிவிட்டது

இராமச்சந்திரன் மதிச்சந்திரன் என்பவருடைய தே.அ.அட்டை (872361375V), விசேட அடையாள அட்டை என்பன கோண்டாவில் ஸ்ரேசனுக்கும் திருநெல்வேலிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(சன்மானம் வழங்கப்படும்)

அரசடி அம்மன் வீதி, திருநெல்வேலி தொ.பே: 0776845766

### தவறிவிட்டது

422/ 2, கண்டிவீதி, அரியாலையில் வசிக்கும் A.தேவராஜா (J.P) என்பவருடைய தே.அ. அட்டை (இல. 362741238V) சாரதி அனுமதிப்பத்திரம், வரிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் என்பன மாம்பழம் சந்திக்கும் A.V றோட்சந்திக்குமிடையில் கடந்த 22.12.2009 அன்று அ.அ. கவருடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 396, "நவீன அழககம்" கண்டிவீதி, அரியாலை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். நல்ல சன்மானம் வழங்கப்படும். தொ. பே: 021 222 6273

### தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைச் சேர்ந்த சி.தயாபகரன் என்பவரது தே.அ.அ. (713350214V) யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் சந்தியிலுள்ள சதா ஹாட்வெயரில் ஒப்படைக்கவும் அல்லது தொ.பே:- 0213210552 இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### கஜன் பிளாஸ்ரிக் தொழிலகம்

சகலவிதமான மோட்டார் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் சிறந்த முறையில் மீள்திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் பெயின்ரிங் வேலைகளும் செய்து தரப்படும்.

தொடர்பு - 0771607752

411, மாம்பழம் சந்தி,

கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(91789)

### தவறிவிட்டது

19.12.2009 சனிக்கிழமை கொழும்பிலிருந்து வரும் பொழுது உடுபுடைவைகள் அடங்கிய ஒமேகா சூட்கேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியுடனோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும்.

பாலு (சுத்தரிக்காய் வியாபாரி)

மருதனார்மடம் சந்தை.தொ.பே:0776592477

### வேலையாள்கள் தேவை

(1) சிற்றுண்டி தயாரிப்பவர்கள்.
(2) சிற்றுண்டி பரிமாறுபவர்கள் (சப்பிளையர்)
(3) கைவேலை செய்வதற்கு (பெண்கள், ஆண்கள்)
(4) சமையல் தெரிந்தவர்கள் (அசைவம்)
(5) காசாளர் (கணக்கு மெசின் பாவித்து பில், கணக்குகள் செய்யக்கூடியவர்)

★ உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு - DILAN HOTEL

133, [illegible] வீதி,

யாழ்ப்பாணம். (சி/563489)

### யாழ். பேக்கரி உரிமையாளர் சங்கம்

அன்புடையீர்!

பாணின்விலை சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (27.12.2009) அன்று முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெற இருப்பதால் பேக்கரி உரிமையாளர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் ஒன்றுகூடுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு:-குறித்த நேரத்தில் கூட்டம் ஆரம்பமாகும் என்பதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்கும் படியும் கேட்டுக்கொள்கின்றேன்.

த.தவறஞ்சன்,

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். செயலாளர்.

### சுவசெத Suwasetha சுவசெத லொத்தா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 343

சீட்டிழுப்பு திகதி: 23.12.2009

வெற்றி எழுத்து: X வெற்றி இலக்கங்கள்: 07 08 33 49 போனஸ் இலக்கம் 22

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 10,485,372.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | - |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | 02 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 70 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 125 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 3491 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 2412 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 45310 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 1,374,820.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,707,537.50

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்பவின் முன்னோடி

தேசிய லொத்தர் சபை

234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அவசர : 2470662, 2470663 தேவைக்கு: 2473360, 2433631 இணையத்தளம்:www nlb lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.

### துளிர்கள் உளசமூக மேம்பாட்டு நிறுவன அறிவித்தல்

★ சேவை மனப்பான்மையுள்ள அனைவரும் விண்ணப்பிக்கலாம் வயது உங்களுக்கு ஒரு தடையல்ல!

★ ஒவ்வொரு D.S.பிரிவுகளிலுள்ள கிராம மட்டங்களில் **குடும்பஒற்றுமையை** முன்னெடுக்கும் முக்கிய பணியில்.....

★ எமது துளிர்களோடு இணைந்து சேவையாற்றுவதற்கு ஆர்வமுள்ள தொண்டர்களை (Volunteer) இணைக்கவுள்ளோம்.

★ பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம்! என்றில்லாமல் நீங்களும் சமூகத்திற்கு ஏதோ ஒரு வழியில் உதவினோம் என்ற மனத்திருப்தியில் வாழ்வைத் தொடரலாமே......

★ உங்கள் ஆற்றலை விருத்தி செய்துகொள்ள!

★ உங்கள் தொழில் வாண்மையை வளர்த்துக் கொள்ள!

★ சமூகத்துடனான உங்கள் உறவை மேம்படுத்திக்கொள்ள!

★ உங்கள் ஊர்களிலே உங்களுக்கான சேவைகள் தொடர உங்களோடு இணைந்து நாங்கள் வழிகாட்டுகின்றோம்.

(★ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலரும் உங்கள் சுயவிவரங்களை D.S, G.S பிரிவுகளைக் குறிப்பிட்டு 31.12.2009 இற்கு முன்பு அனுப்பி வையுங்கள்).

இல. 30, கம்பஸ் லேன்,
திருநெல்வேலி. (சி/563488) இயக்குநர் துளிர்கள்.

### ஈராண்டு நினைவலைகள்



சிவகணேசக் குருக்கள் கணேசராஜசர்மா (ராஜன்)

அன்னை மடியில் : 25.09.1985

ஐயன் அடியில் : 18.12.2007

திதி: மார்கழி மாத நவமி (25.12.2009)

ஈராண்டு ஆனாலும் உன் ஆழ்துயரம் ஆறவில்லையே
உன்னை நினைப்பதற்கு ஒரு நிமிடம்-ஆனால்
மறப்பதற்குத் தேவை ஒரு யுகம்
உன் பாசமுகம் காணாமல் எம் நேசமுகம் துடிக்கின்றதடா
ஐயனுக்கு துதி பாடினாய் இப்போது
ஐயன் துதி உனக்குப் பாடுகின்றோம்
பதினெட்டுப் படியும் ஏற விரும்பினாய்
பதினெட்டுப் படியினிலே இறங்கி இறந்தாய்
அன்புப் பெற்றோர் சகோதரரை துடிக்கவிட்டு
அகால மரணத்தை தழுவிக் கொண்டாயே! ஏன்?
காலங்கள் பல ஓடினாலும் உன்னைக் காணாமல் நாம் செல்ல மாட்டோம்
ஐயன் திருவருள் பெற்று அவன் திருவடி சேர்வாயாக!
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அராலி மத்தி,
வண்ணபுரம், சிவன்கோயில்.

உன் நினைவுகளுடன்:
பெற்றோர் மற்றும்
சகோதர, சகோதரிகள்.

(91765)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலை அனர்த்தத்தில் உயிரிழந்தோரின் 5ஆம் ஆண்டு நினைவு வடமராட்சி கிழக்கில்

## மக்கள் கலந்துகொள்ள வசதியாகப் போக்குவரத்து ஏற்பாடு

பருத்தித்துறை,டிசெ.25

ஆழிப்பேரலை அனர்த்தம் பறித்தெடுத்த உறவுகளின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் வடமராட்சி கிழக்கில் உடுத்துறை, மணற்காடு ஆகிய இடங்களில் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

வடமராட்சி கிழக்கில் சுனாமி அனர்த்தத்தின்போது உயிரிழந்த 950 பேரின் உடல்கள் உடுத்துறையில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டன. வருடாவருடம் நினைவு தினத்தன்று மரணமடைந்தவர்களின் உறவுகள் அவ்விடத்தில் கூடி அஞ்சலி செலுத்தி நிகழ்வுகள் நடத்தப்படுவது வழக்கம். இவ்வாண்டு அப்பிரதேசத்திலிருந்து யுத்தத்தினால் மக்கள் வெளியேறி ஆள்களற்ற பகுதியாக அப்பிரதேசம் காணப்படுகின்றது.

சுனாமி அனர்த்தத்தின்போது உயிரிழந்தவர்களின் உறவுகளும், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசமும், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் விடுத்த கோரிக்கையினையடுத்து வழமைபோல் இவ்வருடமும் உடுத்துறையில் சுனாமி அனர்த்தத்தின்போது உயிரிழந்தவர்களை நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்திற்கு அவர்களின் உறவுகள் சென்று அஞ்சலி செலுத்துவதற்கும், நிகழ்வுகள் நடைபெறுவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள சுனாமி அனர்த்தத்தின் போது மரணமடைந்தவர்களின் உறவுகள் உடுத்துறைக்கு அஞ்சலிக்காகச் செல்வதற்கு பஸ்சேவை ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களுக்கான பஸ் சேவை வடமராட்சியில் இன்பருட்டி, பருத்தித்துறை பஸ்நிலையம், கற்கோவளம் ஆகிய இடங்களிலிருந்தும் வடமராட்சி கிழக்கில் மணற்காடு, குடத்தனை, பொற்பதி ஆகிய இடங்களிலிருந்தும், தென்மராட்சியில் அல்லாரை நலன்புரி நிலையத்திலிருந்தும் அதிகாலை 5 மணிக்கு உடுத்துறையை நோக்கிப் புறப்படவுள்ளது.

ஆழிப்பேரலையில் உயிரிழந்தோரை நினைவு கூருமுகமாக இப்பிரதேசங்களிலுள்ள தேவாலயங்கள், இந்துக் கோயில்களில் அன்றைய தினம் விசேட பூசைகள், வழிபாடுகள், பிரார்த்தனைகள் என்பனவற்றை நடத்த கத்தோலிக்க, மெதடிஸ்த திருச்சபைகளும், இந்து அமைப்புகளும் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

மணற்காட்டில் சுனாமி அனர்த்தத்தின் போது உயிரிழந்த 72 பேரினதும், பொற்பதியில் உயிரிழந்த 4 பேரினதும் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலும் நாளைய தினம் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

ஐந்தாம் ஆண்டு நினைவுதின அஞ்சலி நிகழ்வுகள் நாளை காலை 9 [illegible] உடுத்துறையில் நடைபெற[illegible] [illegible] நிகழ்வு சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெறும்.

சுனாமி அனர்த்தத்தின்போது வத்திராயன், மருதங்கேணி, தாளையடி, உடுத்துறை, ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆகிய இடங்களில் உயிரிழந்த 950 பேரின் உடல்கள் உடுத்துறையில் விசேடமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (50-190-236-224)

## திட்டமிடல் நடைமுறை தொடர்பான செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.25

ஒருங்கிணைக்கப்பட்ட உள்ளூர் திட்டமிடல் நடைமுறை தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வு ஒன்று யாழ்.மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளதாகவும், அந்த நிகழ்வு எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளதாகவும் வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி அறிவித்துள்ளார்.

மேற்படி நிகழ்வினை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆரம்பித்து வைக்கவுள்ளதாகவும் இதில் திணைக்களங்களின் பிராந்தியத் தலைவர்களைக் கலந்துகொள்ளுமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (50-288)

# எம் .ஜி.ஆர். நினைவு தின நிகழ்வுகள் முப்பெரும் விழாவாக யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.25

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சரும் பிரபல தென்னிந்திய நடிகருமான மக்கள் திலகம், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரின் 22 ஆம் ஆண்டுநினைவு நாளும் முன்னாள் அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவர் பொன்.மதிமுகராஜாவின் 11ஆம் ஆண்டு நினைவு தினமும், சுனாமி இயற்கை அனர்த்தத்தில் இறந்தவர்களின் 5ஆவது ஆண்டு நினைவு கூரல் நிகழ்வும் எதிர்வரும் 24,25,26 ஆம் திகதிகளில் முப் பெரும் விழாவாக இடம் பெறவுள்ளன. 24 ஆம் திகதி தாவடியில் உள்ள தலைமைச் செயலகத்தில் காலை 8 மணியளவில் எம்.ஜி. ஆரின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிப்பதுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். தொடர்ந்து அன்றைய தினம் குருநகர், பாசையூர் பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். சிலைக்கும் மாலை அணிவிக்கும் வைபவமும் நடைபெறும்.

25 ஆம் திகதி தாவடி ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி ஆலய முன்றலில் காலை 6 மணிக்கு விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகும். இதில் ஆண்களுக்கான 40 மைல் தூரத்துக்கான துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டி, பெண்களுக்கான 15 மைல் தூரத்துக்கான துவிச்சக்கரவண்டி ஓட்டப்போட்டி, 25 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியும், எட்டு மைல் மூன்று சில்லு ரிக்ஷோ ஓட்டப்போட்டியும், கழகங்களுக்கு இடையிலான கயிறு இழுத்தல் போட்டியும் நடைபெறும்.

26 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவைத் தலைவர் பொன். மதிமுகராஜா விஜயகாந் தலைமையயில் கலை நிகழ்வு இடம்பெறவுள்ளது. இதில் எம்.ஜி.ஆர். விருது வழங்கல், கவியரங்கம், பட்டிமன்றம், கரகாட்டம், வில்லிசை, மெல்லிசை அமுதம், தமிழிசைச்சட்ட மன்றத்தில் விவாதம் போன்ற நிகழ்ச்சிகளுடன் விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என்று அனத்துலக எம்.ஜி.ஆர். பேரவை விழா ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளர். (04-23)

# நெடுந்தீவுக்கான குடிதண்ணீர் சேவையை சீரமைக்க ஒரு மில்லியன் ரூபா நிதியுதவி

### சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் அதனை நிறைவேற்ற வேண்டுமென்கிறார் அரச அதிபர்

நல்லூர், டிசெ.25

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் நெடுந்தீவுக்கான குடிதண்ணீர் சேவையை சீரமைக்கக்கூடியதாக ரூபா ஒரு மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த வேலைத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டியது உள்ளூராட்சித் திணைக்களமும் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையுமே என யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் நெடுந்தீவுப் போக்குவரத்துக்கான புதிய படகு மற்றும் நீர்விநியோகத் திட்டம் சீரமைப்பு தொடர்பாக எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளப்பட்டதாக இல்லை எனப் பத்திரிகையாளர் மாநாட்டின்போது அரச அதிபரிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்குப் பதிலளிக்கையிலேயே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நீர் விநியோகத்திட்டம் குறித்து யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் கேட்டபோது உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தவை வருமாறு:

நெடுந்தீவு குடிதண்ணீர் விநியோகச் சேவைக்கென உதவி ஆணையாளர் கேட்டுக் கொண்டதற்கமைய வடக்கின் வசந்தம் திட்டத்தில் ஒரு மில்லியன் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள இயந்திரங்கள் காலங் கடந்ததால் பழுதடைந்துவிட்டன. குடிதண்ணீர் விநியோகத்தைச் சீராக்க வேண்டியுள்ளது. அதற்கு நிதியுதவி கிடைத்துள்ளது. தற்சமயம் இரண்டு மின் இயந்திரங்களும், ஒரு டீசல் இயந்திரமும் கொள்வனவு செய்யப்பட்டு நெடுந்தீவுக்குக் கொண்டு செல்லக்கூடிய தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. காலநிலை சீரின்மையால் அந்த இயந்திரங்களை நெடுந்தீவுக்குக் கொண்டு செல்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் அவற்றை விரைவில் கொண்டு செல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய இயந்திரங்கள் பொருத்தப்பட்டதும் 10 ஆண்டுகளுக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது என்றார். (50-111)

## தற்செயல் நிவாரண கொடுப்பனவு 30 ஆம் திகதி

யாழ்ப்பாணம்,டிசெ.25

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த நால்வருக்கு தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் பிரதேச செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொ.நாகேந்திரம் -மந்துவில் மேற்கு, வே. ஆனந்தபவான்-கைதடி மத்தி, த.சரோஜா-மட்டுவில் வடக்கு, இ.ஜெயக்குமார்- நாவற்குளி ஆகிய நால்வரும் எதிர்வரும் 30 ஆம் திகதி தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (50-207)

## தென்மராட்சிப் பாடசாலைகளில் இணைந்த இடம்பெயர்ந்த மாணவருக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.25

நலன்புரி நிலையங்களிலிருந்து வெளியேறி தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இணைந்த மாணவர்களுக்கு பாதணிகளும், காலுறைகளும், பேனாக்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டு வருகின்றன.

கனடாவில் வாழும் தமிழ் உறவுகள் அறவழி நிலையத்தின் ஊடாக இப்பொருள்களை மாணவர்களுக்கு விநியோகித்து வருகின்றனர்.

முதற்கட்டமாக தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., நாவற்காடு சைவப்பிரகாச வித்தி, குடமியன் அ.த.க. பாடசாலை, அல்லாரை அ.த.க.பாடசாலை, மிருசுவில் றோ.க. த.க. பாடசாலை, மிருசுவில் வடக்கு அ.த.க.பாடசாலை, கரம்பைக் குறிச்சி அ.த. க. பாடசாலை, வரணி வடக்கு அ.த.க.பாடசாலை, போக்கட்டி அ.த.க பாடசாலை, கெற்பேலி அ.த.க.பாடசாலை, விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம் ஆகிய 11 பாடசாலைகளில் இணைந்துள்ள 400 மாணவர்களுக்கு உதவிப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-207)




## மீளக் குடியமர்ந்த மக்களுக்கு உணவல்லாத பொருள்கள்

வடமராட்சி,டிசெ.25

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தோர்களில் ஒரு பகுதியினருக்கு அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனம் வாழ்வாதாரத்துக்குத் தேவையான உணவல்லாத பொருள்களைக் கடந்த புதன்கிழமை பருத்தித்துறை சிவன்கோயிலில் வைத்து வழங்கியது.

கூரை விரிப்பு, கத்தி, அலவாங்கு, வாளி, குளிக்கும் பேசன், கயிறு, பற் பசைகள், பல் துலக்கிகள், சோப் வகைகள், சவர அலகுகள் உள் ளிட்ட பல்வேறு பொருள்கள் வழங்கப்பட்டன.

பருத்தித்து றைப் பிரதேச செயலர் பிரிவில் ஜே/401, ஜே/402, ஜே/403 கிராம அலுவலர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்தோர்களுக்கே இந்தப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. (50-236)



கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமச் சுற்றாடலில் வெள்ளம் தேங்கி நிற்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




### ஜெனரல் பொன்சேகாவின் கருத்துக்களால்
# யுத்தக் குற்ற விசாரணை குறித்த சர்வதேச அழுத்தம் அதிகரிக்கும்
## முன்னாள் கடற்படைத் தளபதி சொல்கிறார்



கொழும்பு, டிச. 25

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா கூறிவரும் கருத்துகளால், இலங்கை மீதான யுத்தக்குற்ற விசாரணை தொடர்பான சர்வதேச அழுத்தம் அதிகரிக்கும் என்று முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னகொட தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவால் முன்வைக்கப்பட்டுள்ள யுத்தக் குற்றச்சாட்டால் இலங்கைப் படையினர் பெரிதும் பாதிக்கப்படக்கூடும் எனவும் வசந்த கரன்னகொட தெரிவித்துள்ளார்.

இது இலங்கைப் படையினர் ஐக்கிய நாடுகளின் அமைதிப் படையில் அங்கம் வகிக்கக்கூடிய சந்தர்ப்பதை இழக்க வழி செய்வதோடு, இலங்கைப் படையினர் வெளிநாடுகளில் சென்று பயிற்சி பெற்றுக்கொள் ளும் சந்தர்ப்பத்தையும் இழக்கச் செய்யலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவின் இச்செயற்பாடானது பல பிளவுகளை ஏற்படுத்தியுள்ளதோடு, சர்வதேச யுத்தக்குற்ற மீறல்களுக்கான விசாரணைகளுக்கான அழுத்தங்களை அதிகரிக்க வழி வகுத்துள்ளது எனவும் முன்னாள் கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் இராணுவக் கடமைக் காலத்திலேயே முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவும் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (சி)

### காந்திய சிந்தனைக் கருத்தரங்கு நாளை மறுதினம் கொழும்பில்

யாழ்ப்பாணம், டிசெ.25

கொழும்பு அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட் டில் காந்திய சிந்தனைக் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் விரிவுரை மண்டபத்திற்கு அருகாமையில் உள்ள மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத் துணைத் தலைவர் ஆ.வடிவேலு தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், மதுரை சர்வோதய இதழ் பதிப்பாசிரியர் மு.மாரியப்பன் 'உலக மயமாக்கல் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், சர்வோதய கோட் பாடுகளும், தீர்வுகளும் என்னும் தலைப்பிலும் காந்தி கிராம பல்கலைக்கழகப் பேராசிரியர் ச.நாரர்யணசாமி சத்தியவாழ்வு என்னும் தலைப்பிலும் உரை நிகழ்த்தவுள்ளனர். (50-204)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்லப்பா நல்லதம்பி

மலர்வு 16★02★1918 உதிர்வு 05★01★2009

திதி: 25.12.2009

உத்தம புத்திரனாக
நற்குண புருஷனாக
பாசமுள்ள தந்தையாக, மாமனாக
பேரனாக, பூட்டனாக
எம்முடன் வாழ்ந்து
இறையடி சேர்ந்த
எம் அன்புத் தெய்வம்
உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை. (91767) குடும்பத்தினர்.

## KIACARENS MOTOR CAR விற்பனைக்குண்டு

WPJOxxxx இலக்கமுடைய, பெற்றோலில் இயங்கக்கூடிய, பாவனையிலுள்ள KIACARENS MOTOR CAR விற்பனைக்குண்டு. விலை 1.8 மில்லியன் (விலை பேசித் தீர்மானிக்கப்படும்)

தொடர்பு: 0773121310 (85446)

## வீடு வாடகைக்குத் தேவை

5 அங்கத்தவர்களைக் கொண்ட சைவக்குடும்பம் ஒன்றிற்கு மாநகர சபை எல்லைக்குள் அல்லது அதற்கு அண்டிய தூரத்தில் வீடு வாடகைக்குத் தேவைப்படுகின்றது.

தொடர்புகளுக்கு: 077 8575106, 021 3217055

## நிர்வாகத்தெரிவு

வேலணை வர்த்தகர் சங்கத்தில் கடந்த 18.12.2009 அன்று நடைபெற்ற கூட்டத்தில் புதிய நிர்வாகத்தினர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதன்படி முன்னாள் வர்த்தகர் சங்கத் தலைவர் வே.திருநாவுக்கரசு தலைவராகவும், சிவகுமார் லக்ஷன் செயலாளராகவும் கணபதிப்பிள்ளை அருளானந்தம் பொருளாளராகவும் ஏகமனதாக சபையோரினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

செயலாளர், வேலணை வர்த்தகர் சங்கம்.

## கார் விற்பனைக்கு

GS XXXX தொடர் இலக்கம் கொண்ட Nisan march K 11 கார் மற்றும் Bajaj Scooter உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0213007030
0777732863

## ஈராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 07 1968



மறைவு 18 12 2007

அமரர் இராசலிங்கம் லிங்கேஸ்வரன்

ஆண்டிரண்டு ஆனதப்பா ஆறுதில்லை மனம்
ஆறுதல் தந்திட ஆயிரம் உறவுகள்
தேறுதில்லை எங்கள் உள்ளம்
தேடுகின்றோம் உங்களையே
திருவெம்பாவை நாளில் சிவன் திருவடி சேர்ந்தீர்கள்,
வேண்டுகின்றோம் பலமுறை
உங்கள் ஆத்மாவின் சாந்திக்காக.....

(97768)

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு. மனைவி, பிள்ளைகள்.

## வினைத்திறமை காண் தடைப் பரீட்சை

கைதடி, டிசெ.25

வடக்கு மாகாணத்திலுள்ள சமூக சேவை அலுவலர், கலாசார உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமை உதவியாளர்(கைத்தொழில்) பதவியில் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறமை காண் தடைப்பரீட்சையும் , பதவியில் உறுதிப்படுத்தல் பரீட்சையும் (2008) மற்றும் 1999ஆம் ஆண்டு மாகாண அரசாங்க அபிவிருத்தி உதவியாளர், நிதித்திட்டமிடல் உதவியாளர், மருத்துவ ஆவணக் காப்பாளர், பாடசாலை முகாமைத்துவ உதவியாளர், உள்ளூராட்சி உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கான 2ஆம் வினைத்திறமை காண் தடைப்பரீட்சையும் (2009) இம்மாதம் 27ஆம், 28ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளில் நடைபெறுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும், இதற்கான அனுமதி அட்டைகள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (50-283)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் துரையப்பா நீலோற்பலம்

தோற்றம் 05★05★1932

மறைவு 25★11★2009

திதி: நவமி

கடந்த 25.11.2009 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு அமரர் துரையப்பா நீலோற்பலம் அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று 25.12.2009 வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
மட்டுவில் கிழக்கு, தர்சினி-பாலசுந்தரம்
சாவகச்சேரி. (சி/563477) (டென்மார்க்).

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 ★ 05 ★ 1922



மறைவு 18 ★ 12 ★ 2007

திருமதி சின்னம்மா குமாரரத்தினம்

திதி: நவமி (25.12.2009)

அன்பாலும் பண்பாலும்
அனைவரையும் அரவணைத்து
எம்மை சிறப்பாக வாழவைத்த அம்மாவே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மைவிட்டு அகலாது
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்.....

42/9, கோணாவளை வீதி, பிள்ளைகள், மருமக்கள்,
கொக்குவில் கிழக்கு கொக்குவில். (91761) பேரப்பிள்ளைகள்.

## ஓராண்டு நினைவலைகள்



அமரர்

சின்னட்டிப்பிள்ளை திரவியம் (J.P)

B.A. Dip. in. Edu. Tesl

(ஓய்வுபெற்ற உப அதிபர், யா/தேவரையாளி இந்துக்கல்லூரி)

மண்ணில் 09.10.1931

விண்ணில் 25.12.2008

பட்டங்கள் பல பெற்று பார்போற்ற வாழ்ந்த உத்தமரே!
சிரித்த முகத்தோடு சிந்தித்துச் செயலாற்றும் திறன் படைத்தவரே!
சமாதான நீதிவானாய் சமூக சேவை புரிந்தவரே
உங்கள் எழில் கொண்ட எடுப்பான தோற்றமும் மறைந்ததுவோ ?

பிள்ளைகளின் படிப்பிற்காய் பெரும்பாடுபட்டு
வைத்திய கலாநிதியையும் பொறியியலாளரையும் உருவாக்கி
சொத்துக்கள் பலதேடி சுகமாய் எமை வாழ வைத்தீர்
ஆங்கில மொழிநடைக்கு அருமையான வழிகாட்டிய உங்களை
எப்பிறப்பில் காண்போம் அப்பா இனி உங்களை
எம் இதயக் கவலையை அடக்கி உங்கள் ஆத்ம சாந்திக்காய் வேண்டுகின்றோம்.

செல்லம் பூங்கா,
[illegible]
[illegible] (சி/563484) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி; நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

தேசிய கல்வியியற் கல்லூரிக்கான 2010 ஆம் கல்வியாண்டுக்கு நாடகமும் அரங்கியலும், நடனம், சங்கீதம் ஆகிய பாடநெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் விவரம் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முதலாம் மொழி பாடநெறிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளோரின் விவரம் தர்காநகர் தேசிய கல்வி யிய்ற் கல்லூரியால் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் ஜனவரி மாதம் 2ஆம், 3ஆம் திகதிககளில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் இடம்பெறுமென பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோரின் ஒரு தொகுதி விவரம் நேற்றைய உதயனில் பிரசுரமாகியது. அதன் மிகுதி இன்று பிரசுரமாகின்றது.

**மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் விவரம் வருமாறு:**

*நடகமும் அரங்கியலும்*

ஆர்.பாலசுப்பிரமணியம் (கோப்பாய் மத்தி), எம்.நிரோஜன் (கோப்பாய் மத்தி), என்.நித்தியானந்தன் (சண் டிலிப்பாய்), ஜே.ஜனந்தன் (வியாபாரி மூலை), என்.எஸ்.அழகையா (துன்னாலை வடக்கு), என்.விஜிதரன் (அல்வாய்), எம்.ஏ.எல்.ராஜி (சில்லாலை தெற்கு), எஸ்.பத்மநாதன் (சுழிபுரம்), எல்.ரஞ்சனராஜி (புத்தூர் வடக்கு), பி.சுபத்திரா (இமையாணன் கிழக்கு), ரி.தியாகராஜா (வட்டு. தெற்கு), வி.யசோதா (நாகர்கோயில் தெற்கு),

கே.அர்ஜினி (கரவெட்டி தெற்கு), ஏ.ஜெயகுணம் (செல்வாபுரம்), வி.ஜெயராஜா (அளவெட்டி மேற்கு), வை.சுதர்சன் (சண்டிலிப்பாய் மேற்கு), ஏ.டொமினிக்நீகன் (பருத்தித்துறை), ரி.சயானா (உடுவில் கிழக்கு), ஆர்.துஷா (கரவெட்டி தெற்கு), எஸ்.சிந்துராய் (கரவெட்டி, மேற்கு), எஸ்.அனுசா (தொட்டிலடி), ஐ.பரமேஸ்வரன் (நெல்லியடி), எஸ்.தேவகுமார் (கோப்பாய் மத்தி), கே.பிரசாளினி (வட்டு. மேற்கு), பி.பவித்திரா (வதிரி), பி.தமிழினி (அல்வாய் மேற்கு), ஆர்.ஜனனி (அம்பன்),

ரி.காளிதாஸ் (அளவெட்டி தெற்கு), கே.காந்தசபேசன் (அம்பன்), எஸ்.மகியா (சண்டிலிப்பாய் வடக்கு), கே.கே.சிந்துஜா (கைதடி), எஸ்.சங்கீதா (அராலி வடக்கு), ரி.சஜீவன் (அளவெட்டி மத்தி), என்.தம்பிப்பிள்ளை (களபூமி), எம்.பிரதீபன் (தெல்லிப்பழை), ஆர்.சுமணா (பொலிகண்டி), ஏ.நிரூசன் (பருத்தித்துறை), என்.சத்தியேந்திரா (மிருசுவில் வடக்கு), வி.செந்தூரன் (தும்பளை), தே.காலிந்தநாராதணா (வல்வெட்டி), எஸ்.சாலினி (அளவெட்டி வடக்கு),

எஸ்.டயஸ் (மல்லாகம்), வி.பார்த்தீபன் (மல்லாகம்), என்.புஸ்பராசா (சித்தங்கேணி), ஆர்.அஜன் (தெல்லிப்பழை), எஸ்.சுதாகரன் (குப்பிளான் வடக்கு), கே.மீரா (கரவெட்டி கிழக்கு), ஏ.மதிகிருபா (ஏழாலை மத்தி), ரி.கஸ்தூரி (கரணவாய் வடக்கு), எம்.செந்தூரன் (அளவெட்டி வடக்கு), கே.சரண்யா (சண்டிலிப்பாய்), வி.ஜிந்துஜா (சண்டிலிப்பாய் மேற்கு), எஸ்.கபிலினி (அளவெட்டி வடக்கு), எம்.சிவதர்சன் (புலோலி வடக்கு), ஜி.தமிழினி (அல்லைப்பிட்டி), எஸ்.அஜந்தன் (நவாலி தெற்கு), ரி.லக்ஸ்மன் (இளவாலை), வி.மிருசியா (வட்டு.தெற்கு), எம்.ரவிசாந் (அரியாலை மேற்கு), ஜே.பாலச்சந்திரன் (நீர்வேலி வடக்கு),

பி.நிரோஜினி (சண்டிலிப்பாய் வடக்கு), கே.கிரிதரன் (வேலணை), யு.சிவராஜா (சுழிபுரம் மேற்கு), எஸ்.தங்கராசா (சண்டிலிப்பாய் வடக்கு), என்.வீரசிங்கம் (கைதடி மத்தி), ஜே.டபிள்யூ.மேனகா (சுன்னாகம்), எம்.சஜிதா (தொல்புரம் மேற்கு), பி.செல்வராஜா (நீர்வேலி வடக்கு), ஜி.தர்சினி (புலாலி வடக்கு), எஸ்.றஜீவனா (கரணவாய் வடக்கு), வி.ரகுபரன் (தொல்புரம் மேற்கு), எச்.யோகநாதன் (வட்டு.தெற்கு), கே.யோகநாதன் (வட்டு.தெற்கு), கே.கோபி (அல்வாய் மேற்கு), கே.கே.வாகீசன் (அராலி தெற்கு), சி.செல்வரதி (நெல்லியடி கிழக்கு), வி.சுரேகா (சண்டிலிப்பாய்), எம்.ஜெகாதரன் (தெல்லிப்பழை), கே.பிரதீபன் (மீசாலை வடக்கு), ரி.விசோபன் (கரணவாய் தெற்கு), கே.சுதர்சன் (தெல்லிப்பழை கிழக்கு), என்.லபாகரன் (வேலணை கிழக்கு), கே.ரூபிதா (இமயாணன் மேற்கு),

வி.தாரகா (இமயாணன் மேற்கு), எம்.மதியழகன் (ஏழாலை மத்தி), எஸ்.துசிதா (அல்வாய் தெற்கு), வி.நந்தினி (வட்டு.வடக்கு), வி.துஷ்யந்தன் (அல்வாய்), ரி.தனுசுயா (சண்டிலிப்பாய்), எஸ்.சபரிதரன் (பன்னாலை), கே.தர்மதாசன் (சண்டிலிப்பாய் மேற்கு), எஸ்.அனுரகன் (தெல்லிப்பழை கிழக்கு), ரி.துளசி (வட்டு.கிழக்கு), வி.சயந்தன் (சண்டிலிப்பாய் வடக்கு), எஸ்.நிஷாந்தன் (விடத்தற்பளை), ஜி.குணசேகரன்(தெல்லிப்பழை), எஸ்.நிசாந் (அல்வாய்), பி.மருதலிங்கம் (மானிப்பாய்), ரி.மகாலிங்கம் (வடலியடைப்பு), கே.ஜெயதர்சன் (அல்வாய்), ஈ.மதனீசன் (பன்னாலை), எம்.சபாநாயகம் (இணுவில் தெற்கு), எஸ்.கஜந்தி (சுன்னாகம் மேற்கு), ஈ.துவாரகன் (அல்வாய் தெற்கு), கே.தாட்ஷாயனி (நெல்லியடி), கே.காந்தன் (கரவெட்டி தெற்கு), பி.சுபாஜினி (அளவெட்டி கிழக்கு), எம்.துஷ்யந்தன் (குப்பிளான் வடக்கு),

வை.மகேந்தினி (உரும்பிராய் கிழக்கு), வை.எல்.சுரேந்தர் (குருநகர்), எஸ்.ஜெனார்த்திகா (மானிப்பாய் மேற்கு), எம்.நிசுதர்மன் (வண்ணார்பண்ணை), வி.விக்ரர் (குருநகர்),எம்.ராஜினி (இளவாலை), எஸ்.ஜனார்த்திரி (சாவகச்சேரி), ஜெ.பூரணி (புலோலி கிழக்கு), எஸ்.வரலக்ஸ்மி (தெல்புரம் மேற்கு), வை.ரோகிணி (சுழிபுரம்), ஜெ.செல்வராசா (சண்டிலிப்பாய்), ஜெ.கிருஷ்ணகுமார் (சித்தங்கேணி), எஸ்.கிருஷாந்தினி (இள்வாலை), எஸ்.ஜெயலக்ஸ்மி (சுழிபுரம் மத்தி), ரி.நிர்மலகாந் (கொழும்புத்துறை),

பி.நடராசா (சுழிபுரம் கிழக்கு), எஸ்.பரணிகா (மல்லாகம்), எஸ்.குலசிங்கம் (நீர்வேலி வடக்கு), ஏ.நேசிரா (ஊரெழு மேற்கு), எஸ்.கௌசலா (உடுவில்), வி.விக்னராஜ் (கம்பர்மலை), ஆர்.தர்மதேவன் (சுழிபுரம் மத்தி), ஜே.கேமவாசன் (சித்தங்கேணி), பி.சின்னத்துரை (கோப்பாய் தெற்கு), ஆர்.முகுந்தன் (நீர்வேலி வடக்கு), ரி.நிருசாந் (இமயாணன் மேற்கு), ரி.றஜிதா (ஏழாலை தெற்கு), ரி.இளநோதீஸ்வரன் (பண்டத்தரிப்பு),

கே.மோகனா (கட்டுடை), கே.எல்.எம்.றொபேட் (சுன்னாகம்), எஸ்.மகிந்தன் (சுன்னாகம்),என்.தனுசியா (கோண்டாவில் மேற்கு), ஈ.ஆர்.கே.கொடிகாமம் (கோகிலாமனை), யு.றஜீபன் (கந்தரோடை), என்.ஆதீபா (பொலிகண்டி), எஸ். வேலங்கயன் (வேலணை கிழக்கு), கே.நிரோஜலா (கரவெட்டி தெற்கு).

*நடனம்*

கே.ராசகுமாரன் (சங்கானை), எஸ்.அன்னலிங்கம் (சங்கானை), என்.ஸ்ரீகாந்தன் (சரசாலை தெற்கு), எம்.திவ்யா (இணுவில் மேற்கு), ஏ.பரமநாதன் (பண்டத்தரிப்பு), கே.சோதிராசா (மானிப்பாய் வடக்கு), ஈ.இராஜகுமார் (இருபாலை தெற்கு), ரி.பாலசுப்பிரமணியம் (மூளாய்), ஏ.காங்கேயநாதன் (யாழ்ப்பாணம்), ஐ.சுப்பிரமணியம் (சாவகச்சேரி), என்.சிவஞானம் (சாவகச்சேரி), டபிள்யூ.ஜான்சியா (அரியாலை), எஸ்.சைலஜா (கல்வியங்காடு), ஆர்.சுரேந்தினி (நெல்லியடி வடக்கு), என்.நிரோஜி (வரணி),

என்.பிரசாந்தினி (அரியாலை), எஸ்.வல்லிபுரம் (சுதுமலை வடக்கு), என்.குணராஜா (மானிப்பாய்), ஆர்.ரத்தினராஜா (நவாலி தெற்கு), எஸ்.ஜார்மிலா (வரணி), பி.இராசகுமார் (உடுவில் தெற்கு), எல்.லோகேந்திரம் (சுன்னாகம் தெற்கு), ரி.தவரத்தினம் (மாதகல்), எஸ்.சிவசுப்பிரமணியம் (இணுவில் கிழக்கு), வி.தியாகராஜா (திருநெல்வேலி மேற்கு), எம்.ஏ.பி.ஜெயராசா (இளவாலை), பி.தர்மகுலசிங்கம் (தாவடி தெற்கு), எஸ்.பத்மசீலன் (பண்டத்தரிப்பு), ஜி.ஜெகதீஸ்வரன் (சுழிபுரம் மேற்கு), எஸ்.நித்தியானந்தன் (கந்தரோடை), எம்.சண்முகநாதன் (கல்வியங்காடு), ரி.முரளிதரன் (அராலி தெற்கு), எம்.நடராசா (சுழிபுரம்), என்.நர்மதா (இணுவில் கிழக்கு),

கே.மனோகரன் (நவாலி கிழக்கு), ரி.பொன்ராஜன் (வதிரி), என்.குகநந்தன் (வண்ணார்பண்ணை), எம்.பிருந்தா (வரணி), எம்.செல்வராஜா (சங்கானை), ஜே.பரமானந்தம் (கந்தரோடை), எஸ்.சிந்துஜா (ஆனைக்கோட்டை), எஸ்.ஜெயக்குமார் (நல்லூர் கிழக்கு), கே.செல்வரத்தினம் (நல்லூர் கிழக்கு), ஆர்.டி.சோபனா (நவாலி தெற்கு), கே.பிரேமரத்னம் (பருத்தித்துறை), பி.கதிரமலை (வட்டு. கிழக்கு), எஸ்.சுகன்யா (வேலணை மேற்கு), எஸ்.மணிராசா (உடுவில் தெற்கு), எஸ்.பவேந்திரன் (மல்லாகம்), ஏ.சவுந்தரதாசன் (நவாலி தெற்கு).

*சங்கீதம்*

எஸ்.பத்மநாதன் (யாழ்ப்பாணம்), பி.குலசேகரம் (பாண்டியன் தாழ்வு), ஜே.திருஞானம் (மீசாலை கிழக்கு), கே.அனுசியா (கிளிநொச்சி), ரி.விஜிதா (யாழ்ப்பாணம்), எஸ்.சிறீஸ்கந்தராசா (கோப்பாய் தெற்கு), ஏ.தாரணி (சாவகச்சேரி), ஆர்.பாலசுப்பிரமணியம் (கோப்பாய் மத்தி), வி.தங்கராசா (நீர்வேலி வடக்கு), கே.கிருஸ்ணானந்தன் (அல்வாய் தெற்கு), எஸ்.ஜெகதீஸ்வரன் (கோப்பாய் வடக்கு), வை.செல்வராஜா (காரைநகர்), ஜே.ஜோகநாதன் (தொல்புரம் கிழக்கு), ஆர்.கோபாலசிங்கம் (சுதுமலை தெற்கு), வை.அமிர்தராசா (நுணாவில்), ஜே.தவராசா (ஊரெழு மேற்கு), எஸ்.யோகராஜா (நீர்வேலி வடக்கு), கே.சிவராஜினி (மாதகல்), எஸ்.சின்னவன் (மிருசுவில்), சி.சவுந்தரி (சுன்னாகம்), கே.கதிரவேலு (கரவெட்டி மேற்கு), பி.செந்தூரன் (கொடிகாமம்), ரி.மகேந்திரன் (யாழ்ப்பாணம்), எஸ்.ஜெயக்குமார் (யாழ்ப்பாணம்), கே.யோகேஸ்வரன் (மானிப்பாய்), என்.சோபினி (சண்டிலிப்பாய் மேற்கு),

கே.தியாகராசா (மாதகல் வடக்கு), ஆர்.ரவி (நீர்வேலி வடக்கு), எஸ்.கதிரமலை (கோப்பாய் தெற்கு), எஸ்.வினுசா (யாழ்ப்பாணம்), என்.ஞானச்சந்திரன் (கோப்பாய் வடக்கு), பி.சந்திரபாலன் (கொக்குவில் மேற்கு), ஜி.எழிலரசி (இணுவில் கிழக்கு), எஸ்.வைத்தீஸ்வரசர்மா (அளவெட்டி தெற்கு), ரி.கந்தசாமி (கரவெட்டி கிழக்கு), எம்.ஜெயராஜசிங்கம் (சங்கானை), ரி.செல்வராஜா (புலோலி மத்தி), ஜே.ஜெயரூபினி (மயிலிட்டி வடக்கு), ரி.இராசலிங்கம் (அராலி வடக்கு), எஸ்.குலராஜசிங்கம் (குடத்தனை கிழக்கு), கே.எதிர்வீரசிங்கம் (பண்ணாகம் தெற்கு), பி.பாலசுப்பிரமணியம் (வேலணை மேற்கு), என்.விஜயரத்தினம் (தொண்டைமானாறு), ஆர்.சாளினி (கோப்பாய் மத்தி), ஏ.ராஜதகிரீசன் (சுன்னாகம்), எஸ்.சிவசுப் பிரமணியம் (இயற்றாலை), ஆர்.சடாட்சரம் (காரைநகர்).

**தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் விவரம் வருமாறு:**

*முதலாம் மொழி*

எஸ்.றொபின்ராஜ் (கட்டைக்காடு), ஜே.ஜன்ஸ்ரன் (நவாலி தெற்கு), எஸ்.செல்லத்துரை (கூழாவடி), கே.யதுப்பிரியா (யாழ்ப்பாணம்), பி.தர்சிகா (திருநெல்வேலி கிழக்கு), ஆர்.ரமணன் (அல்வாய் வடக்கு), கே.தேவாகினி (கொற்றாவத்தை), என்.பிருந்தா (புலோலி தெற்கு), ரி.கிருத்திகா (இமையாணன்), எஸ்.சுஜீவன் (அச்சுவேலி), ரி.மயூரன் (சங்கானை மேற்கு), எம்.இராசரத்தினம் (அச்சுவேலி தெற்கு), சி.வி.கிறிஸ் தோப்பர் (குருநகர்), ஜே.பிறின்சி (நெடுந்தீவு), பி.ராதிகா (வேலணை மேற்கு), ரி.நிசாந்தினி (அல்வாய் கிழக்கு), எஸ். ஆனந்தராஜா (ஆவரங்கால்), எம்.யோ செப்கென்சன் (சுண்டுக்குளி).



நீர்வேலி ஸ்ரீ கணேசா சனசமூக நிலையத்தின் வைரவிழா, ஸ்ரீகணேசா முன்பள்ளியின் வெள்ளிவிழா நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட படங்கள். சனசமூக நிலையத்தின் தாபக உறுப்பினருள் ஒருவரும் ஆங்கில ஆசிரியருமான த.ந.பஞ்சாட்சரம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரு படங்களிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி செந்தகுமாரிடமிருந்து ‘ஸ்ரீ [illegible] ...செழு சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் ச.வேலழகன் பெற்றுக் கொள்வதையும், நிகழ்வில் கலந்து கொண்ட [illegible] டுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்:- கோப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த மாதத்தில் மாத்திரம் அலரிமாளிகையில் ஒரு கோடி 30 லட்சம் ரூபாவுக்கு அன்னதானம்

## மதுபானச் செலவு இதில் உள்ளடங்கவில்லையாம்



கொழும்பு, டிசெ. 25

கடந்தமாதம் அலரி மாளிகையில் ஒரு கோடி 30 லட்சம் ரூபாவுக்கு விருந்துபசாரம் நடத்தப்பட்டிருக்கின்றது என்று மங்கள சமரவீர நேற்று முன்தினம் கூறினார்.

மதுபானச் செலவு இத்தொகையில் உள்ளடக்கப்படவில்லை என்றும் அதற்கான ரசீது தமது கையில் இன்னும் கிட்டவில்லை என்றும் அவர் மேலும் கூறினார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

சரத் பொன்சேகாவின் கூற்றால் படையினர் வெளி நாடுகளுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று அரசு கூறியது. அப்படியானதொரு நிலையை ஏற்படுத்திய வர் மஹிந்ததான்.

சரத் பொன்சேகா கூட்டுப்படைகளின் தளபதியாக இருந்தபோது ஹவாயில் நடந்த இராணுவக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்கு அமெரிக்கா பொன்சேகாவிற்கு அழைப்பு விடுக்க மறுத்தது.

அதேபோல் பாலித கோஹன்னவிற்கு வீஸா வழங்க இங்கிலாந்து மறுப்புத் தெரிவித்தது. ஆளுநர் அலவி மௌலானாவின் உறவினர்கள் வெளி நாடு செல்வதற்கு வீஸா மறுக்கப்பட்டது.

மஹிந்தவின் அரசு அகதிகளை மோசமாக நடத்தியதன் கரணமாகவே இந்நிலை ஏற்பட்டது. ஜெனரலின் கூற்றால் வெளி நாடுகளில் எமது படையினருக்கு எதுவித ஆபத்தும் ஏற்படவில்லை.

இந்த அரசால் 'ஜி.எஸ். பி. பிளஸ்' வரிச்சலுகை யைக் கூடத் தக்கவைக்க முடியவில்லை. நாம் ஆட்சிக்கு வந்ததும் அதைத் தக்கவைக்க நடவடிக்கை எடுப்போம்.

அலரி மாளிகை இப்போது அன்னதானம் வழங்கும் இடமாக மாறியுள்ளது. கடந்த மாதம் மாத்திரம் அங்கு ஒரு கோடி 30 லட்சம் ரூபாவுக்கு அன்னதானம் வழங் கப்பட்டுள்ளது.

மதுபானச் செலவு இன்னும் தெரியவில்லை. அதற் கான ரசீது இன்னும் எமது கைகளில் கிட்டவில்லை. நாட்டில் உள்ள 50 வீதமான மதுபான சலுகைகளில் நீலக் கொடிகள்தான் தொங்கவிடப்பட்டுள்ளன. மதுபான சாலை உரிமையாளர்களின் விருப்பத்திற்குரியவராக மஹிந்த ராஜபக்ஷ மாறியுள்ளார் - என்றார்.

(சி)




# மேற்குலக நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து பொன்சேகாவை தாக்குகிறாராம் மஹிந்த

## ஜே.வி.பியினர் குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 25

ஜெனரல் சரத் பொன்சேகா சண்டே லீடர் பத்திரிகைக் குத் தெரிவித்த கருத்தைத் திரிபுபடுத்திக்கொண்டு மேற்குலக நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜெனரல் சரத் பொன்சேகாவைத் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஜெனரல் சரத் பென்சேகா சண்டே லீடர் பத்திரிகைக் குத் தெரிவித்த கருத்தைத் திரிபுபடுத்திக்கொண்டு அரசு பொன்சேகா மீது தாக்குதல் நடத்தத் தொடங்கியுள்ளது. அந்தக் கருத்தை பொன்சேகா மறுத்துள்ள போதிலும் அரசு வேண்டுமென்றே அவர் மீது தாக்குதல் நடத்துகின்றது.

பொன்சேகாவின் கூற்றுத் தொடர்பாக அரசு விளக்கம எிக்க வேண்டும் என்று ஐ.நா. சபை அரசிடம் வேண்டுகேள் விடுத்துள்ளது. இதை அடிப்படையாக வைத்து அரசு பொன்சேகா மீது தாக் குதல் நடத்துகிறது.



மேற்குலக நாடுகளுடன் சேர்ந்து பொன்சேகா மஹிந்தவுக்கு எதிராகச் சதி செய்கின்றார் என்று அரசு கூறுகின் றது. அது உண்மையென்றால் ஐ.நா. சபை, அரசிடம் விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பியிருக்காது. இந்தக் கடிதம் அரசுக்குத் தானே வாசியாக அமைந்துள்ளது. மேற்குலகம் பொன்சேகாவுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக இருந் திருந்தால் இந்த விடயத்தைப் பெரிதுபடுத்தியிருக் காது.

ஆனால், பொன்சேகா 'சண்டே லீடரில்' வந்த செய்தியை மறுத்துவிட்டார் என்று அரசே சர்வதேச நாடுகளி டம் கூறுகின்றது. அவ்வாறு கூறிக்கொண்டு உள்நாட்டில் பொன்சேகா வுக்கு எதிராகப் பேசுகின் றது. படையினரைக் காட்டிக்கொடுத்து விட் டார் என்று நாட்டு மக்களிடம் கூறுகின்றது. இது பொன்சேகாவுக்கு எதிரான திட்டமிட்ட சதி என்பது நன்றாகத் தெரி கின்றது- என்றார்.

(சி)

# நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து பணத்தை இழந்தோருக்கு நட்ட ஈடு

## உறுதியளிக்கிறார் சரத்பொன்சேகா

கொழும்பு, டிசெ.25

தாம் ஜனாதிபதியானதும் நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து பணத்தை இழந்தவர்களுக்கு அதனை மீண்டும் பெற்றுத்தருவார் என்று ஜனாதிபதி வேட்பாளர் சரத்பொன்சேகா நேற்று முன்தினம் உறுதியளித்தார்.

நிதி நிறுவனங்களில் முதலீடுசெய்து பணத்தை இழந்தவர்கள் பலரை பொன் சேகா நேற்று முன்தினம் அவரது காரியாலயத் தில் சந்தித்து உரையாடியபோதே இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் பணவீக்கம் அதிகரித்து ரூபாவின் பெறுமதி குறைந்துள்ளது. பொருளா தார நிர்வாகம் சீர்குலைந்துள்ளமையே இதற்குக் காரணம்.

நிதி நிறுவனங்களில் முதலீடு செய்து பணத்தை இழந் தவர்களின் பணத்தை அரசால் மீளப் பெற்றுக்கொடுக்க முடியா மைக்கும் நிர்வாகச் சீர்கேடே காரணம்.

இழந்த நிதியை சம்பந்தப்பட்டவர்களிடம் பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக நிதி நிறுவன உரிமையாளர்களை மிரட்டித் தமக்குத் தேவையானதை அரசு அவர் களிடமிருந்து பெற்றுக் கொண்டது.



நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டு இழக்கப்பட்ட பணம் இந்த நாட்டை விட்டுப் போகவில்லை. நாட்டுக்குள்ளே தான் சுற்றுகிறது. நல்லதொருமுறைமையை உரு வாக்கினால் இப்பணத்தை உரியவர்களிடம் பெற்றுக்கொடுக்க முடியும்.

நான் ஜனாதிபதியானால் இந்த விடயத்தில் என்னால் உதவ முடியும். இதில் ஆழமாகத் தலையிட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பேன்.

இது தொடர்பாகப்பாதிக்கப்பட்டவர் கள் முறைப்பாடு செய்வதற்கும் ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கும் நான் எனது அலுவலகத்தில் ஒரு பிரிவைத் திறப்பேன்-என்றார்.

(சி)

# இராணுவத்தில் இருந்த காலத்தில் தண்டிக்கப்பட்டவராம் பொன்சேகா

## அவர் மீது அரசு வசைமாரி

கொழும்பு, டிசெ. 25

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா இராணுவத்தில் பணி புரிந்த காலத்தில் சட்டவிரோத செயற்பாடுகளுக்காக தண்டிக்கப்பட்டவர் என அரசு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற செய்தி யாளர் மாநாட்டில் தகவல் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ் மன் யாப்பா அபேயவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

முன்னாள் இராணுவத் தளபதி சிறில் ரணதுங்கவின் கீழ் பணிபுரிந்தவேளை, ஜெனரல் சரத் பொன்சேகா சட்டவிரோத செயல்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்.

இராணுவத் தளபதியாகப் பதவி வகிப்பதற்கு முன்னர் 'விசிஸ்ட் சேவ் விபூஷண விருதை' பெறாத தளபதி சரத் பொன்சேகா மாத்திரமே. தளபதியானதும் அவர் தனக்குத்தானே அந்தப்பட்டத்தைச் சூடிக் கொண்டார்.



சரத் பொன்சேகாவை அவமானம் செய்தது அரசு அல்ல. தற்போது அவர் சார்ந்திருக்கும் எதிர்க்கட்சியினரே அவரை அவ மதித்தனர்.

'லக்பிம' செய்தித்தாளுக்கு 2008 நவம்பரில் வழங்கிய பேட்டியில் மங்கள சமரவீர இரட்சண்ய சேவைக்குக்கூட தலைமை தாங்குவதற்குத் தகுதியற்றவர் சரத் பொன்சேகா எனக் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவிடம் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி முன்னணிக்கு வந்தவர் சரத் பொன்சேகா என்றும் அவர் தெரிவித்திருந்தார். (சி)

# சுதந்திரமான – நீதியான முறையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்

## மதகுருமாரிடம் ஆணையர் உறுதி

கொழும்பு. டிசெ. 25

எதிர்வரும் ஜனவரி மாதம் 26ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமானதும், நீதியானதுமான முறையில் நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் மதகுருமார்களிடம் உறுதியளித்துள்ளார்.

சர்வமத குருமார்களுக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

சுதந்திரமானதும், நியாயமானதுமான முறையில் தேர்தல்களை நடத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தேர்தல் ஆணையாளர் விளக்கமளித்துள்ளார்.

இதேவேளை, சுவரொட்டிகள் மற்றும் கட் அவுட்களை அகற்றிய தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் இன்னமும் செலுத்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தொழிலாளர் கொடுப்பனவிற்கான நிதியை அரசு இன்னமும் ஒதுக்கவில்லை எனவும், சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள சகல கட் அவுட்கள் மற்றும் சுவரொட்டிகளும் அகற்றப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

சகல ஜனாதிபதி வேட்பாளர்களுக்கும் அரச ஊடகங்களில் சம அளவிலான சந்தர்ப்பம் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக அரச தொலைக்காட்சியில் அனைத்து வேட்பாளர்களுக்கும் தலா 90 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

மோசடி இடம்பெறக் கூடிய வாக்குச் சாவடிகளில் மேலதிக பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி சந்திப்பில் பெல்லன்வில விமலரதன தேரர், இத்தேபானே தம்மாலங்கார தேரர், தினியாவெல பாலித தேரர், பிராமனவத்தே சீவலி தேரர், பேராயர் துலிப் டி சிக்கேரா, வணக்கத்திற்குரிய பிதா டேமியன் பெர்னாண்டோ மற்றும் முஸ்லிம் மதத் தலைவர்கள் இக் குழுவில் அங்கம் வகித்தனர். (சி)

# பொன்சேகா குறித்து விவாதம்நடத்த ஹக்கீம் தயாரா? அறைகூவல் விடுக்கின்றார் அமைச்சர் அமீர் அலி



கொழும்பு, டிசெ. 25

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் தம்முடன் பகிரங்க விவாதத்துக்கு வரவேண்டும் என்று அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் அமீர் அலி சவால் விடுத்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளரான முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்கு மு.கா. தீர்மானித்துள்ளது.

ஆனால், சரத்பொன்சேகாவை ஆதரிப்பதன் மூலம் முஸ்லிம் சமூகத்துக்கு எந்த ஆதாயமும் கிடைக்கப் போவதில்லை என்பது அமைச்சர் அமீர் அலி அங்கம் வகிக்கும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் உறுதியான நிலைப்பாடாகும்.

இது தொடர்பாகவே தம்முடன் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு அமைச்சர் அமீர் அலி அழைப்பு விடுத்துள்ளார்.

மு.கா தலைவர் இப்பகிரங்க விவாதத்தில் வெற்றி பெற்றால் தாம் அமைச்சர் பதவியைத் துறப்பார் என்றும் மு.கா. தலைவர் தோல்வி அடைந்தால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் பதவியை அவர் துறக்க வேண்டும் என்றும் அமைச்சர் அமீர் அலி பந்தயம் கட்டி உள்ளார்.

அமைச்சர் அமீர் அலி இச்சவால் குறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு:-


எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகாவை வெற்றிபெற வைக்கின்றமை மூலம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவார் என்று ஹக்கீம் கூறுகிறார். ஆனால், பொன்சேகாவை ஆதரிக்கின்றமை மூலம் ஹக்கீம் இரண்டாவது தோல்வி ஒன்றை அடைய இருக்கின்றார் என்பதே உண்மை. இது அவருக்கு நன்றாகவே தெரியும். ஆனால், அவர் ஐ.தே. கவின் கொள்கைக்குள் முழுமையாக மூழ்கியிருப்பதால் எதுவுமே செய்ய முடியாத கையறு நிலையில் இருந்து கொண்டு முஸ்லிம் சமூகத் தைத் தெரிந்து கொண்டே காட்டிக்கொடுக்கின்றார். முஸ்லிம் சமூகத்தின் மீது உண்மை யில் அவருக்கு அக்கறை இருந்தால் ஏன் பொன்சேகாவை ஆதரிக்கிறாரென வெளிப்படையாகக் கூறட்டும் பார்க்கலாம்.

எதிர்வரும் ஜனபதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா வெற்றி பெற்றால் நான் எனது அமைச்சுப் பதவியைத் துறப்பேன். ஆனால், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெற்றால் மு.கா தலைவர் பதவியை ஹக்கீம் துறப்பாரா? என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'அமெரிக்காவின் தேவைகளும் இலங்கையும்' என்ற கோணத்தை மையமாக வைத்து ஆராயும் விதத்தில் அமைகிறது இக் கட்டுரை.அஜித் பெரகும் ஜயசிங்க என்பவரால் எழுதப் பட்ட இக் கட்டுரை 'ராவய' பத்திரிகையில் பிரசுரமாகியுள்ளது. அதன் தமிழ் வடிவம் இங்கு தரப்படுகிறது.**

# இலங்கையின் அரசியல் சுயரூபம் நிறம்மாறும் சூழ்நிலையில்.....



அமெரிக்க விரோதப் போக்கென்பது உலகளாவிய ரீதியில் பிரபல்யமடைந்துள்ளதொரு அரசியற் கலையாகியுள்ளது. அதற்கமைய, இலங்கையை வெறுத்தொதுக்கி நாட்டினின்றும் வெளியேறி, அமெரிக்காவுக்குச் சென்று அமெரிக்கக் குடியுரிமையைப் பெற்றுக் கொண்டுள்ளோரும் கூட அமெரிக்க விரோதமென்ற போக்கைப் பின்பற்றும் தரப்பினராகியுள்ளனர். எந்தவொரு சம்பவத்தின் பின்புலத்திலும் அமெரிக்க அதிகாரமொன்று இருப்பதாக உருவகப்படுத்திப் பார்ப்பதற்கும் சிலர் பெரிதும் விரும்புகின்றனர். அமெரிக்கா ஜனநாயகவாதத்துக்கு முரணாகவும் நீதி நியாயமற்ற விதத்திலுமே உலகில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக்கொண்டுள்ளதென்பது முற்றிலும் உண்மையானதாகும்.

மேற்குறிப்பிட்ட மேலாதிக்க வாதத்தை நிலைப்படுத்திக் கொள்வது தொடர்பாகக் குரூரமான விதத்தில் செயற்படுகிற தென்பதும் கூட உண்மையே. இருந்தபோதிலும், அமெரிக்கா என்பது



எவரொருவராலும் கை கழுவி விட்டுப் செல்ல இயலாததொரு முக்கிய அம்சம் பெறுகிறது.

இவ்விதம் நாமிந்த அறிமுகத்தை முன்வைத்தமைக்குக் காரணமொன்றுள்ளது. அதாவது, ஐக்கிய இராச்சியமென இலகுவாக அழைக்கப்படும், அமெரிக்கா உண்மையில் ஐக்கிய இராச்சியமாகக் கருதப்பட வேண்டிய ஒரு நாடாகும். அது இலங்கையின் உள்ளகத் தொடர்பாடல் தொடர்பாக கொண்டுள்ள நிலை எத்தகையது என்பதை

## தனது தேவைகளின் நிறைவுக்காக காய் நகர்த்துகிறது அமெரிக்கா

அலசிப்பார்ப்பதற்கேயாகும். இந்த அலசலுக்கு ஆதாரமாக அமைவது, அந்நாட்டுச் செனட்சபையின் வெளியுறவுத் தொடர்பாடல் குழுவினால் இவ்விரு நாடுகளுக்கிடையிலான தொடர்பாடல்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையேயாகும். இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள், இந்தியாவின் தொடு முனையில் இந்து சமுத்திரத்தின் நடுவில் அமைந்துள்ள இலங்கைத் தீவானது உலகின் அதிகார அரசியலினுள் நிலைகொள்ளும் விதத்தைப் புரிந்துகொள்வதற்குப் பேருதவி புரிகின்றன.

இலங்கையின் அரசியலில் தம்மைச் சம்பந்தப்படுத்திக்கொள்ளும் தரப்புகள் தமது உபாயமார்க்கலைத் திட்டமிட வேண்டியிருப்பது இப்புறச்சூழலினுள்ளேயாகும்.

அதாவது, இலங்கையில் யுத்தம் முடிந்துபோய்விட்டிருந்தாலும் கூட, அதற்குக் காரணமாகியிருந்துள்ள சிக்கல் இன்னமும் அவ்வாறே நிலைத்திருக்கிறது என அந்த அறிக்கையானது அச்சொட்டாகவே இனங்கண்டு கொள்கிறது. அதற்கமைய, இலங்கை யுத்தத்துக்குப் பின்னரான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்தாலும் கூட, சிக்கல்கள் தீர்த்துவிடப்பட்டுள்ளதொரு நிலைப்பாட்டினுள் தடம் பதித்திருக்கவில்லை. சிக்கலுக்கான காரணிகள் விரைந்து கவனத்தில் கொள்ளப்பட வேண்டியுள்ளது. முப்பதாண்டுகால வன்முறையினால் சிங்களப் பெரும்பான்மை, தமிழ் சிறுபான்மை மீதான தாக்குதல் மனோபாவத்துக்கு உள்ளாக்கிவிடப்பட்டுள்ளது. அரசின் சந்தேக உணர்வுகளைக் குறைத்து விடுவதற்குக் காரணமாகும் விதத்திலான ஆற்றுப்படுத்தல் களுக்கான ஆயத்தமொன்று இன்னமும் தமிழ்த் தலைவர்களிடமிருந்து முகிழ்ந்திருக்கவில்லை. சிங்களவர்களது வெற்றிப் போதை மனோபாவம் தொடர்பாக மனவிரக்திக்கு உள்ளாகியுள்ள சில தமிழ் இனத்தவர் ஐக்கிய இலங்கையொன்றினுள் தாம் சிறுபான்மைப்படுத்தப்படக்கூடுமெனப் பீதிவயப்பட்டுள்ளனர்.

தமிழ் மத்தியதர வகுப்பு அழிந்து போயுள்ளதோடு பெரும்பாலானோர் நாட்டுக்கு வெளியே குடிபெயர்ந்து சென்றுள்ளனர். நடுநிலைக்கருத்து நிலைப்பாடுகளைப் பிரதிநிதித்துவப் படுத்தி நிற்பது தொடர்பாக முன்னணித் தலைவர்களுள் ஒருசிலர் மட்டுமே எஞ்சியுள்ளனர். அரசின் அகதிமுகாம்களினுள் சிறைப்பட்டிருந்து, சிதைந்தும், அழிந்தும் போய்விட்டுள்ள தமது வீடுகளை நோக்கி மீளச் செல்லும் வடபுலத்துத் தமிழ் குடிமக்களின் நிலைப்பாடோ உண்மையில் துர்ப்பாக்கியமானதே.

இலங்கையின் அரசியல் சூழல் பற்றிக் கண்ணோக்குச் செலுத்தும் பெருமளவிலான ஆய்வாளர்கள் அதன் சுயரூபமானது கறுப்பு அல்லது வெள்ளையென்ற நிலைப்பாட்டில் இல்லையெனத் தெரிவிப்பதாகவும் கூறும் அவ்வறிக்கை, போர்க்குற்றங்கள் மற்றும் சாட்டுகள் நிலவும் நிலையிலும் கூட, ராஜபக்ஷ அரசானது, வடக்கில் மனிதாபிமானப் பிரச்சினையைக் குறைத்துவிடுதல் மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளில் சாதனை மிக்க தடங்களைப் பதித்துள்ளதாக சுட்டிக்காட்டுகிறது.

தமிழ் மற்றும் முஸ்லிம் குடிமக்களின் முக்கியமான புனரமைப்புப் பணிகள் மற்றும் அபிவிருத்தித் தேவைகளை நிறைவு செய்யும் கருமத்தில் அரசின் ஆற்றல் தொடர்பாகப் பாரதூரமான பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன; வினாக்கள் எழுந்துள்ளன. நீண்டு செல்லும் அவசரகாலச்சட்டம், அபிவிருத்திச் செயற்பாடுகளில் தூரநோக்குப் பார்வை அமையாதமை, யுத்தத்தின்போது செயற்பட்டுள்ள பிரச்சினைக்குரிய சுயரூபம் மற்றும் ஊடகச் சுதந்திரம் முடக்கப்பட்டமை போன்ற காரணிகளின் மீது சர்வதேச உதவும் தரப்புகளால் இலங்கை சம்பந்தமாக அதிகரித்த பங்களிப்பை வழங்க இயலாது போயுள்ளது. இதன்மூலம் இலங்கை குறித்த சர்வதேச சமூகத்துக்கு இடையிலான நிலைப்பாடு மேலும் பழுதடைவதோடு உண்மையான சமாதானமொன்று தொடர்பான வாய்ப்பு கைவிட்டுப் போவதாக மேற்படி செனட்சபையின் அறிக்கை மேலும் சுட்டிக்காட்டுகிறது.

உணவுப் பொருட்கள் விநியோகம் மற்றும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றுதல் போன்ற கருமங்களில் அமெரிக்கா இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கி வரும் பிரதானமான நாடாக இருந்தபோதிலும், இவ்விரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் நலிவடைந்து வரும் நிலையை காணமுடிகிறது. யுத்தத்தின் நடைமுறைப் போக்குகள் மற்றும் இடம்பெயர்ந்துள்ள மக்களை உபசரிக்கும் விதம் தொடர்பாக அமெரிக்க ஐக்கியக் குடியரசின் கண்டனங்கள் புறமொதுக்கி விடப்பட்டன. அமெரிக்காவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட உதவிகள் கடன் என்றல்லாத அர்ப்பணிப்புச் சேவைகளாக மட்டுமே இருந்துள்ள போதிலும், அதனோடு சம்பந்தப்படும் அரசியல் மறுசீரமைப்புக்களைக் கோரி நின்றதன் காரணமாக ராஜபக்ஷ அரசு அவற்றை விமர்சித்தது. இருநாடுகளுக்கிடையிலான உறவு விரிசலடைந்து வந்த நிலையில், சுதந்திரத்தைவிடப் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி நிற்கும் - அபிவிருத்தி மாதிரியொன்றைப் பின்பற்றிவரும் மேற்குலகல்லாத நாடுகளுடன் இலங்கை சார்ந்து நிற்கத் தலைப்பட்டிருந்ததாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

ராஜபக்ஷவின் அரசியல் தலைமைத்துவமானது, பர்மா, சீனா, ஈரான், லிபியா போன்ற நாடுகளுடன் உறவுகளை வளர்த்துக்கொண்டது. சீனா, யுத்தக் கடன்கள், அடிப்படை வசதிகள் தொடர்பாகக் கடன்கள் மற்றும் துறைமுக அபிவிருத்தியென்ற கருமங்கள் ஊடாக பல மில்லியன் கணக்கிலான டொலர்களை இலங்கையில் முதலீடு செய்துள்ளது. இவை மேற்குலக நாடுகளால் முன்வைக்கப்படும் எதுவித நிபந்தனைகளும் அற்ற கடனுதவி ஆகும்.

இந்து சமுத்திரத்தின் ஊடான முக்கியத்துவம் பெறும் வர்த்தகப் பரிமாற்ற மார்க்கங்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ளும் விடயத்தில் அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா என்பவை பொதுவான அவசியப்பாடுகள் என்ற கோணத்திலேயே செயற்படுகின்றன. அமெரிக்கா, இலங்கையின் பொருளாதாரம் மற்றும் பாதுகாப்புத் துறைகளில் முதலீடு செய்திருப்பது சராசரி ரீதியாக மிகக்குறைந்ததொரு அளவுப் பிரமாணமேயென்பதால், இலங்கையானது அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் மேற்குலகிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. அமெரிக்கச் செனெட் சபையின் வெளியுறவுத் தொடர்புகளுக்கான குழு சுட்டிக் காட்டுகிறது.

இந்த மூலோபாய மாற்றமானது, தென்னாசிய வட்டகையில் அமெரிக்காவுக்கு இருக்கும் தேவைகள் குறித்து அழுத்தம் விடுத்து நிற்பதாக மேலும் அவ் அறிக்கை தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவின் தேவைகள் குறித்த இலங்கையின் பூகோள மூலோபாய முக்கியத்துவம் அமெரிக்கக் கொள்கை அமைப்பாளர்களால் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவ் அறிக்கை தெரிவிக்கிறது.

ஐரோப்பா, மத்திய ஆசியா, சீனா மற்றும் ஆசியாவின் ஏனைய தரப்புக்களுடன் தொடர்படுத்திவிடும் மிகுந்த முக்கியத்துவம் பெறும் வர்த்தகப் பரிமாற்ற மார்க்கங்களுக்கு மிக அண்மையிலே இலங்கை அமைந்துள்ளது. இந்தப் பரிமாற்ற வர்த்தகச் செயற்பாட்டுக்குத் தடைகளை ஏற்படுத்தும் பயங்கரவாதச் செயற்பாடுகள் மற்றும் சூறையாடலை இல்லாதொழித்துவிடும் கருமத்தின்போது அமெரிக்கா, இந்தியா மற்றும் சீனா, சமமான தேவைகளைக் கொண்டுள்ளன.

பாதுகாப்புத் தேவைகள் கடல் மார்க்கங்களுக்கு அப்பாலும் நீண்டு சென்று உலகின் விசாலமான ஜனநாயகவாத இராச்சியமான இந்தியாவின் குறிப்பாகத் தமிழ் நாட்டின் நிலைத் தன்மைக்கும் கூட, அவசியப்படுகிறது. இருதரப்புத் தொடர்பாடல்கள் என்ற விடயத்தில் இந்த அனைத்துக் காரணிகளும் சம்பந்தப்படுகின்றன.

அமெரிக்காவுக்கு இலங்கையை இழந்துவிட இயலாதென்பதை மேற்படி அறிக்கையும் தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. ஆனாலும்,




இலங்கையின் அரசியல் மற்றும் மனித உரிமைகளுக்கான அறிக்கைகள் கவனத்தில் கொள்ளப்படாதிருக்க வேண்டியுள்ளதாக அதில் அர்த்தப்படுத்தப்படவில்லையெனவும் அறிக்கை தெரிவிக்கிறது.

இதன் மூலம் புலப்படுத்தப்படும் கருத்தாகியிருப்பது, தமது வசமுள்ள கருவிகளைப் பரந்தபட்ட ரீதியில் பயன்படுத்தி இலங்கை சம்பந்தமாக அமெரிக்காவின் இயக்கும் ஆளியின் அழுத்தத்தை அதிகரிக்கும் புதிய பிரவேசமாக அமைய வேண்டியுள்ளது என்பதாகும். அது, அமெரிக்காவின் தேவைகள் இந்து சமுத்திர வட்டகையினுள் நீண்டகாலத்துக்குப் பேணிப்பாதுகாத்துக் கொள்ளப்படுவது தொடர்பாகப் பயன்பெறத்தக்கதொரு புதிய பிரவேசமாக அமைய வேண்டியுள்ளதாகவும் மேற்படி அறிக்கை தெரிவிக்கிறது.

அமெரிக்கச் செனட்சபையின் வெளியுறவுத் தொடர்பாடல்களுக்கான குழுவின் இவ் அறிக்கையானது, ஒபாமா நிர்வாகம் இலங்கையுடனான தொடர்பாடல்கள் குறித்து புதிய பிரவேசமொன்றை ஆராய்ந்து வரும் சந்தர்ப்பத்திலேயே வெளியிடப்பட்டுள்ளது.

ராஜபக்ஷ நிர்வாகம் சர்வதேச அரசியல் தொடர்பாடல்களின்போது, மேற்குலக மற்றும் அமெரிக்கா சம்பந்தமாக கைக்கொண்டுள்ள குறைத்து மதிப்பிடுதல்கள் மற்றும் சீனா, பர்மா, ஈரான் மற்றும் லிபியா போன்ற புதிய நண்பர்களுடன் மேம்படுத்தி வரும் பக்கச்சார்புத் தன்மை அமெரிக்காவின் உன்னிப்பான அவதானத்துக்கு உள்ளாகியுள்ள தென்பதே இந்த அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்படும் முக்கிய அம்சமாகும்.

இலங்கையின் பூகோள அரசியல் அமைவின் முக்கியத்துவம் காரணமாக இலங்கையின் நிர்வாகிகளுக்கு தமது இஷ்டத்துக்குப் பைத்தியக்காரத் தனமாக நடந்து கொள்ளும் அளவுக்குச் சுதந்திரம் பெற இயலாதென்பதையும், சர்வதேச அரசியலில் அணிசேரா அணுகுமுறையொன்றைக் கடைப்பிடித்து குறைந்தபட்ச மோதல் நிலையென்ற நிலைப்பாட்டைக் கொண்டு செல்வதே



உண்மையில் முக்கியமாகிறது.

இதேபோன்று, நாட்டினுள் மோதல் களைக் குறைந்தபட்ச மட்டத்தில்வைத்துக் கொள்வதானது சுயாதீனத் தன்மையை பாதுகாத்துக் கொள்ளும் விடயத்தில் இன்றியமையாததாகிறது என்றும் இவ்வறிக்கையின் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது. இவ்வறிக்கையானது, இலங்கையின் நிர்வாகம் சம்பந்தமாக மிகுந்த முக்கியத்துவம் பெறும் இரு தேர்தல்கள் எதிர்கொள்ளவுள்ள சந்தர்ப்பத்தில் வெளியிடப்பட்டிருப்பது முக்கியத்துவம் பெறுமொரு விடயமாகவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. ★★★

**தமிழில்: சரா**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாவடக்கம் நன்மை தரும்

நம் பேச்சு இனிமையாகவும் அன்பு மொழியாவும் இருக்க வேண்டும். ''நயம்படப் பேசுதலே நாவுக்கு அணிகலன்'' என்பது ஆன்றோர் வாக்கு. ''இனிய சொற்களைப் பேசுதற்கே நாக்கு இறைவன் தந்த வரப்பிரசாதம்'' என்பது ஜெயதேவர் திருவாக்கு. ''எதைப் பேசினாலும் பிறர் மனத்தைப் புண்படுத்தாமல் பொருள் விளங்குமாறு சத்தியத்தையே பேச வேண்டும்'' என்று கீதையில் கண்ணபிரான் அருளியுள்ளார். ''நாக்கைக் கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.

நமது சொல்லை முறையாகக் காப்பாற்றுவதும் ஓர் ஆத்ம சாதனையே. அப்பர் பெருமானின் இனிய சொற்களைக் கேட்டு மகிழ்ந்த சிவபெருமான் 'நாவுக்கரசர்', 'வாகீசர்' என்ற பெயர்களைச் சூட்டினார். இராமபிரான் அனுமனின் சொல்லழகைக் கேட்டு இலக்குவனிடம், ''யார் - கொல் இச்சொல்லின் செல்வன்?'' என்று வியந்து வினவுகிறார். பேசும்போது சிந்தித்துப் பேசவேண்டும். பேசியசொல் பொய்யாகி விடக்கூடாது. யோசித்துப் பார்க்காமல் தசரதன் கைகேயிக்குக் கொடுத்த இரண்டு வரங்களே அவனது இறப்புக்குக் காரணமாகி விட்டன. அதனால் சொற்களை அளந்து பேச வேண்டும்.

மற்றவரோடு உறவாடும் பொழுது எவ்வளவுக் - கெவ்வளவு சொற்களைக் குறைக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு மனபரிபாகம் உண்டாகிறது. தேவைக்கு மீறிப் பேசக்கூடாது. ரமண மகரிஷி அசையாது சிலை போல் அமர்ந்திருப்பார். பேச வேண்டிய இடத்தில், பேச வேண்டிய அளவு - தான் பேசுவார். பேசும்போது இனிமையாகவும் பயனுள்ளதாகவும் பேச வேண்டும். இல்லாவிடில் பேசாமல் மௌனம் காத்தலே சிறந்தது.

''சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருப்பதற்கே அல்லும் பகலும் எனக்கு ஆசை பராபரமே'' என்பது தாயுமானவர் அருள்வாக்கு. ''நீ உனது நாவைக் கட்டுப்படுத்திவிட்டால் மற்றஎல்லா இந்திரியங்களையும் கட்டுப்படுத்தியவனாகிறாய்'' என்று சுவாமி சிவானந்தா இயம்புகிறார்.

மகாபாரதத்தில் தர்மபுத்திரர் செய்த இராசசூய யாகத்தில் சிசுபாலன் பேசிய தொண்ணூற்று ஒன்பது வசைமொழிகளையும் கண்ணபரமாத்மா பொறுத்துக்கொண்டார். நூறாவது பழிச்சொல்லைக் கேட்ட பின்னரே அவன் தலையைச் சக்ராயுதம் அறுத்துத் தள்ளியது. தட்சன் சிவபெருமானை இழித்துப் பேசியதால் அவன் செய்த யாகம் அழிந்ததோடு அதில் கலந்து கொண்ட தேவர்களும் தண்டிக்கப்பட்டனர்.

சோலைக்கதிர்

''கனகவிசயர் என்னும் வடபுலத்து மன்னர்கள் நாவை அடக்காமல் தமிழ் மன்னர்களைப் பழித்துப்பேசியதால் சேரன் செங்குட்டுவனின் சினத்திற்கு ஆளாகிச் சிறைபடுத் தப்பட்டுக் கண்ணகியின் சிலை செய்யும் கல்லைச் சுமந்தனர் என்று சிலப்பதிகாரம் கூறு[illegible]

மகாபாரதத்தில் பதினேழாம் நாள் போரில் சல்லியன் கர்ணனுக்குச் சாரதியா[illegible]த் தேர் ஓட்டினான். அவனிடம் கர்ணன் தன் நாவை அடக்காமல் தன் வில்லின் மகிமையையும், தன் வில்லாற்றலையும், 'தனக்கு நிகர் அர்ச்சுனன் தவிர வேறு எவரும் இல்லை' என்றும் தற்பெருமை பேசி, ''நீ உன் தேரோட்டும் வேலையைப் பார்'' என்று இழித்துப்பேசி, சல்லியனைப் பகைத்துக் கொண்டதால் இறுதியில் சாரதியின்றித் தன்னந்தனியனாய்த் துன்பமடைந்தான்.

இவ்வாறு வீரர்களும், வேந்தர்களும்கூட நாவை அடக்காமல் பேசிய விபரீதப் பேச்சினால் துன்புற்று அழிந்திருக்கிறார்கள். இறைவன் நாமத்தை ஓதவும், அவன் புகழைப் பாடவும், வாழ்வில் மற்றவரிடம் இனிய சொற்களைப் பேசி நன்மையடையவும்தான் இறைவன் நாவைப் படைத்தான். ஒன்றைப் பேசும்போது அதைக் கேட்பவன் அடையும் நிலையை உணர்ந்து பேச வேண்டும். பின்விளைவை நினைத்துப் பேச வேண்டும். கடுகைத் தரையில் கொட்டிவிட்டால் எடுப்பது சிரமம்.

(நன்றி ஞானபூமி)

## ஒளிவிழா நிகழ்வு

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கமும் யாழ். திருக்குடும்ப கன்னியர் மட பழைய மாணவிகள் சங்கமும் இணைந்து நடத்தும் ஒளிவிழா நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பத்திரிசியார் கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அருட்தந்தை றெஜிஸ் இராஜநாயகம் நத்தார் செய்தி வழங்குவார். அதைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (204-23)

## அந்தியேட்டி வீட்டுக்கிரியை அழைப்பு

பிறப்பு 30 . 06 . 1934



இறப்பு 26 . 11 . 2009

கடந்த 26.11.2009 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் கந்தையா பொன்னம்பலம்


(முன்னைநாள் அரசாங்க அதிபர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 25.12.2009 வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் காரைநகர் புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை 26.12.2009 சனிக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'தில்லை வாசா'
இல.86, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (91704) குடும்பத்தினர்.




## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தசாமி குழந்தைவேலு (தம்பியண்ணர்)

(வாணி சவுண்ட் உரிமையாளர்)

அன்னையின் மடியில் 15-01-1934 ஆண்டவன் அடியில் 30-12-2003

திதி: அட்டமி 25.12.2009

அன்புடனே எம்மை வளர்த்து அறிவூட்டி
பண்புடனே எம்மைப் பார்புகழ வாழவைத்து
இன்பமுடன் நாம் இருக்க எம்மை விட்டு
இறைவன் அடி சென்றதேனோ?
ஆறாண்டுகள் சென்றாலும் ஆறாது உங்கள் அன்பு
எங்கள் நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கல்லூரி வீதி,
பருத்தித்துறை. (91698)

### சந்நிதியான் ஆச்சிரமத்தின் வருடாந்த திருவாசக விழா

வடமராட்சி, டிசெ.25

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை நடத்தும் வருடாந்த திருவாசகவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பேரவைத் தலைவர் கே.அருள்லிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

செல்வச்சந்நிதி கோயிலில் இடம்பெறும் விசேட பூசை, வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவப் படங்களும் திருவாசக ஏடுகளும் ஆச்சிரமம் வரை ஊர்வலமாக எடுத்துவரப்படும். இதனைத் தொடர்ந்து கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

திருவாசக விழாவின் பின்னர் பேரவையின் மாதாந்த வெளியீடான ''ஞானச்சுடர்'' ஆன்மிகச் சஞ்சிகையின் மார்கழி மாத இதழ் வெளியீட்டு விழா இடம்பெறும். இந் நிகழ்வில் குப்பிளான் கிராம சேவையாளர் சோ.பரமநாதன் வெளியீட்டுரையையும், தென்மராட்சி கல்வி வலய சாவகச்சேரி உதவிக்கல் விப்பணிப்பாளர் ஆ.சிறிஸ்கந்தமூர்த்தி மதிப்பீட்டுரையையும் நிகழ்த்துவார்கள்.

(50-236-70)

## என்றென்றும் நீங்காத நினைவில்......

5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி 22 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சொக்கலிங்கம் துரைஐயா — அமரர் துரைஐயா பாலச்சந்திரன்

(கமலா ஸ்ரோர்ஸ், சந்திரன் பான்சி பலஸ் உரிமையாளர்கள்)

தோற்றம் - 30.04.1934 தோற்றம் - 12.07.1959
மறைவு - 20.12.2004 மறைவு - 19.10.1987

(திதி : 25.12.2009)


குடும்பத்தின் குல விளக்காய் பாசத்தின் உறைவிடமாய்
எம் வாழ்வை இனிதாக்கி எமக்குக் குறைவில்லாது
நல்வழி காட்டிய தெய்வங்களே
எத்தனை நூறு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு அகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்

து.பிறேமச்சந்திரன்,
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை (91689) சங்கரப்பிள்ளைவீதி, ஆனைக்கோட்டை

CHILDREN'S WORLD
ஆரம்பம் 22.01.2010
சர்வதேச தரம் வாய்ந்த பாலர் பராமரிப்பு மற்றும் பாலர் பாடசாலை
இடம்:- No 16,2nd Lane Palaly Road Jaffna.
ஒவ்வொரு குழந்தைக்கும் சிறப்பான எதிர்காலத்தை உறுதி செய்வது பெற்றோரின் கடமை
அந்த கடமையை செய்ய உங்களுக்கு நாம் சந்தர்ப்பம் வழங்குகிறோம்.
அனுமதிகள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு ARRUL GLOBAL EXPRESS இல 01, பிறவுன் வீதி, நாவலர் வீதி சந்தி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். T.P- 0778733576

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி

*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

கே.எஸ்.சரவணமுத்து, ஏ.கே.சபாபதிப்பிள்ளை, மு.சபாநாயகம், ஏ.சுவாமிநாதசர்மா, க.பாலச்சந்திரன், க.சிவபாதசுந்தரம், மு.நாகேந்திரராசா தற்போதைய அதிபர் க.அருந்தவபாலன் ஆகியோர் கல்லூரியின் அதிபர் பதவிகளை அணிவகுத்து சிறப்புற நடத்தி வந்தனர்.

கல்லூரியில் 54 ஆசிரியர்களுடன் ஆயிரத்து 500க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றனர்.சாவகச்சேரி நகரின் மத்தியில் இக் கல்லூரி அமைந்திருந்ததால் யுத்த வேளையில் அதிக அளவு பாதிப்புக்களைச் சந்தித்தது இக்கல்லூரியே.

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்த வேளைகளில் முழுமையாக இக் கல்லூரி பாதிக்கப்பட்டது. கல்லூரியின் அனேகமான கட்டடங்களும் அழிந்து கற்குவியல்களாகக் காணப்பட்டது. கல்விச் சமூகத்தினரையே அதிர்ச்சியடையச் செய்தது. 2002ஆம் ஆண்டு மக்கள் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த வேளையில் வகுப்புகள் நடத்த கட்டட வசதிகள் இல்லாததால் தற்காலிக வகுப்பறைகள் அமைக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் நடத்தப்பட்டன.

அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான சுவிஸ் முகவர் நிறுவனம் நிக்கொட், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவை கல்லூரி மாண்வர்களின் நலன்கருதி மாடிக் கட்டடங்களை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

கல்லூரியின் வளர்ச்சிக்கு அடிகோலிய சின்னத்தம்பி, ஏபிரகாம், ஜன்ற், டிறிபேக் ஆகியோரின் நினைவாக கல்லூரியின் விளையாட்டு இல்லங்களாக உள்ளன.

2000ஆம் ஆண்டு யுத்த வேளையில் கல்லூரியில் இருந்த நூலகத்துடன் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட புத்தங்களும் அழிந்தன. விஞ்ஞான ஆய்வு கூடமும் பிரார்த்தனை மண்டபமும் அழிந்தன.

கடந்த ஐந்து வருட காலத்தில் கல்லூரியின் கல்வி வளர்ச்சி பெரிதும் முன்னேற்றம் கண்டுள்ள போதிலும் சில தேவைகள் உள்ளதையும் அவதானிக்க முடிந்தது. 1924ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிரார்த்தனை மண்டபம் அழிந்த நிலையில் காணப்படுவதால் பிரார்த்தனைகள் மைதானத்திலேயே நடத்தப்படுகின்றன. புதிய பிரார்த்தனை மண்டபம் நிர்மாணிக்கப்படல் வேண்டும்.

உயர்தர வகுப்புகள் உள்ளபோதிலும் விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லாதது பெரும் குறையாகும்.கல்லூரியில் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை இளவேனில் என்னும் சஞ்சிகை வெளியிடப்பட்டு கல்லூரியின் செயற்பாடுகளை வெளிப்படுத்தி வருகின்றது. பரீட்சைகளில் சிறந்த பெறுபேறு பெறும் இரண்டு மாணவர்களுக்களுக்கு கல்லூரியின் பழைய மாணவர் சங்க கனடாக் கிளையினர் வருடாந்தம் புலமைப் பரிசில்களை வழங்கி வருகின்றனர். *(முற்றும்).*

# சாவகச்சேரி பொதுச்சந்தை





*(சென்றவாரத் தொடர்ச்சி...)*

சித்திரை தொடக்கம் புரட்டாதி வரை மீசாலைப் பகுதியிலிருந்து மாம்பழம், பலாப்பழம் போன்றவை மாட்டுவண்டில்களில் கொண்டுவரப்படும். அத்துடன் கார்த்திகை தொடக்கம் தை மாதம்வரை மாரி காலத்து மாம்பழங்களும் சந்தைக்கு வரும்.

அவ்வேளையில் தென்னிலங்கையிலிருந்து வருவோர் மாம்பழங்கள், பலாப்பழங்கள் கொள்வனவு செய்து சந்தையில் வைத்து சாப்பிடுவதுடன் குடும்பத்தினருக்கும் கொண்டு செல்வர். மாம்பழம், பலாப்பழம் சீஸன் காலத்தில் கொழும்பு செல்லும் பயணிகளுக்காக சாவகச்சேரி புகையிரத நிலையத்தில் கூவி விற்கும் வியாபாரிகள் நிறையப் பேர் வியாபாரம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னைய காலங்களில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய நாள்களில் மட்டும் சந்தை கூடும். இத் தினங்களுக்கு முதல் நாளே தூர இடங்களிலிருந்து மாட்டுவண்டில்களில் வாழைக்குலைகள், தேங்காய்கள், பூசணிக்காய், பானை, சட்டிகள் போன்றவை கொண்டுவரப்பட்டு சந்தையைச் சுற்றி நிறுத்தப்பட்டு அதிகாலையில் பொருள்களை சந்தைக்கு கொண்டுசென்று விற்பனை செய்வர்.

பனை உற்பத்தியான பனாட்டு, பனங்கிழங்கு, ஒடியல், புளுக்கொடியல், அவித்த கிழங்கு, பனங்கட்டி போன்றவை சாவகச்சேரி சந்தையிலேயே பெருமளவு விற்பனை செய்யப்பட்டன. அவ்வேளைகளில் கொள்வனவு செய்யப்படும் பனை உற்பத்திப் பொருள்கள் லொறிகளில் ஏற்றப்பட்டு ஏனைய மாவட்டச் சந்தைகளுக்கும் புகையிரதம் மூலம் தென்னிலங்கைப் பகுதிக்கும் கொண்டு செல்லப்படும்.

இன்று சாவகச்சேரி நகரில் கம்பீரமாகக் காட்சியளிக்கும் நவீன சந்தை கடந்த 1974 ஆம் ஆண்டு சந்தை வளாகத்தில் கண்டி வீதியுடன் இணைந்து அத்திபாரமிடப்பட்டு 1977 இல் திறக்கப்பட்டது. நவீன சந்தையின் இயங்கிய வர்த்தக நிலையங்களுடன் சந்தையின் உட்புறத்தே இருந்த பல்வேறு விற்பனை நிலையங்களும் சந்தையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தன.

வாரத்தில் மூன்று தினங்கள் நடைபற்ற சந்தைகள் கடந்த 1993-1996 காலப்பகுதியில் நாளாந்த சந்தையாக மாறி தினமும் பொருள்கள் வரத்தொடங்கின. ஏ-9 வீதி போக்குவரத்து நிறுத்தப்பட்டதால் இந்தச் சந்தைக்கு கொண்டுவரப்படும் உற்பத்திப் பொருள்கள் மாவட்டத்தில் ஏனைய பிரதேசங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன. மீண்டும் ஏ-9 வீதி திறக்கப்படும் வரை (2002) மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச உற்பத்திப் பொருள்களும் சாவகச்சேரி சந்தைக்கு கொண்டுவரப்பட்டன.

கடந்த 2000 ஆம் ஆண்டு யுத்தம் சாவகச்சேரி பொதுச் சந்தையை முற்று முழுதாக அழித்தன. மக்கள் மீளக்குடியமர்ந்த வேளையில் கம்பீரமாகக் காட்சியளித்த நவீன சந்தை உட்பட சந்தையிலிருந்து அனைத்து வர்த்தக நிலையக் கட்டடங்களும் பொருள்கள் விற்பனைப் பிரிவுகளும் சிதைவடைந்து காணப்பட்டன. சந்தைக்குள் கால்வைக்கவே அனைவரும் அச்சம் கொண்டனர். நகரசபை நிர்வாகத்தின் கடும் முயற்சியின் பயனாக மீண்டும் அனைத்து விற்பனைப் பிரிவுகளும் புனரமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன. சந்தையை நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய முறையில் நிர்மாணிக்கவுள்ளதால் தற்போது பாரிய வேலைத்திட்டங்கள் ஏதும் சந்தை வளாகத்தில் மேற்கொள்ளப்படவில்லை என நகரசபை நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்படுகின்றது. *(முற்றும்)*

# அஸ்தமனமாகித் தொண்டிருக்கும் "உதயசூரியன்" கிராமம்.....




"உள்ளங்கையில் உலகம்" என்னும் தத்துவத்தை அடியாகக் கொண்டு இயங்கி வரும் இன்றைய நவீன உலகம் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அளவிற்குப் பிரமிப்பை ஊட்டிய போதிலும் அதற்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் கடந்த 35 வருடங்களுக்கும் மேலாக எந்தவித அடிப்படை வசதிகளோ, முன்னேற்றமோ இல்லாத நிலையில் 'ஒரு கிராமம்' இனம் காணப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சிக்குரிய விடயமாக உள்ளது. நாம் குறிப்பிடுகின்ற இக்கிராமம் எங்கோ ஒரு ஒதுக்குப் புறத்தில் நகர வாசனையே தெரியாமல் முடங்கிக் கிடக்கும் குக் கிராமம் என்று தப்புக் கணக்குப் போட்டு விடாதீர்கள்.

பிரபல்யமான [illegible] கச்சாய் வீதியில் அமைந்துள்ள "உதயசூரியன்" எனும் கிராமத்தின் பெயரில்தான் பிரகாசம் உள்ளதேயொழிய, அம்மக்களின் வாழ்க்கை இன்றுவரை இருள்சூழ்ந்ததாகவே காணப்படுகிறது.

ஜே/301 என்னும் கிராம அலுவலர் பிரிவில் அண்ணளவாக 2.5 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டு விளங்கும் இக்கிராமம் வடக்கே சங்கத்தானையையும் (ஜே/302), கிழக்கே அல்லாரையினையும் (ஜே/322) தெற்கே தனங்களப்பையும் (ஜே/298), மேற்கே சாவகச்சேரியினையும் (ஜே/300) தனது எல்லையாகக் கொண்டுள்ளது. இக்கிராமத்தில் வசிக்கும் 70 குடும்பங்களில் 34 பேர் நகரசபையில் சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபட்டு மிகவும் குறைந்த அடிப்படை வேதனத்தைப் பெறுகின்றனர். பிறரது அழுக்குகளையும் குப்பைகளையும் அகற்றிப் புனிதமாக்கும் தொழிலைச்-செயலைச் - செய்கின்ற இவர்களுக்குச் சமூகத்தில் ஐந்தறிவு ஜீவிகளுக்குக் கொடுக்கும் மதிப்புக்கூட கொடுக்கப்படுவதில்லை. அது மட்டுமல்லாது மிகவும் கேவலமாக நடத்தப்பட்டுப் புறமொதுக்கப்படுகின்றனர். ஆகக் குறைந்தது இரண்டு நாள்கள் இவர்கள் தமது தொழிலைச் செய்யாவிட்டால் முழு இடமுமே நாறிப்போய் விடும் என்பதை எவருமே உணர்ந்து கொள்வதில்லை.

*(தொடரும்)*



## தென்மராட்சி ஒலி

தொகுப்பு: ஜயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Annai Nagaa Food City

## Wishes MarryX Mas & Happy New Year

★சுத்தமாக பொதிசெய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்.
★பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள்.
★இறக்குமதி செய்யப்பட்ட பழ வகைகள், பழரசங்கள் மற்றும் குளிர்பான வகைகள்.
★அன்பளிப்பு, அழகுசாதன வாசனைத் திரவியங்கள்.
★சிறுவர்களுக்கான ஆடைகள், பாடசாலை உபகரணங்கள், எழுதுகருவிகள் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்கள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளவும்,

KEELLS ★ கில்ஸ் சொஸேயஸ்
Elephant House ★ எலிபன் ஹவுஸ் ஐஸ்கிறீம் வகைகள்
Prima ★ பிறிமா இறைச்சி வகைகள்
Stassen Group ★ உணவு வகைகள்



போன்றவற்றின் ஏகவிநியோகஸ்தர்கள் நாம் என்பதனை
மகிழ்ச்சியுடன் அறியத்தருவதுடன் குறைந்த விலையில்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

அன்னை நாகா பூட்சிற்றி
பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இரவு 8.00 மணிவரை திறந்திருக்கும்.

175, K.K.S. Road, Jaffna. T.P - 021- 222 5515, 021- 222-7875


## யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட மக்களுக்கு குளோறின் இட்ட குடிதண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ் மாநகரசபையினர் குளோறின் இடப்பட்ட குடிதண்ணீரைப் மக்களுக்கு விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குழாய் மூலம் விநியோகிக்கப்பட்டு வரும் இந்தக் குடிதண்ணீரிலேயே குளோரின் இடப்பட்டுள்ளது.

தற்போது பெய்து வரும் மழையை அடுத்து மக்களுக்குக் குடிதண்ணீரின் மூலம் தொற்று நோய்கள் ஏற்படுவதைத் தடுக்கும் முன்னேற்பாடாகவே குளோரின் இடப்பட்ட குடிதண்ணீர் விநியோகிக்கப் பட்டு வருகின்றது.

இதேவேளை இந்தக் குடிதண்ணீரில் அதிகளவு குளோரின் கலக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் குடிதண்ணீரை பாவிக்க முடியாது மணம் வீசுவதாகவும் மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

(50-224)

## கணபதி பதிப்பகத்தின் 42 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.25

வல்வெட்டித்துறை, நெடியகாடு கணபதி பதிப்பகத்தின் 42 ஆவது ஆண்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வல்வை மகளிர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்வி அலுவலக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் அ.மனோகரனும் சிறப்பு விருந்தினராக வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற பதில் செயலாளர் திருமதி தி.சாந்தினியும், கௌரவ விருந்தினராக வல்வை மகளிர் மகா வித்தியாலய அதிபர் திருமதி கு.நகுலாம்பிகையும் கலந்து கொள்வர்.

(50-224)


ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 492
சீட்டிழுப்பு திகதி: 23.12.2009

வெற்றி எழுத்து: A வெற்றி இலக்கங்கள்: 29 45 52 63

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ.18,881,222.80 | 01 |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000/- | - |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 11 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 226 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 401 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40/- | 10911 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6158 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 157299 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25242 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 24,617,802.80

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.


தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி அவசர: 2470662, 2470663
தொலைநகல்: 2473360, 2433631
இணையத்தளம்: www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.10,000,000.00

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்



நெஞ்சம் நெகிழும்...
# ஓராண்டு நினைவலைகள்



அமரர்
சுப்பையா
தட்சணாமூர்த்தி
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: 25.12.2009

மண்ணில்
01.08.1935

விண்ணில்
07.12.2008

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
அன்புடன் அறிவுரைகள் பல சொல்லி
பாரினில் உயர்ந்து வாழ வழிகாட்டிய
எங்கள் அன்பு அப்பாவே!
இன்று வானுறையும்
தெய்வமாகிவிட்ட
உங்கள் ஆத்மா சாந்தியடைய நாம்
எல்லோரும் எல்லாம் வல்ல
பரராஜசேகரனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

சிவன்கோயிலடி,
இணுவில் கிழக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மீறி இரவு விருந்தில் இலங்கை வீரர்கள்

கல்கத்தா, டிசெ. 25

இலங்கை அணி வீரர்கள் கொல்கத்தாவில் தாம் தங்கியிருந்த ஹோட்டலை விட்டுப் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளையும் மீறி - பொலிஸாருக்குத் தெரிவிக்காமல் இரவு விருந்து ஒன்றுக்காக வெளியே சென்று வந்துள்ளனர் என்று கூறப்படுகிறது. இது தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள் மீது பாகிஸ்தானில் வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவத்திற்குப் பிறகு இலங்கை அணி வீரர்கள் எங்கு சென்றாலும் அவர்களுக்குக் கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில்தான் கல்கத்தாவிலும் அவர்கள் தங்கியுள்ள ஹோட்டல் மற்றும் போட்டி நடக்கும் ஈடன் கார்டன் மைதானத்திலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இலங்கை வீரர்கள் பாதுகாப்பு விதிமுறைகளை மீறி நள்ளிரவில் ஹோட்டல் ஒன்றுக்குச் சென்று விருந்தில் பங்கேற்றுவிட்டுத் திரும்பியமை தெரியவந்துள்ளது.

மூத்த வீரரான ஜெயசூர்யா, டில்ஷான் உட்பட 7 வீரர்கள் இரவு 11 மணியளவில் பொலிஸாருக்குத் தெரிவிக்காமல் எந்தப் பாதுகாப்புமின்றி ஹோட்டலை விட்டு வெளியேறியுள்ளனர். இவர்களில் 5 பேர் விரைவாகவே தமது இருப்பிடம் திரும்பி விட்டனர்.




ஆனால், ஜெயசூர்யாவும், டில்ஷானும் ஜாலியாக இருந்து விட்டு அதிகாலை 2 மணிக்குத்தான் மீண்டும் தாம் இருந்த ஹோட்டலுக்கு வந்திருக்கிறார்கள். அவர்களின் நடவடிக்கை குறித்துப் பொலிஸார் கடும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஜெயசூர்யா-டில்ஷான் ஆகியோர் சம்பந்தப்பட்ட புகைப்படங்களும் வெளியாகியுள்ளன.

இதுகுறித்து கல்கத்தா நகர பொலிஸ் கமிஷனர் கவுதம் மோகன் சக்ரவர்த்தி கூறியவை வருமாறு:-

''இது பாதுகாப்பு தவறுதான். அதற்கு காரணம் நாங்கள் அல்ல. இலங்கைக் கிரிக்கெட் வீரர்கள்தான். ஹோட்டலை விட்டு வெளியே சொல்லக்கூடாது என்று இலங்கை அணி வீரர்களுக்கு நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். அப்படி இருந்தும் அவர்கள் வெளியில் சென்றிருக்கிறார்கள். நாங்கள் அவர்களை அடித்துத் தடுத்து நிறுத்த முடியாது.

இது பற்றி பெங்கால் கிரிக்கெட் சங்கத் தலைவருக்குத் தெரிவித்துள்ளோம். மேலும் மீண்டும் இது போன்று நடக்கக் கூடாது என்று இரு அணியினரையும் அறிவுறுத்தி இருக்கிறோம்'' - என்றார்.

## சச்சின், கங்குலி ரயிலில் பயணிக்க இலவசப் பயண அனுமதி

இந்தியக் கிரிக்கெட் வீரரான சச்சின் டெண்டுல்கர் மற்றும் முன்னாள் அணித் தலைவர் சௌரவ் கங்குலி ஆகியோருக்கு கல்கத்தாவில் நேற்றுமுன்தினம் பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்து கொண்ட மத்திய ரயில்வே அமைச்சரான மம்தா பானர்ஜி, கிரிக்கெட்டில் அவர்கள் செய்த சாதனைகளையும், அவர்களது பங்களிப்பையும் பாராட்டி வாழ்நாள் முழுவதும் குடும்பத்துடன் ரயிலில் இலவச பயணம் (ஏசி- முதல் வகுப்பு) செய்வதற்கான அனுமதியை வழங்கினார்.

## டெஸ்டிலிருந்து பொண்ட் ஓய்வு

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுகிறார் என நியூஸிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஷேன் பொண்ட் அறிவித்துள்ளார்.

உலகின் அதிவேகப் பந்து வீச்சாளர்களில் ஒருவர் நியூஸிலாந்தின் ஷேன் பொண்ட்.

நடந்து முடிந்த பாகிஸ்தான் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரின்போது அவர் காயமடைந்தார். வயிற்றுத் தசையில் கிழிவு ஏற்பட்டமையால், பாகிஸ்தானுக்கு எதிரான எஞ்சிய போட்டிகளில் அவர் விளையாடவில்லை.

இந்த நிலையில் காயம் காரணமாக டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் முடிவை நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

# களம் திரும்புகிறார் பிளின்ரொப்!

லண்டன், டிசெ. 25



முழங்காலில் சத்திரசிகிச்சை செய்து - பல மாத காலமாக ஓய்வில் இருந்து வந்த இங்கிலாந்து வீரர் பிளின்ரொப், துடுப்பாட்டப் பயிற்சியில் ஈடுபடவுள்ளார்.

இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரரான அன்ட்ரு பிளின்ரொப், தென்னாபிரிக்காவில் நடந்த இரண்டாவது ஐ.பி.எல்., தொடரின்போது காயமடைந்தார், அடுத்த நடந்த 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத் தொடரில் பங்கேற்கவில்லை.

பின்னர் சிறியகாலம் ஓய்வு எடுத்துவிட்டு, ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஆஷஸ் டெஸ் தொடரில் பங்கேற்று அசத்தி னார். இத்தொடரில் மீண்டும் இவரது முழங்காலில் வலி ஏற்படவே, சத்திரசிகிச்சை செய்து கொண்டார். அதன்பிறகு டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றார்.

இந்நிலையில் மீண்டும் துடுப்பாட்டப் பயிற்சியில் ஈடுபடவுள்ளமை குறித்து பிளின்ரொப் கூறியவை வருமாறு:-

''சத்திரசிகிச்சைக்குப் பின்னர் மீண்டும் ஒருநாள் மற்றும் 'ருவென்ரி-20' போட்டிகளில் மட்டும் பங்கேற்க முடிவு செய்துள்ளேன். விரைவில் துடுப்பாட்டப் பயிற்சியை ஆரம்பிக்கும் நான் பந்துவீச்சி இயந்திரத்துக்கு எதிராகவும் பயிற்சி செய்வேன். தொடர்ந்து கிரிக்கெட் தொடர்பான உடற்பயிற்சிகளையும் ஆரம்பிக்கவுள்ளேன்.

''அடுத்தவருட ஆரம்பத்தில் கிரிக்கெட்டுக்குத் திரும்பலாம் என்ற நம்பிக்கை உள்ளது. இதற்காக முட்டாள்தனமாக எதையும் செய்யப்போவதில்லை. எளிதான முறையில் மீண்டு வரவே முயற்சிப்பேன்.''

- இவ்வாறு பிளின்ரொப் கூறினார்.

# 'போட்டோ கிராபர்' ஆகும் ஆசையில் கும்ளே

''நான் எப்பொதும் வனவிலங்குகள் பற்றிய 'போட்டோ கிராபராக' இருக்க வேண்டும் என ஆசைப்படுபவன் - எனக் கூறியுள்ளார் கும்ளே.

கிரிக்கெட் வர்ணனையாளராக இருக்கிறார் என வந்த செய்திகளை மறுத்துள்ள கும்ளே, விரைவில் தனது சுயசரிதையை வெளியிட இருக்கிறார் எனவும் தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து கும்ளே கூறியுள்ளவை வருமாறு:-

ஓய்விற்குப் பிறகு என்ன செய்வது என்று நீண்ட நாள்களாக யோசித்துக் கொண்டு இருந்தேன். ஆனால், என்ன செய்வது என ஒன்றும் தெரியவில்லை. நான் வழக்கமாக 'டைரி' எழுதும் பழக்கம் உடையவன். அதனால், தற்போது என்னுடைய சுய சரிதையை எழுதுவதுதான் சரியாக இருக்கும் எனத் திட்டமிட்டுள்ளேன்.

நான் எப்பொதும் வனவிலங்குகள் பற்றிய 'போட்டோ கிராபராக' இருக்க வேண்டும் என ஆசைப்படுபவன். ஏற்கனவே இது சம்பந்தமாக புத்தகம் வெளியிடும் அளவிற்கு தேவையான படங்கள் சேகரித்து வைத்திருக்கிறேன். - என்றார்.

# பிலிப்பைன்ஸில் படகுகள் மோதி விபத்து: 27 பேர் மாயம்; துரித கதியில் மீட்புப்பணி

மணிலா, டிசெ.25

பயணிகள் படகொன்று மணிலா வளைகுடாவில் மீன்பிடிப் படகொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் 27 பேர் காணாமற் போய்விட்டனர் என பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

பயணப் படகிலும், மீன்பிடிப் படகிலும் விபத்து நிகழ்ந்த சமயத்தில் இருந்தோரின் மொத்த எண்ணிக்கை 73 ஆகும். மணிலா வளைகுடாவில் இப்படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதி அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளன என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

நீரில் தத்தளித்துக்கொண்டிருந்த 46 பேர் மீட்கப்பட்டனர். 27 பேர் காணாமற் போய்விட்டனர். இவர்களை மீட்பதற்கான பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என கரைப்பிராந்திய காவற்படைப் பேச்சாளர் கொமாண்டர் ஆர்கொண்டோ பலிலோ உள்ளூர் ஊடகமொன்றுக்குத் தெரிவித்தார்.

''பிலிப்பைன்ஸில் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் கிறிஸ்மஸ் விடுமுறைக்காக வீடு திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் ரயில்கள், வாகனங்கள் ஆகியவற்றில் மாத்திரமல்ல, பயணப் படகுகளிலும் பயணிக்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இந்த மரப் படகுகள் சிறியவை. இவற்றில் அளவுக்கு அதிகமான பயணிகள் ஏற்றப்படுகிறார்கள். படகு விபத்துகளுக்கு இதுவும் ஒரு காரணமாகும். கடற்கொந்தளிப்பு, புயல், சீரற்ற காலநிலை ஆகியவற்றாலும் விபத்துகள் நேர்கின்றன என்றும் அவர் ஏ.எவ்.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

ஒன்றுடன் ஒன்று மோதி இவ்விரு படகுகளும் மூழ்கியுள்ளன. விபத்து நிகழ்ந்த பகுதிக்கு இரு மீட்புக் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளன. அத்துடன் காணாமற் போனோரைத் தேடும் பணியில் ஈடுபட்டு உதவுமாறு பகுதி படகுகளும் கேட்கப்பட்டுள்ளன'' என்றும் பலிலோ குறிப்பிட்டார்.

1987 ஆம் வருட டிசம்பரில் டோனா பாஸ் என்னும் பயணக் கப்பலொன்று எண்ணெய்த் தாங்கியொன்றில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினார்கள்.




# பின்லேடனின் மனைவிகளில் ஒருவர் குழந்தைகளுடன் ஈரானில் வசிக்கிறார்

## நான்காவது புதல்வர் பேட்டியில் தெரிவிப்பு

லண்டன், டிசெ. 25

அல்-குவைதா அமைப்பின் தலைவர் பின்லேடனின் மனைவிகளில் ஒருவரும், குழந்தைகளும் இப்போது ஈரானின் தலைநகரான தெஹ்ரானிலுள்ள ஓர் இரகசிய வளாகத்தில் வசித்து வருகிறார்கள் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

பின்லேடனின் அல்-குவைதா தீவிரவாதிகள் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தியபோது, பின்லேடனும் அவரது மனைவிகளில் ஒருவரும், குழந்தைகளும் ஆப்கானிஸ்தானில்தான் வசித்து வந்தனர்.

பின்லேடனைப் பிடிப்பதற்காக அமெரிக்கா ஆப்கானிஸ்தான் மீது படையெடுத்தது. அச்சமயம் இவர்கள் அங்கிருந்து மாயமாகிவிட்டார்கள்.

இவர்களில் பின்லேடனைத் தவிர மற்றவர்கள் தற்போது ஈரானில் தங்கியிருக்கிறார்கள் என்ற தகவல் வெளியாகியுள்ளது. ஈரானில் தெஹ்ரான் நகரிலுள்ள இரகசிய வளாகத்தில் பின்லேடனின் குடும்பமும், உறவினர்களும் வசித்துவருகிறார்களாம்.

பின்லேடனின் 4 ஆவது புதல்வர் ஓமர் (வயது 29) இது குறித்து பத்திரிகையொன்றுக்குத் தாம் அளித்துள்ள பேட்டி யொன்றில், ''பின்லேடனின் மனைவிகளில் ஒருவரும், 6 குழந்தைகளும், பேரக்குழந்தைகளில் 11 பேரும் அந்த வளாகத்தில் வசிக்கிறார்கள்'' எனத் தெரிவித்துள்ளார்.

குடும்பத்தினர் என்னை கடந்த நவம்பர் மாதம் சந்தித்தனர். அப்போது அவர்கள் ஆப்கானிஸ்தானிலிருந்து தாங்கள் ஈரானுக்குத் தப்பி ஓடிவந்த விடயத்தைத் தெரிவித்தனர். அவர்கள் அங்கு தங்கியுள்ளமை ஈரான் அரசுக்குத் தெரியாது''என்றும் அவர் தெரிவித்தார்.

# அமெரிக்கப் படைகளை எதிர்க்க ஆப்கானுக்குள் பாக். தலிபான்கள்

## துணைத் தலைவர் ரஹ்மான் தெரிவிப்பு

ஆப்கானிஸ்தானில் அல்-குவைதா தீவிரவாதிகளையும், தலிபான் தீவிரவாதிகளையும் ஒடுக்க அமெரிக்கா அனுப்பவுள்ள கூடுதல் படைகளை எதிர்க்க பாகிஸ்தானிலிருந்து ஆயிரக்கணக்கான தலிபான்கள் ஆப்கானிஸ்தானுக்குள் ஊடுருவி வருகின்றனர் என பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் துணைத் தலைவர் வலியுர் ரஹ்மான் வெளிநாட்டு நிருபர் ஒருவருக்குத் தாம் அளித்துள்ள பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

2001 ஆம் ஆண்டு ஆப்கான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது. இதில் ஆட்சியை இழந்த தலிபான்கள், பாகிஸ்தான் எல்லையில் தஞ்சம் புகுந்துள்ளனர். தற்போது இவர்கள், ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள வெளிநாட்டுப் படைகள்மீது கெரில்லா தாக்குதலை நடத்தி வருகின்றார்கள்.

இவர்களை சமாளிப்பதற்காக அமெரிக்கா அடுத்த ஆண்டு கூடுதலாக 40 ஆயிரம் படைகளை அனுப்ப உறுதியளித்துள்ளது. இந்தக் கூடுதல் படைகளைச் சமாளித்துப் போரிடுவதற்காக பாகிஸ்தானிலுள்ள தலிபான்கள் பலர் ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்படுகிறார்கள் என பாகிஸ்தான் தலிபான் அமைப்பின் துணைத் தலைவர் வலியுர் ரஹ்மான் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

''அமெரிக்கப் படைகளை எதிர்கொள்ள அல்-குவைதாவுக்கும், தலிபான்களுக்கும் எங்கள் உதவி தேவைப்படுகிறது. இதனால் ஆயிரக்கணக்கான எங்கள் வீரர்களை அங்கு அனுப்பி வைக்கிறோம்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# செவ்வாய்க்கு குரங்கை அனுப்ப ரஷ்யா திட்டம்

மாஸ்கோ, டிசெ. 25

செவ்வாய் கிரகத்துக்கு குரங்கை அனுப்புவதற்கு ரஷ்ய விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளார்கள். விண்கலத்தில் குரங்கு விண்வெளிக்கு பயணம் செய்யும் போது அதை கவனித்துக்கொள்ளும் முழு பொறுப்பும் ஒரு ரோபோட் வசம் ஒப்படைக்கப்படவிருக்கிறது.

ரஷ்யர்கள் முதன்முறையாக விண்வெளிக்கு 1983 ஆம் ஆண்டு குரங்குகளை அனுப்பினார்கள். ஜோர்ஜியாவிலுள்ள இன்ஸ்டிடியூட் ஒப் எக்ஸ்பெரி மெண்டல் பேதாலஜி அண்ட் தெரபி என்ற ஆராய்ச்சி நிலையம் தான் அப்போது விண்வெளி பயணத்துக்கு குரங்குகளை அனுப்பி வைத்தது.

இப்போதும் அந்த ஆராய்ச்சி நிலையம் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்புவதற்காக குரங்கொன்றை வழங்கவிருக்கிறது. இது தொடர்பாக ஆராய்ச்சி நிலையத்துடன் ரஷ்யாவின் கொஸ்மனாடிக் எகாடமி பேச்சு நடத்தி வருகிறது.

இதற்கிடையில் செவ்வாய் கிரகத்துக்கு குரங்கை அனுப்பும் திட்டம் ரஷ்யாவில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. விண்கலத்தில் செவ்வாய்க்கிரகத்துக்கு குரங்கை அனுப்புவதற்கு மிருகவதை எதிர்ப்புக் குழு எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனித் தெலுங்கானா முடிவு நிறுத்திவைப்பு; எதிர்ப்பலையால் மத்திய அரசு பின்வாங்கல்

புதுடில்லி, டிசெ. 25

ஆந்திராவில் போராட்டம் தீவிரம் அடைந்ததைத் தொடர்ந்து, தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்கும் முடிவை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது.

ஆந்திர மாநிலத்தை இரண்டாகப் பிரித்து, தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண்டும் என்று தெலுங்கானா ராஷ்டிரீய சமிதி கட்சி போராட்டம் நடத்தி வந்தது.

அந்தக் கட்சியின் தலைவர் சந்திரசேகர ராவ், இந்தக் கோரிக்கையை வற்புறுத்தி கால வரையற்ற உண்ணாவிரதம் இருந்தார். இந்த நிலையில், தனித் தெலுங்கானா மாநிலக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட மத்திய அரசு, அதற்கான நடைமுறைப் பணிகள் தொடங்கப்படும் என்று அறிவித்தது.

இந்த அறிவிப்புக்கு கடலோர ஆந்திரா மற்றும் ராயலசீமா பகுதி மாவட்டங்களில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. ஐக்கிய ஆந்திராவை வற்புறுத்தி அந்தப் பகுதியைச் சேர்ந்த அனைத்துக் கட்சியினரும் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ் கட்சி உள்ளிட்ட முக்கிய கட்சிகளை சேர்ந்த எம்.பி. மற்றும் எம்.எல்.ஏக்கள் தங்கள் பதவியை ராஜினாமாச் செய்தனர். இதனால் மத்திய அரசுக்கு தர்மசங்கடமான நிலை ஏற்பட்டது. பிரதமர் மன்மோகன்சிங், சோனியா காந்தி மற்றும் காங்கிரஸ் கட்சியின் மேலிட தலைவர்கள் இந்தப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண்பதற்காக தீவிர ஆலோசனை நடத்தினர்.

அதைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினையில் பாதுகாப்பான ஒரு முடிவை எடுக்க மத்திய அரசு தீர்மானித்தது. மத்திய அமைச்சர்கள் பிரணாப் முகர்ஜி, ப.சிதம்பரம் ஆகியோர் நேற்றுமுன்தினம் மாலை, சோனியாகாந்தியின் வீட்டுக்குச் சென்று முக்கிய தலைவர்களுடன் மீண்டும் ஆலோசனை நடத்தினர்.

இந்தக் கூட்டத்தில், தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்கும் முடிவை தற் காலிகமாக நிறுத்தி வைப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது எனத் தெரிகிறது.

மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் இந்தத் தகவலை பின்னர் செய்தியாளர்களிடம் சூசகமாக வெளியிட்டார்.

# இந்தியத் தேசியக்கொடி இரவிலும் பறக்கலாம்

புதுடில்லி, டிச. 25

தேசியக்கொடியை இரவிலும் பறக்க விடுவதில் ஆட்சேபம் இல்லை - என்று மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தேசியக் கொடிக்கான விதிமுறைகளின் படி, கொடியை சூரியன் மறைந்த பின்னர் பறக்க விடக் கூடாது என்ற விதி இருந்து வருகிறது. தொழிலபதிபரும் காங்கிரஸ் எம்.பியுமான ஜிண்டால் இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு கடந்த ஜூன் மாதம் கடிதம் எழுதினார்.

அதில், மலேசியா, அபுதாபி உட்பட பல நாடுகளில் அந்த நாட்டின் தேசியக் கொடிகள் இரவிலும் பறக்கின்றன என்றும் இந்தியாவிலும் அதுபோல இரவிலும் தேசியக் கொடி பறக்க அனுமதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். இதைப் பரிசீலித்த உள்துறை அமைச்சகம் நினைவுச் சின்னங்களிலும் பிரமாண்ட கொடி மேடைகளிலும் தேசியக் கொடி இரவிலும் பறக்க ஆட்சேபம் இல்லை என்று தெரிவித்துள்ளது.

# தெலுங்கானா விவகாரம் குறித்து பிரேரணை தாக்கல் செய்யுங்கள்

## ஆந்திரப் பா.ஜ.க. வலியுறுத்து

ஐதராபாத், டிசெ. 25

ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைப்பதற்கான பிரேரணையை நாடாளுமன்றத்தில் உடனடியாக தாக்கல் செய்யும்படி மத்திய அரசை ஆந்திர மாநில பா.ஜ.க. வலியுறுத்தி உள்ளது.

இதுகுறித்து ஐதராபாத்தில் நேற்றுமுன்தினம் அளித்த பேட்டியில் ஆந்திர மாநில பா.ஜ.க. தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான பண்டாரு தத்தாத்ரயா கூறியவை வருமாறு -

ஆந்திர மாநில அரசு கூட்டிய அனைத்து கட்சிக் கூட்டத்தில், தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க எல்லா முக்கிய கட்சிகளும் ஒப்புக் கொண்டன. அதன் பிறகே தனி மாநிலம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மேற்கொண்டார். தனி மாநிலம் அமைக்கும் முடிவில் இருந்து மத்திய அரசு பின்வாங்கக் கூடாது. இந்தப் பிரச்சினையில் ஆந்திர மாநில ஆளும் காங்கிரஸும், தெலுங்கு தேசமும் இரட்டை வேடம் போடுகின்றன. இதை எதிர்த்து பா.ஜ.க. போராட்டம் நடத்தும்.

தெலுங்கானா மாநிலம் அமைப்பதை எதிர்த்து 140 எம்.எல்.ஏக்கள் ராஜினாமா செய்துள்ளனர். இதை ஏற்பது தொடர்பாக முடிவு எடுக்கவும், ஆந்திராவில் இருந்து தெலங்கானாவை அமைதியான முறையில் பிரிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தி கொடுக்கவும் சட்டப்பேரவையை உடனடியாக கூட்ட வேண்டும். தனி மாநிலத்தை எதிர்த்து தொடர்ந்து நடந்து வரும் போராட்டங்களால் கடுமையான வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என முதல்வர் ரோசய்யா கூறியிருக்கிறார். எனவே, இந்தப் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காணும்படி பிரதமருக்கு அவர் வேண்டுகோள் விடுக்க வேண்டும் - என்கிறார்.

# இந்தியச் செய்திகள்



எம்.ஜி.ஆரின் நினைவுநாளை ஒட்டி சென்னை கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதா நேற்றைய தினம் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியபோது.....

# சீன வெடிகுண்டுகள் சபரிமலையில் மீட்பு

திருவனந்தபுரம், டிசெ.25

சபரிமலையில் சக்தி வாய்ந்த 20 சீன வெடிகுண்டுகள் மீட்கப்பட்டன. இதனால், பக்தர்கள் பீதி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து தேவசம் குழு மற்றும் உள்துறை அமைச்ச உயர் அதிகாரிகள் அவசர ஆலோசனை நடத்த உள்ளனர்.

சபரிமலையில் ஐயப்பன் கோயில் சன்னிதானம் அருகிலும் பம்பையிலும் 2 தினங்களில் 4 தடவைகள் வெடிகுண்டுகள் வெடித்தன. இதுபற்றி விசாரித்த பொலிஸார், யானைகள் உள்ளிட்ட காட்டு விலங்குகளை விரட்டுவதற்காக பக்தர்கள் பட்டாசுகளை வெடித்தனர் என முதலில் கூறினர். தொடர்ந்து நடத்திய விசாரணையில், அவை பட்டாசுகள் அல்ல; சக்தி வாய்ந்த வெடிபொருள்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டன.

இதைத்தொடர்ந்து, தீவிர சோதனைக்கு பிறகே கோயிலுக்குள் பக்தர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். வெடிபொருள்களை வீசியவர்கள் காட்டுப்பாதை வழியாக தப்பிச் சென்றதும் விசாரணையில் தெரிந்துள்ளது. இதனால், சபரிமலை அருகே உள்ள வனப்பகுதியில் கண்காணிப்புக்காக 24 கமராக்களைப் பொருத்த தேவசம் குழு முடிவு செய்துள்ளது.

கடந்த 2 நாள்களாக வனப்பகுதியில் பொலிஸார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். அப்போது பம்பை அருகே உள்ள ஆராட்டுகடவு பகுதியில் 20 சக்தி வாய்ந்த சீனக் குண்டுகள் சிக்கின. பொலிஸார் அவற்றைப் பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச் சென்று செயலிழக்க செய்தனர். இதனால், சபரிமலையில் பக்தர்கள் இடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

# ஆந்திராவில் கலவரத்தைத் தூண்டிவிடும் சந்திரசேகர மீது வழக்குத் தொடருவேன்

## நடிகர் மோகன்பாபு ஆவேசம்

நகரி, டிசெ. 25

ஆந்திர மக்களுக்கு எதிராக கலவரத்தை தூண்டும் வகையில் பேசிவரும் சந்திரசேகர ராவ் மீது வழக்குத் தொடரப்படும் என்று - நடிகர் மோகன்பாபு கூறினார்.

தனித் தெலுங்கானாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, கடலோர ஆந்திரா மற்றும் ராயலசீமா பகுதி மாவட்டங்களில், நேற்றுமுன்தினமும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் காலை முதல் இந்த மாவட்டங்களில் 48 மணி நேர முழு அடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடப்பட்டு இருந்தது. விசாகப்பட்டினம், கிருஷ்ணா மற்றும் சித்தூர் மாவட்டங்களில் இந்த போராட்டம் முழு அளவில் நடைபெற்றது. பஸ், ரயில்க்ள் ஓடவில்லை. பல இடங்களில் ரயில் மறியல் போராட்டம் நடைபெற்றது.

கடந்த செவ்வாயன்று தெலுங்கானா பகுதியில் நடிகர் மோகன்பாபுவின் மகன் நடித்த சினிமாப் படப்பிடிப்பு நடந்தபோது தெலுங்கானா ஆதரவு மாணவர்கள், படப்பிடிப்பு குழுவினர் மீது தாக்குதல் நடத்தினர்.

இதற்கிடையில், நடிகர் மோகன்பாபு நேற்றுமுன்தினம் முதல்வர் ரோசய்யாவைச் சந்தித்து ஐதராபாத்தில் சகஜ நிலைமை திரும்ப நடவடிக்கை எடுக்கும்படி வற்புறுத்தினார். அவரிடம் 24 மணி நேரத்தில் நிலைமை சீரடைந்துவிடும் என்று ரோசய்யா உறுதியளித்தார்.

பின்னர் பேட்டியளித்த மோகன்பாபு -

ஐக்கிய ஆந்திராவை வலியுறுத்தி ஐதராபாத்தில் அமைதிப் பேரணி நடத்தப்படும். ஆந்திரப் பிரதேச மக்களுக்கு எதிராக கலவரத்தைத் தூண்டும் வகையில் பேசி வரும் சந்திரசேகர ராவ் மீது வழக்குத் தொடருவேன் என்று அறிவித்தார்.

ஐதராபாத்தை சொந்தம் கொண்டாடினால் மோகன்பாபுவின் நாக்கை அறுப்போம் என்று சந்திரசேகர ராவ் எச்சரிக்கை விடுத்து இருந்தார். அதற்கு பதிலளித்த மோகன்பாபு, தான் எங்கும் ஓடி ஒளியவில்லை. ஐதராபாத்தில்தான் இருப்பதாகவும், தைரியம் இருந்தால் நாக்கை அறுத்துப்பார் என்றும் சவால் விடுத்தார். ஐதராபாத் இந்தியாவின் ஒரு அங்கம். அதற்கு யாரும் சொந்தம் கொண்டாட முடியாது என்றும் மோகன்பாபு கூறினார்.

# இடைத்தேர்தல் முடிவு: ஜனநாயகத்தின் தோல்வி

## விஜயகாந்த் அறிக்கை

சென்னை, டிசெ.25

திருச்செந்தூர் மற்றும் வந்தவாசி இடைத் தேர்தல் முடிவுகளில் எது நடக்கக்கூடாதோ, அது நடந்துள்ளது. ஜனநாயகத்தின் - தர்மத்தின் தோல்வி - என்று விஜயகாந்த் கூறியுள்ளார்.

இதுகுறித்து தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

எது நடக்கக்கூடாதோ அது நடந்துள்ளது. திருச்செந்தூர் மற்றும் வந்தவாசி இடைத்தேர்தல்களின் முடிவு, ஜனநாயக முறைக்கு தீமை விளைவிப்பதாகும். இந்தத் தற்காலிக வெற்றி ஆளுங்கட்சியினருக்கு இன்று மகிழ்ச்சி தரலாம். ஆனால் இது நாளாவட்டத்தில் இந்த கட்சியினருக்கே ஆபத்தாகி விடும். வினை விதைத்தவன் வினை அறுப்பான். ஏற்கனவே அண்ணா தி.மு.க. இத்தகைய தேர்தல் முறையை கையாண்டு இன்று அதன் பலனை அனுபவிக்கிறது. இதே பாடம் நாளை தி.மு.கவிற்கும் கிடைக்கத் தவறாது.

வெற்றி, தோல்வி சகஜம் என்று வேதாந்தம் பேசி பயனில்லை. இந்த அரசியல் தோல்வி. ஏழைகளின் தோல்வி, ஜனநாயகத்தின் தோல்வி. தர்மத்தின் தோல்வியாகும். இதனால் தமிழ்நாடு பெரிதும் பாதிக்கப்படும். ஆகவே, தமிழ்நாட்டு மக்கள் விழிப்புடன் செயற்பட்டு விரைவில் இதற்கு மாற்றம் காண வேண்டியது அவசியமாகும்.

இந்த தர்மயுத்தத்தில் எதையும் எதிர்பாராமல் தே.மு.தி.க. தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. இந்த இடைத்தேர்தல் என்னும் தியாக வேள்வியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும் என்றும் என் இதயத்தில் நீங்காத இடம் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேர்தல்கள் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் நடைபெற வேண்டும். வாக்காளர்களுக்கு தாராளமாக லஞ்சம் கொடுத்ததை ஊடகங்களும், பத்திரிகைகளும் வெளி கொண்டு வந்தன. தேர்தல் பார்வையாளர்களும் இதை நன்கு அறிவார்கள். அவற்றைக் கருத்தில் கொண்டு நேர்மையான தேர்தலை நடத்த வேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ள தேர்தல் கமிஷன் இந்த இடைத்தேர்தல்களை ரத்து செய்திருக்க வேண்டும்.

அப்பொழுதுதான் தேர்தல்களில், ஊழல் பணம் கொடுப்பது தவிர்க்கப்பட்டு நேர்மையான முறையில் தேர்தல் நடைபெறும். எத்தனை முறை பணம் கொடுத்தாலும் அத்தனை முறையும் தேர்தல் ரத்து செய்யப்படும் என்ற நிலை உருவாகுமானால் தேர்தல்கள் நேர்மையாக நடைபெற வழிபிறக்கும் தேர்தல் ஆணையகம் இனியாவது அத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று நாட்டு மக்கள் எதிர்பார்க்கிறார்கள் - என்றுள்ளது.

# உள்நாட்டுப் பாதுகாப்புக்கு தனி அமைச்சகம் அவசியம்

## சிதம்பரம் யோசனை



புதுடில்லி, டிச. 25

பாதுகாப்பு தவிர்ந்த பிற விடயங்களைக் கவனிக்க உள்துறை அமைச்சகத்தைப் பிரித்து தனி அமைச்சகம் ஏற்படுத்த வேண்டும் - என்று மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் யோசனை தெரிவித் துள்ளார்.

உள்நாட்டுப் பாதுகாப்பு விவகாரங்கள் தவிர்ந்த பிற விவகாரங்களைக் கவனிப்பதற்கு தனி அமைச்சகம் அவசியமாகிறது. உள்துறை அமைச்சர் தனது கவனம், சக்தி முழுவதையும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்களிலேயே செலவிட வேண்டும் - என்றும் அவர் கூறினார்.

மத்திய புலனாய்வுத் துறையின் (ஐ.பி.) நூற்றாண்டு விழாவையொட்டி டில்லியில் நடந்த நிகழ்ச்சியில் மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் பேசியவை வருமாறு -

உள்நாட்டு பாதுகாப்புக்கு சிறிதும் தொடர்பு இல்லாத பல பணிகளை உள்துறை அமைச்சகம் செய்ய வேண்டி இருக்கிற உதாரணத்துக்கு சுதந்திரப் போராட்ட வீரர்கள் விவகாரம், தடய அறிவியல். மத்திய, மாநில உறவுகள், பேரிடர் நிர்வாகம, மக்கள் தொகை கணக்கெடுப்பு போன்ற பணிகளையும் உள்துறைதான் கவனிக்க வேண்டியுள்ளது. அதே சமயம் உள்நாட்டு பாதுகாப்புக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்க வேண்டி உள்ளது.

அனைத்துப் பணிகளையும் உள்துறை செய்ய முடியாது. உள்துறை அமைச்சர் தனது முழு நேரத்தையும் உள்நாட்டு பாதுகாப்பை கவனிப்பதில் செலவிட வேண்டும். அதற்காக உள்துறை அமைச்சகத்தை 2 ஆகப் பிரிக்க வேண்டும். உள்நாட்டுப் பாதுகாப்புக்கு நேரடியாகத் தொடர்பு இல்லாத பணிகளைக் கவனிக்க தனித் துறையை உருவாக்க வேண்டும்.

அடுத்த ஆண்டுக் கடைசிக்குள் தீவிரவாத எதிர்ப்பு தேசிய மையம் ஒன்று உருவாக்கப்படும். அது முழுக்க முழுக்க தீவிரவாத எதிர்ப்புப் பணிகளைத்தான் கவனிக்கும். தீவிரவாதத் தாக்குதலைத் தடுப்பது, தாக்குதல் நடக்கும் பட்சத்தில் தீவிரவாதிகளுக்கு சரியான பதிலடி கொடுப்பது ஆகியவைதான் அதன் பணியாக இருக்கும். அந்த மையம் நாட்டுக்கு எதிராக நடக்கும் அனைத்து வகையான தீவிரவாத செயல்களையும் அது முறியடிக்கும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நத்தார் தினக் கொண்டாட்டங்களின் போது பாலன் யேசுவின் பிறப்பை ஒட்டி யாழ். நகரிலும் மற்றும் பல இடங்களிலும் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.
யாழ். போதனா வைத்தியசாலையிலும், யாழ். பெரிய கோயிலிலும் அமைக்கப்பட்ட நத்தார் பந்தல்களை மேல்வரிசையிலும், வர்த்தக நிலையம், யாழ். பொது நூலகம், சதோச மற்றும் தேவாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த நத்தார் பந்தல்களை கீழ் வரிசையிலும் காணலாம். (படங்கள் - சுகந்தன்)

## காலநிலை இன்று சீராகும்

யாழ்ப்பாணம்,டிசெ.25

குடாநாட்டில் சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலை இன்று சீராகும் என்று வழிமண்டலத் திணைக்கள யாழ். அலவலகம் தெரிவித்துள்ளது.

எனினும் காலையிலும் மாலையிலும் இலேசான மழை பெய்யும், பெரிய அளவில் மழை பெய்யும் சாத்தியம் இல்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நேற்றுக் காலை 8.30 மணி வரை 68.4 மி. மீற்றர் மழை பெய்துள்ளது என்றும் அந்த அலுவலகம் கூறியுள்ளது. (அ - 1)

## சுனாமி அனர்த்த நினைவு நிகழ்வு அரச அலுவலகங்களில் நேற்று

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்.குடாநாட்டு அரச அலுவலகங்களில் நேற்று காலை 9.17 மணியளவில் சுனாமி அனர்த்தத்தின் போது கொல்லப்பட்டவர்கள் மற்றும் இயற்கை அனர்த்தம், செயற்கை அனர்த்தங்களின் போது கொள்லலப்பட்டவர்களை நினைவு கூரும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் அனர்த்த நிவாரண அரசு ஆகியன இலங்கை முழுவதும் இந்த நிகழ்வை நிகழ்த்தும் படி சுற்று நிருபம் மூலம் பணிக்கப்பட்டு இருந்தது. இதற்கு அமைவாக யாழ். குடாநாட்டு பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்கள் உட்பட ஏனைய அலு வலகங்களிலும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுடன் நினைவுரைகளும் இடம்பெற்றன.

(1 - 68)

## பருத்தித்துறையில் 511 பேருக்கு நேற்று மீள்குடியமர்வுக் கொடுப்பனவு வழங்கப்பட்டது

வடமராட்சி,டிசெ.25

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியேறிய மக்களில் ஒரு தொகுதியினருக்கான 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு சமூக சேவைகள் மற்றம் சமூக நலத்துறை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்று வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்டு பருத்தித்துறைப் பிரதேச செயலகப் பிரிவில் மீள்குடியேறியவர்களில் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவினைப் பெறாத சுமார் 511 பேருக்கு இந் தப் பிரதேச செயலகத்தில் வைத்து இக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

மீள்குடியேறி இதுவரை 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு கிடைக்காதவர்களுக்கு இன்னும் ஓரிரு தினங்களில் அக் கொடுப்பனவு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (7-236)

## உரிமைக்கு வழிதிறக்கும் என்ற நம்பிக்கையோடு நத்தார்ப் பெருநாளைக் கொண்டாடுவோம்

யாழ்ப்பாணம்,டிசெ.25



சமாதானத்துக்கும் அமைதிக்கும் எதிரான இருள் விலகிய நத்தார் பெருநாளை, இனிவரும் காலங்களில் மக்களின் உரிமைக்கு வழிதிறக்கும் என்ற நம்பிக்கையோடு நாம் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடுவோம்.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலா ளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள நத்தார் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

ஒரு ஏரெது மன்னனை காப்பாற்றுவதற்காக எல்லா குழந்தைகளும் கொல்லப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டது போல், சமாதானத்தின் எதிரியை காப்பாற்றுவதற்காக இங்கு எமது மக்களும் கொல்ப்பட நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தார்கள். ஆனாலும் இந்த அவல நிலையில் இருந்து எமது மக்கள் இழப்புக்களின் பின்னராவது மீட்சி பெற்றிருப்பதும், சமாதானத்தின் தூதுவர்களை சமாதானத்தின் எதிரிகளால் அழிக்க முடியாமல் போனமையும் நியாயத் தீர்ப்பாகும்.

சமாதானத்தையும், அமைதியையும், சமவுரிமையையும், மக்களின் கண்முன்னால் கொண்டுவந்து நிறுத்துவதற்காக எமது மக்களின் இந்த நம்பிக்கையை ஏற்று நடைமுறைச்சாத்தியமான வழிமுறைகளில் எல்லா பிரச்சனைகளில் இருந்தும் அனைத்து மக்களையும் விடுவிக்க உழைப்பதற்கு தொடர்ந்தும் மக்கள் பக்க துணையாக இருக்கவேண்டும்.

நாம் கொல்லப்பட்டுவிடுவோமோ என்ற மரண அச்சத்துடன் எங்கள் குழந்தைகளோடும், உறவுகளோடும் பாதுகாபான இடம்தேடி ஒட வேண்டிய அவலங்கள் இனி இல்லை. அவ்வாறு யுத்த சூழலுக் குள் இருந்து தப்பித்து ஓடி வந்த எமது உறவுகளின் கண்ணீர்களையும், காயங்களையும் துடைத்து அனைத்து மக்களையும் சுதந்திர பிரஜை களாக ஒளி பிறந்த நித்திய சமாதான தேசத் தில் வாழவைப்போம். இந்த நம்பிக்கை யோடு நத்தார் தினத்தை கொண்டாடும் அனைத்து உறவுகளுக்கும் தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன் என்றுள்ளது. (1)

## கரம்பகம் பகுதியிலிருந்து மண்டை ஓடு மீட்பு; 11 மாதங்களுக்கு முன் காணாமற்போன உப தபாலதிபருடையதா?

யாழ்ப்பாணம், டிசெ.25

எழுதுமட்டுவாழ், கரம்பகம் பகுதியில் பற்றைக்காட்டுப் பகுதியில் இருந்து ஆண் ஒருவரின் மண்டையோடு நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 19 ஆம் திகதி முதல் காணாமற்போன குணானந்தன் குலதாஸ் (வயது 31) என்ற உபதபாலதிபரின் மண்டை ஓடாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

மண்டை ஒட்டுடன் கிழிந்து கந்தலாகிக் கிடந்த துணிகள் அவர் அணிந்திருந்த ஆடைகளே என்று உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

கொடிகாமம் பொலிஸார் இச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து நீதிமன்ற நீதிவான், யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி உட்பட பலர் சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

மனித மண்டையோடும், கிழிந்து துண்டுகளான நிலையில் துணிகளும் அவ் விடத்தில் காணப்பட்டன. (அ-1-207)

## நிவாரணமாகப் பழுதடைந்த அரிசி வழங்கினால் தகவல் தருமாறு அமைச்சர் டக்ளஸ் கோருகிறார்

யாழ்ப்பாணம், டிசெ.25

நிவாரணமாக வழங்கப்படும் வெள்ளைப் பச்சை அரிசி பழுதடைந்திருந்தால் உடன் தனது கவனத்துக்கு கொண்டு வர வேண்டும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா மக்களிடம் கேட்டுள்ளார்.

குடாநாட்டில் பொதுமக்களுக்கு தற்போது நிவாரணமாக வழங்கப்பட்டு வரும் வெள்ளைப் பச்சை அரிசி மக்கள் பாவனைக்கு உகந்ததாக இல்லை இவ் அரிசி பழுந்தடைந்த நிலையில் இருந்தது என பொதுமக்களின் பலர் நேற்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனவே யாழ். குடாநாட்டில் எந்தவொரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளிலும் இவ்வாறான பழுத டைந்த மக்கள் பாவனைக்கு உதவாத அரிசி வழங்கப்பட்டால் உடனே தனது கவனத்துக்குக் கொண்டு வரும்படி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொதுமக்களிடம் கேட்டுள்ளார்.

(1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒளி விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.25.

திருநெல்வேலி சத்திய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ் தின நிகழ்வுகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு சாயி நிலையத்தில் இடம்பெறவுள்ளன.

அருட்திரு எவ்.எச்.ஜெயசேகரனின் கிறிஸ்மஸ் நற்செய்தி, இசை நாடகம், கிறிஸ்தவ கீதங்கள் என்பன இடம்பெறும். (01)

* * *

யாழ்ப்பாணம், டிசெ.25

சமூக அபிவிருத்தி மன்றத்தன் ஒளி விழா நாளை சனிக்கிழமை காலை 11 மணிக்கு மன்றத் தலைவி திருமதி ஜெபமணி ஜோசவ் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களில் இணையத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினரானக யாழ். புனித மரியன்னை தேவாலய பங்குத் தந்தை அருட்பணி ஆர்.எச்.சகாயம் அடிகள் கலந்து சிறப்பிப்பார்.

இந்த நிகழ்வில் மன்றத்தின் கழக அங்கத்தவர்களும் பணியாளர்களும் சி.எச்.எ.நிறுவனம், சொண்ட் நிறுவனம், மகளிர் அபிவிருத்தி நிறுவனம் ஆகியவற்றின் பணிப்பாளர்களும் கலந்துகொள்வர். (50-224)

* * *

வண்ணை,டிசெ.25

குருநகர் கார்மேல் மாதா ஆலய நிர்வாக சபையின் அனுசரணையுடன் இளைஞர் ஒன்றியம் எடுக்கும் ஒளிவிழா நாளை மறுதினம் (27.12.2009) ஞாயிற்றுக் கிழமை பிற்பகலல் 4.30 மணிக்கு கார்மேல் மண்டபத்தில் ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினராக அருட்திரு எ.பி. வின்சன்ற் (ஓ.எம்.ஐ.) அடிகளாரும், சிறப்பு விருந்தினராக திருமதி எ.எ. அலோசியஸ் ஆகியோர் கலந்துகொள்வர்.

ஒளிவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கல்விசார் போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு விழாவில் பரிசில் வழங்கப்படும்.

* * *

(160)

யாழ்ப்பாணம்,டிசெ.25

கோப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் ஒளிவிழா நிகழ்வுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

பிரதேச செயலர் ரி.ஏ. மோகன்ராஸ் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் விருந்தினர்களாக கோப்பாய் பங்குத்தந்தை அருட்தந்தை குறூஸ் அடிகள், உரும்பிராய் புனித மைக்கல் தேவாலயத்தைச் சேர்ந்த யூட் நிக்சன் அடிகள், இருபாலை கானான் ஜெப ஆலயத்தைச் சேர்ந்த போதகர் ஈபன் ஏபிரகாம் ஆகியோர் கலந்துகொள்வர்.

கிறிஸ்தவப் பாடல்கள் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (01)

# ரணில் மீண்டும் இந்தியாவுக்கு

கொழும்பு, டிசெ. 25

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க அடுத்துவரும் நாள்களில் மீண்டும் ஒரு தடவை இந்தியாவுக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார் என ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்விஜயத்தின்போது அவர் இந்திய அரசியல் தலைவர்கள் பலரையும் சந்தித் துக் கலந்துரையாடவுள்ளார் என்றும் கூறப் பட்டது.

எதிர்க்கட்சித் தலைவரின் இந்திய விஜயம் நேற்று இடம்பெறவிருந்த போதிலும் அது பின்னர் இறுதிநேரத்தில் பிற் போடப்பட்டதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

## பல வருடங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிரம்பிக்களைகட்டியது.

கடந்தகாலங்களில் பலத்த போக்கு வரத்துக் கட்டுப்பாடுகள், பாதுகாப்புக் கெடு பிடிகளுக்கு மத்தியில் மட்டுப்படுத்தப் பட்ட அளவில் நடத் தப்பட்ட நத்தார் பூசை களை இம்முறை மனப் பய மற்ற, உணர்வுடன் நடத்தவும் ஏனைய கொண் டாட்டங்களை நடத்தவும் முடிந்தது.

நள்ளிரவு வேளைகளில் எல்லாப் பிர தேசங் களிலும் உள்ள தேவாலயங்களில் பெரும் எண்ணிக் கையானோர் பங்குபற்றினர். பல வருடங்களுக் குப் பின்னர் யேசு பிரா னின் பிறப்பை பட்டாசு கொளுத்தியும், நந்தார் நினைவுகளை சிறப்பாக நடத்தி யும் கொண்டாட முடிந்தது என்று கிறிஸ் தவ மக்கள் தெரிவித்தனர்.

நந்தாரை ஒட்டி விசேட பூசை வழி பாடுகள் கிறிஸ்தவ தேவாலயங்களில் உணர்வு பூர்வமாக நள்ளிரவு இடம்பெற்றன. பெரும் எண்ணிக் கையானோர் இந்த வழிபாடுகளில் பங்கேற்றனர்.

யாழ். நகரில் மரியன்னை தேவாலயத் தில் நேற்று முன்னிரவு 11.30 மணிக்கு யாழ். ஆயர். அதி.வண. தோமஸ் சௌந்தரநாயகம் நத்தார் திருப்பலியை ஒப்புக் கொடுத்தார். இந்தப் பூசை நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் பங் கேற்றார்.

குருநகர் புனித யாகப்பர் ஆலயம் பாசையூர், புனித அந்தோனியார் ஆலயம் உட்பட குடா நாட்டிலுள்ள தேவாலயங்களில் எல்லாம் அந்தப் பகுதி பங்குத் தந்தை களால் நந்தார் திருப்பலி ஒப்புக்கொடுக் கப்பட்டது.

தென்னிந்திய திருச்சபை, இலங்கை திருச்சபை, மெதடிஸ்த திருச்சபைகளைச் சேர்ந்த தேவால யங்களிலும் ஏனைய சபைகளின் தேவாலயங்க ளிலும் நள்ளிரவு பிரார்த்தனைகளும் பூசை வழி பாடுகளும் இடம்பெற்றன. அந்த வழிபாடுகளி லும் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற் றனர். (அ-01-23-07)

## உதயன், சுடர் ஒளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று ஏற்பாடு செய்த கேள்வி நேரம் நிகழ்ச்சி யில் பங்குபற்றி உரையாற்றிய் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

ரி.சோதிலிங்கம் என்பவர் இந்நிகழ்வில் சிவா ஜிலிங்கத்திடம் கேள்வி ஒன்றை எழுப்பினார்.

''நீங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் போராட்ட காலங்களில் தமிழ் மக்களின் சுயநிர் ணய உரிமைகளை ஆதரித்து, பல போராட்ட வடிவங்களில் புலிகளின் ஆதரவு அமைப்புக ளுடன் இணைந்து செயற்பட்டீர்கள். இன்று நீங்கள் தமிழ்த்தேசியத்தின் சமஷ்டிக்கான குரலாக இந்தத் தேர்தலில் நிற்கிறீர்கள். புலிகளின் ஆதரவு அமைப்புகள் இன்று உங்களை ஆதரித்து உங்களு டன் நிற்கின்றனவா? அல்லது ஆதரவு தரு வார்களா? அவர்களது நிலைப்பாடு என்ன?

''புலிகளின் ஆதரவாளர்களும், புலிகளின் முன்னாள் தலைவர்களும் இங்கே இருந்து கொண்டு மேற்குலகின் ஆதரவுடன் சரத்தை ஆதரிக்கிறார் கள், மஹிந்தவை வீழ்த்தலாம் எனச் செயற்படுகின் றார்கள் என்றெல்லாம் கருத்துள்ளது. மேலும் யாழ்ப்பாணத்தில் 'உதயன்', கொழும்பில் 'சுடர் ஒளி' ஆகியன ஐ.தே.கட்சியை ஆதரிக்கின்றன என்று கூறப்படுகின்றதே. இவை பற்றியும் உங்கள் கருத்து என்ன?''- இப்படி அவர் கேட்டார்.

அக்கேள்விக்குப் பதிலளிக்கையில் சிவாஜிலிங் கம் கூறியவை வருமாறு:-

''புலிகளின் ஆதரவாளர்கள் என்ற ரீதியில் அவர்களிடம் நான் ஆதரவு கேட்கவில்லை. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதும் இந்த நாட்டில் யாருடன் தொடர்பு வைத்துள்ளார் கள் என்பதும் பின்பு உலகுக்குத் தெரியவரும்.

'உதயன்', 'சுடர்ஒளி' பத்திரிகைகள் கட்சிப் பத்திரிகைகளை மீறிய அளவில் கடு மையாக விமர்சனங்களையும் வார்த்தைப் பிரயோகங் களையும் செய்கின்றன. அவர்கள் ஐ.தே.கட்சியின் நிகழ்ச்சி நிரலில் இருப்பவர்கள் என்று உங்க ளுக்கே தெரியும். வித்தியாதரனின் மைத்துனர் சர வணபவன் அடுத்த முறை கொழும்பு மாவட்டத் தில் ஐ.தே.கட்சியில் போட்டியிடக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவருக்கு அமைச்சராக வர ஆசை. அதில் தவறு இல்லை. ஆனால் நாம் உயிருடன் இருக்கும்வரை அவர்களுக்கு இடைஞ்சலாக இருப்போம் என்பதை அவர்கள் நினைவில் வைத்திருக்க வேண் டும்.'' - என்றார் அவர். (அ-சி)

## நீதியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பை நினைவுகூரும்படியாக இந்தக் கிறிஸ் மஸ் வாழ்த்துச் செய்தியை வெளியிட எனக்குக் கிடைத்த பாக்கியத்திற்காக நன்றி கூறுகிறேன்.

2009 ஆம் ஆண்டு எனக்கு விசேடமான வருடம். எனக்கு ஒரு சந்தோஷத்தைக் கொண்டு வந்த வருடம். அதாவது, இவ்வருட நத்தார் சந்தோ ஷத்தோடு சமாதானம் நிறைந்த ஒரு சமூகம் ஒன்று உருவாவதற்கு நான் வழிநடத்திச் சென்ற உறுப் பினர்கள் மிக அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர்.

காங்கேசன்துறையிலிருந்து தேவேந்திர முனை வரை அனைத்து மக்களுக்கும் உரித் தான - கத்தோலிக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு செல்லத் தடைசெய்யப்பட்ட -பரிசுத்த ஸ்தலமாகிய மருத மடு மாதா தேவாலயத்திற்கு மறுபடியும் கத்தோலிக் கர்கள் சுற்றுலாச் சென்று பயமின்றிச் சுதந்திரமாக வணங்கி வரக்கூடியதாயிருக்கின்றபடியால் இன்று எனக்கு மிக்க மகிழ்ச்சியாகவிருக்கிறது. கத்தோ லிக்க மதத்தைச் சேர்ந்தவர்களின் மத வழிபாடு களுக்காக - அந்த உன்னதமான பூமியை மீட்டெ டுப்பதற்கு - போராட்டத் தில் உயிர்நீத்த சகல மக்க ளையும் அதேபோல் இராணுவத்தினரையும், பொலி ஸாரையும் சிவில் படையினரையும், எல்லாப் படைய ணிகளையும் இங்கு நான் நினைவு கூருகிறேன்.

பல மதத்தவர்களும் வாழ்கின்ற இந்த நாட் டில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பை வரவேற்கும் இந்த நத்தார் மிக முக்கியமா னதாகும். சிங்களம் மற்றும் தமிழ்பேசும் கத்தோலிக்க மதத்தவர் களைப் போன்றே பௌத்த, இந்து, முஸ்லிம் மதத்த வர்களுக் கும் இன்று ஓர் புதிய இலங்கை ஒன்றை - அதாவது, ஒற்றுமையான சமாதானத்தின் முன் அநீதியான காரியங்களை அகற்றி, சாதாரணமான கீரிடத்தை தரித்துக்கொள்ளவும் மத வாழ்க்கை உயர்வாக எண்ணும்படியுமான இலங்கையை - நிர்மாணிக்கும் பொறுப்பு உண்டு. இந்த படிப்பி னையை ஒட்டி கத்தோலிக்கர்களைப் போன்று அனைத்து மதத்தவர்களும் நடப்பதற்கு பிர திக்ஞை செய்து கொள்ளவேண்டும்.

பௌத்தர்கள், இந்து மத குருமார்கள் போதித் தவையும் இயேசு கிறிஸ்து போதித் தவையைப் போன்றவைதான்.

நீதியான நாட்டைக் கட்டியெழுப்புவதே இங்கு மிக முக்கியமானது.

பரிசுத்த வேதாகமத்தில் நீதிமொழியில் இவ் வாறு கூறப்படுகிறது:-

உத்தம மனுஷன் தேவனுடைய கிருபை யைப் பெறுவான்.

தீய எண்ணங்கள் உள்ளவனை நியாயம் தீர்ப்பார்.

மனுஷன் துன்மார்க்கத்திலே நிலைத் திருப் பதில்லை.

நீதிமானின் வேர் ஒருபோதும் அசைக்கப் படுவதில்லை.

அந்த உன்னதமான இயேசு கிறிஸ்துவின் நத்தார் பிறப்பைக் கொண்டாடும் நாம் நீதி மிக்க மனுஷராக, நீதிமிக்கதான ஒரு சமூகத் தையும் உண்டாக்குவதற்கு அர்ப்பணிப்பு டன் செயற் படுவோம். அந்தப் பரிசுத்தர் காட்டிய உன்னத மான வழி இதுவே.

சகல கத்தோலிக்க மதத்தவர்களுக்கும் சமாதா னமும் சந்தோஷமும் நிறைந்த நத் தாரைப் பிரார்த் திக்கிறேன். - என்று தெரிவித்துள்ளார். (அ-சி)

## இந்தோனேஷியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று சுகவீனமுற்று மரணமாகியுள்ளார்.

இந்தோனேஷியாவின் பெராக் துறைமுகத் தில் 255 பேருடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள படகி லிருந்த நபர் ஒருவரே இவ்வாறு மரணமாகியுள்ளார்.

உடல் நிலை மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த இலங்கையரை மருத்துவமனைக்குக் கொண்டுசெல் வதற்கு இந்தோனேஷிய அதிகாரிகள் அனுமதிக்க வில்லை என படகிலுள்ள அகதிகள் தெரிவித்துள் ளனர்.

இலங்கையைச் சேர்ந்த ஜகோப் கிறிஸ்டியன் எனும் 29 வயது இளைஞரே இவ்வாறு நோய் கார ணமாக உயிரிழந்துள்ளார்.

மிக மோசமாக உடல் நிலை பாதிக்கப்பட்டிருந்த கிறிஸ்டியனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்குத் தாங்கள் வேண்டுகோள் விடுத்த போதிலும் அதிகாரிகளும், சர்வதேச புலம் பெயர் நிறுவனமும் துறைமுகத்திலிருந்து அவரை வெளியே கூட்டிச்செல்ல அனுமதிக்கவில்லை யெனப் படகில் உள்ள அகதிகள் தெரிவித்துள் ளனர். வைத்தியப் பணியாளர்கள் தமது படகுக ளுக்கு வருவததற்கான அனுமதியும் மறுக்கப்பட் டது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜகோப் கிறிஸ்டியன் கடந்த சில நாள்களாக மிக மோசமாக உடல்நிலை பாதிக்கப்பட்டிருந் தார். தொடர்ச்சியாக இரத்தவாந்தி எடுத்தார். கடும் வாக்குவாதத்தின் பின்னரே அவரை வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்ல முடிந்தது என அகதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

கிறிஸ்டியனின் சடலம் தற்போது இந்தோ னேஷியாவின் பான்டென் நகரில் உள்ள வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது. உரிய இறுதி மரியா தைக்காக சடலத்தைக் கப்பலிற்கு எடுத்துச் செல்வ தற்கு அகதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, பிரபாகரன் எனும் 45 வயது இலங்கையர் ஒருவரும் உடல் நிலை பாதிக்கப் பட்ட நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இதேசமயம் இந்தப் படகில் தமிழ் அகதி மரண மானமைக்கு ஆஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூட் பொறுப்பேற்க வேண்டும் என ஆஸ்திரேலியா வின் சோசலிஷ்ட் கட்சி கூறியுள்ளது. (அ-சி)

## மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டில் இவ்வருட நத்தார் பண்டிகையைக் கொண் டாடக் கிடைத்தமை இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்களின் மகிழ்ச்சிக்குப் பெரிதும் காரணமாய் அமைகின்றது.

நத்தார் பண்டிகையின் உண்மையான அர்த் தம் அன்பு, கருணை, கொடை என்பதாகும். இது கிறிஸ் தவ சமயத்தின் அடிப்படை அம்சமான அன்பு பற்றிய போதனையைத் தன்னுடன் கொண்டு வந்த இயேசுநாதரின் பிறப்புக்குறித்த மகிழ்ச்சி யைப் பகிர்ந்துகொள்வதற்குக் குடும்பங்களையும் சமூகங்களையும் ஒன்றுசேர்க்கின்றது. மூன்று தசாப்த காலமாகப் பயங்கரவாத்தினால் பாதிக்கப் பட்டிருந்த எமது மக்களின் சிதைந்துபோன வாழ்க் கையை மீளக்கட்டியெழுப்பி, எமது நாட்டில் அமைதியையும் சுபீட்சத்தையும் நிலைநாட்டும் வகையில் சமூகங்களுக்கு மத்தியில் புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை என்ற புதிய பாலங்களைக் கட்டி யெழுப்ப இந்த அன்பையும் கருணையையும் இலங்கை மக்கள் பெரிதும் வேண்டி நிற்கின்றனர்.

பெத்லஹேமில் சிறியதொரு மாட்டுத் தொழுவத்தில் இடம்பெற்ற இயேசு நாதரின் பிறப்பு, அன்பு என்பது எல்லாத் தடைகளையும் தாண்டி வாழ்க்கையில் தாழ் நிலையிலுள்ள மக் கள் முதல் இப்பூவுலகில் எம்முடன் ஒன்றாக வாழும் உயிரினங்கள், எம் எல்லோருக்கும் வளம் சேர்க்கும் இயற்கை ஆகிய எல்லாவற்றையும் தழுவிச் செல்ல வேண்டும் என்பதையே அடையாளப்படுத்தி நிற்கின்றது.

நத்தார் பண்டிகையின் நாதஒலி நல்உள்ளம் படைத்த எல்லோருக்கும் புதியதோர் சமாதான யுகத் திற்கான விடியலை அறிவிப்புச் செய்து நத்தார் பண்டிகையின் மகிழ்ச்சியைப் பரப்புகின்றது.

உங்கள் எல்லோருக்கும் எனது மகிழ்ச்சிகர மான நத்தார் வாழ்த்துக்கள். - என்று தெரிவித்துள் ளார். (அ-சி)

## கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வியாழக்கிழமை காலை தமிழ்ப் பத்திரிகையாளர் களைச் சந்தித்து, ஜனாதிபதித் தேர்தல் தொடர் பாகக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டைத் தெளிவு படுத்தி விளக்கமளித்தபோதே இரா.சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பாக மிக விரைவில் கூட்டமைப்பு அறிவிக்கும்.

### சிவாஜிலிங்கத்தின் முடிவு தன்னிச்சையானது

சிவாஜிலிங்கம் பொதுவேட்பாளராகப் போட் டியிட எடுத்த தீர்மானம் தன்னிச்சை யானது. அது குறித்துக் கவலையடைகிறோம். ஆனாலும், அதற் காகத் தமிழ் மக்கள் குழப்பமடைய வேண்டிய அவசி யம் எதுவும் இல்லை. - என்றும் அவர் கூறினார்.

இரண்டு பிரதான வேட்பாளர்களுடனும் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாஷை கள் தொடர் பாகப் பேசிவருகின்றோம். கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிரேமச்சந்திரன், துரைரெட்ணசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இந்தச் சந்திப்புகளில் கலந்துகொண்டுள்ளனர் என்றும் தெரிவித்த இரா. சம்பந்தன், வடக்கு- கிழக்கு மாகாணங்களின் இணைப்பு மிகவும் முக்கிய மானது எனத் தாங்கள் வலியுறுத்தி வருகின் றனர் என்றும் சொன்னார்.

இரண்டு வேட்பாளர்களையும் தாங்கள் சந் தித்தபோது, தமது தரப்பிலிருந்து தாங்கள் முன் வைத்த விடயங்கள் தொடர்பாக சம்பந் தன் பின் வருமாறு கூறினார்:-

தமிழ் மக்களுடைய சகலவிதமான பிரச் சினைகளுக்கும் நிரந்தரமான தீர்வு அவசியம். அதாவது, உடனடியாக மீள்குடியேற்றம், புனர் வாழ்வு, வீட்டு வசதி, தொழில் வாய்ப்பு, சமூகக் கட்டமைப்பு போன்ற விடயங்கள் குறித்துக் கவனம் எடுக்கவேண்டும்.

வடக்கு - கிழக்கில் அதி உயர் பாதுகாப்பு வல யங்கள் நீக்கப்பட்டு அங்கு மக்கள் மீளக் குடியேற உடனடி ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். யுத் தம் முடிவடைந்துவிட்ட நிலையில் அவ்வாறான உயர் பாதுகாப்பு வலயம் இனித் தேவையில்லை.

### இராணுவக் கட்டமைப்புகள் இராணுவ மயமாக்கல் உடன் விலக்கப்பட வேண்டும்

யுத்தம் முடிவடைந்த நிலையில் வடக்கு, கிழக்கில் இராணுவ மயமாக்கல் மற்றும் சோத னைச் சாவடிகள், இராணுவக் கட்டமைப்புகள், யுத்த முனைப்புகள் அனைத்தும் உடனடியாக விலக் கப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்கில் உள்ள காணிகள், அபிவி ருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் யார் யாருக்கோ விநியோகம் செய்யப்படு மானால் அவ்விதமான ஒழுங் குகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

அத்துடன் பெரும்பான்மை இனத்தவர்கள் வடக்கு, கிழக்கிலுள்ள அரச காணிகளில் குடியமர்த் தப்படுவதும் நிறுத்தப்பட வேண்டும். யுத்தத்தி னால் வெளியேறிய தமிழர்களின் காணிகளில் பெரும்பான்மை இன மக்களைக் குடியேற்றும் நடவடிக்கைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

அதேவேளை, வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர் களின் காணிகளின் உரிமைப் பத்திரங் களை ரத்துச் செய்து, நீக்குவதற்கு எடுக்கப் பட்டு வரும் நடவடிக்கைகளும் நிறுத்தப் பட வேண்டும்.

தடுப்புக்காவலில் உள்ள தமிழ் இளைஞர் கள், யுவதிகளுக்கு எதிராகப் போதிய சாட்சியங் கள் இல்லையானால் அவர்கள் உடனடியாக விடு தலை செய்யப்பட வேண்டும். ஏனையவர்களுக் குப் பொது மன்னிப்பு வழங்கவேண்டும். யாரை யாவது சட்டத்தின் முன் நிறுத்த வேண்டுமானால் அவர்களை உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்தி விடுதலை செய்யவேண்டும்.

### நிரந்தரமான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும்

தமிழ் மக்கள் தமது அரசியல், பொருளா தார, கலாசார விடயங்களை சுதந்திரமாக முன்னெடுப் பதற்கு ஏற்றவகையில் நிரந்தர மான - நீதியான - நடைமுறைப்படுத்தக் கூடிய - அரசியல் தீர்வு ஒன்றை ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்ததும் முன்வைக்க வேண்டும்.

இந்த முக்கியமான விடயங்கள்தான் கூட்டமைப் பினால் முன்நிலைப்படுத்தப்பட் டுள்ளன.

அத்துடன், மேற்குறித்த இந்த விடயங்கள் தொடர்பாக இரண்டு பிரதான வேட்பாளர்களின் கருத்துகளையும் அறிந்து கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்கள் அவை குறித்து ஆலோ சனை நடத்தி வருகின்றனர்; ஆராய்கின்றனர்.

இவ்வாறான முறையில் தீர்வுகள் ஏற்படு வதற்கு இந்தியா உட்பட சர்வதேச நாடு களின் உதவிகளும் தேவை. அது தொடர்பாக அவர்க ளுடனும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கள் கலந்துரையாடி வருகின்றனர்.

### நல்ல சந்தர்ப்பம் நிதானமாக நடக்க வேண்டும்

முன்னர் நாம் குறிப்பிட்ட விடயங்களை உறு திப்படுத்தக்கூடிய வேட்பாளருக்குத் தான் நாம் ஆதரவை வழங்கமுடியும்.

எவ்வாறாயினும் ,இந்த விடயங்கள் தொடர் பாகத் தீவிரமான கவனம் செலுத்தப்பட்டிருக்கின் றமையினால் தமிழ் மக்களை இன்னமும் சிறிது காலத்திற்குப் பொறுமையுடன் இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கின் றோம்.


இந்த ஜனாதிபதித் தேர்தல் ஒரு நல்ல சந்தர்ப்பம். எனவே, மக்கள் நிதானமாக செயற்பட வேண்டும். மக்கள் ஒற்றுமையாக இருக்கவேண் டும். இது அவர்களுடைய புனிதக் கடமை என்று தான் கருதுகின்றோம். மக்கள் எந்தவிதமான குழப் பங்களும் அடையவேண்டிய அவசியம் இல்லை. - என்றார். (அ-சி)

COLLEGE OF CHEMISTY
2012 A/L
CHEMISTRY PHYSICS
DIAS B.Sc(Hons) spl Chem KAPILAN B.Sc
ஆரம்பம் 27.12.2012 ஞாயிறு 3.00
குறிப்பு: மாணவர்களின் அனுமதிக்கு பெற்றோர்களின் வருகை அவசியம்
32 பழம் றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம்

NEW EDUCATION WORLD
ஆனைப்பந்திச் சந்தி (குருகுலம் அருகில்)
கணித, உயிரியல் பிரிவுகள்
(தமிழ், ஆங்கில மொழி மூலம்)
A/L 2012
PHY - M . கருணாநிதி
GHE - N . வாகீசன்
BIO - S . குகானந்தன்
MAT - K . சயந்தன்
ஆரம்பம் -27.12.2009 (SUN) 10 am

COLLEGE OF CHEMISTRY
A/L 2012
ENGLISH MEDIUM
Commences on 27.12.2009
By - DIAS
B.sc (Hons) spl in chem
NOTE - Parents should accompany for students addmission.

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
PHYSICS A/L 2010
Electricity
ஆரம்பம் -26.12.2009 (சனி) 8.15 am
(சனி, ஞாயிறு - 8.15 - 9.15 am)
BY - K . Selvan (B.sc.(Hons)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

உதயன்
Merry Christmas!
நத்தார் சிறப்பு மலர் 25.12.2009

# உங்கள் உள்ளக் கோயிலில் பாலகனுக்கு இடம் உள்ளதா?



திருத்தூதர் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய திருமுகத்தில் இவ்வாறு எழுதுகின்றார். ''கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால், தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு,அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்.'' (பிலி 2: 6-8) சுருக்கமாகச் சொன்னால் இதுதான் திருவிவிலியத்தின் சாராம்சம். உரிமையானதை வலிய இழந்து தங்களைத் தாழ்த்தி மற்றவர்களை ஆன்ம மீட்பிற்காக தங்களையே பலியாக்குவதற்கான அழைப்புத்தான் இது.

எளிமை, நேர்மை, தாழ்மை,தியாகம் இவையே கிறிஸ்து பிறப்பின் அடிப்படை தன்மைகள். கடவுளின் இடுப்பில் ஓர் ஒட்டுத்துணி மட்டுமே; வான தூதர்களின் கீதம் கேட்ட ஆண்டவர் இதோ மாட்டுத் தொழுவத்தில் உலகைப் படைத்த வல்லவர் இதோ, ஒரு குழந்தையாக மனிதரின் பாதுகாப்பில்! ஆண்டிக்கு அரசனாக, அரசனுக்கு பேரரசனாக ஆசை! ஆனால் இங்கே பேரரசர்க்கெல்லாம் பேரரசரான இயேசு ஆண்டியாகப் பிறந்துள்ளார்.

கிழக்கிலிருந்து எருசலேமுக்கு வந்த ஞானிகள் வானில் பேரொளியில் வானதூதரைக் கண்ட இடையர்கள், யூதர்களின் அரசாக ஒரு குழந்தை பிறந்திருக்கிறது என்பதைக் கேட்டு கலக்கமுற்ற ஏரோது அரசன், மெசியா எங்கே பிறப்பார் என்பதை அறிவித்த தலைமைக் குருக்கள் மற்றும் மறைநூல் அறிஞர்கள் இவர்கள் அனைவரும் வெவ்வேறு கருத்துடையவர்கள், கண்ணோட்டம் கொண்டவர்கள். கிழக்கிலிருந்து வந்தவர்கள் ஞானிகள். அக்காலத்தில் உலகமே ஒரு மீட்பரை எதிர்நோக்கியிருந்தது. வானில் ஓர் அசாதாரணமான காட்சியைக் கண்டு -மீட்பரின் விண்மீன் எழுவதைக் கண்டு- அவர்கள் வந்திருந்தனர். அந்த விண்மீனே வழிகாட்டும் என்ற நம்பிக்கையில்.

இடையர்கள் சாதாரணமானவர்கள். ஏழைகள், பணக்காரர்களின் ஆடுகளை மேய்த்தவர்கள். குளிர் காய்ந்து கொண்டிருந்த வேளையில் வானதூதர் அவர்களிடம் கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை அறிவித்தார். இடையர்கள் விரைந்து சென்று குழந்தையையும் மரியாவையும் யோசேப்பையும் கண்டார்கள்.

அரசரை மாளிகையில் தானே காண இயலும். அதனால்தான் ஞானிகள் ஏரோதின் மாளிகைக்குச் சென்றதும் ஏரோது கலங்கினான். தலைமைக் குருக்களையும் மறைநூல் அறிஞர்களையும் அழைத்து குழந்தை எங்கு பிறக்கும் என்று தெரிந்து கொண்டான். ஏனென்றால் மீக்கா இறை வாக்கினர் மிகத் தெளிவாக அதை முன்னுரைத்திருந்தார்.

மூன்று விதமான வாழ்க்கை நிலைகளை, கண்ணோட்டத்தை நாம் இங்கு காணலாம். ஏரோது ஆணவம், தற்பெருமை மற்றும் தன்னலத்தின் உறைவிடமாக இருந்தான். குழந்தை அதற்கு ஓர் அச்சுறுத்தலாக இருந்தது. அதனால் அதைக் கொலை செய்யவேண்டும். எனவே அவன் ஞானிகளிடம் கருத்தாய்க் கேட்டறிந்ததற்கேற்பக் காலத்தை கணக்கிட்டுப் பெத்தலகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும் ஆள்களை அனுப்பி இரண்டு வயதும் அதற்கு உட்பட்டவையுமான எல்லா ஆண் குழந்தைகளையும் கொன்றான். இன்று கிறிஸ்மஸ் என்றால் இன்றே கிறிஸ்துவைக் கொல்லவேண்டும்; ஒரு கண்ணோட்டம், ஒரு மனநிலை.

அவன் வளர்ந்து பெரியவன் ஆனால் எனது நாற்காலி ஆட்டம் காணுமே! அவன் எளியவரை உயர்த்துவானே! உயர்ந்தவர்களை தாழ்த்திடுவானே! வேண்டாம்! அவனைச் சிலுவையில் அறைய வேண்டும். நாம் சுகமாக வாழவேண்டும். அவன் அழிய வேண்டும். நான் வாழ வேண்டும்! ஒரு சமுதாயம் அழிவதை விட ஒருவன் இறப்பது நலம். அடுத்த கண்ணோட்டம்.

நாங்கள் சாதாரணமானவர்கள். எங்களுக்கு வானதூதர் இறைமகனின் பிறப்பை அறிவித்துள்ளாரே! நாங்கள் குழந்தையைக் காண வேண்டும். எவ்வளவு தூரம் பயணம் செய்தாலும் சரி அவரைக் காணவேண்டும். இறைவனைத் தேடிச் செல்வது மூன்றாவது மனநிலை.

நாம் ஏரோதைப் போல் இயேசுவைக் கொல்வதில்லை என்பது உண்மையே. ஆனால் இடையர்களைப் போல், அந்த ஞானிகளைப் போல் இயேசுவைத் தேடிச் செல்கின்றோமா? நமது மனநிலை என்ன? இயேசுவைக் காண்பதற்கு முன்பிருந்த அதே மனநிலையோடுதான் நாம் இயேசுவை கண்டபிறகும் வாழ்கின்றோமா? நம்மிடம் மனமாற்றம் ஏற்பட்டுள்ளதா? கடவுளாக இருந்தும் கடவுள் தன்மையைத் துறந்து மனிதனாகப் பிறந்த ஆண்டவர் இயேசு நம்மிடம் இந்த மாற்றத்தைத்தான் எதிர்பார்க்கின்றார். 'என் அன்புப் பிள்ளைகளே! உங்கள் உள்ளக் கோயிலில் நான் பிறக்க இடமிருக்கிறதா? என்று நம் ஆண்டவர் கேட்கின்றார். நாம் 'ஆண்டவரே வாரும்!' என்று சொல்லப் போகிறோமா அல்லது 'இங்கு இடமில்லை' என்று சொல்லப் போகிறோமா?

க. அருள்நேசன்,
புதுமை மாதா ஆலயம், குருநகர்.

நத்தார் வாழ்த்துக்கள் நத்தாரை மகிழ்ச்சிகரமாக்கும்...



சிறிய பரிசாயிருந்தாலும் இதயபூர்வமான அன்புடன் [illegible] நத்தார் பண்டிகையின் உண்மையான அர்த்தத்தை கொமர்ஷல் வங்கி உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறது.

COMMERCIAL BANK
www.combank.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நத்தார் சிறப்பு மலர்

25.12.2009

Merry Christmas!

## இயேசு பாலனைத் தொழுவோம்.



இறைவனின் மகனென இகமதில் உதித்த
திருமறை முதல்வனே! பெத்லேகேம் பாலனே!
கறையுறு பாவ இருளினை விரட்டிடும்
நிறையொளி நீயென புதுஉளப் பிரசவம் தருக!

அடிமையும் மிடிமையும் அகன்றிட வருக!
கொடிதுயர் வன்குணம் அடியோடு ஒழிக!
நெடிதான வாழ்வியல் நெறிமுறை ஓங்கும்
விடிவினை சுவாசிக்க நின்னருள் பொழிக!

தனக்கென வாழும் சுயநலம் சிறுக
திணையையும் பகிரும் பிறரன்பு பெருக
தன்நிலை துறந்து மரிமடி தவழ்ந்த
மண்புகழ் தெய்வ பாலனைத் தொழுவோம்

'பல்துறைப் பேராளன்',
எஸ். யேசுதாஸ், கொழும்புத்துறை.




அனைவருக்கும் எமது நத்தார்
புதுவருட வாழ்த்துக்கள்

நவநாகரிக நங்கையர் விரும்பும்
ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்

லைடன்
புடவை நிலையம்

பஸ்நிலையம் முன்பாக, 410 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 222 2381.

Brown & Co.PLC (IBS-O/A/D)




அனைத்து வகை SHARP
அலுவலக சாதனங்கள்
(Sharp photo copiers, fax machines, cash Registers, Projectors, Olympus Camera, Slimp Top Computers)

நிழற்பிரதி இயந்திரங்களுக்கு
* 01 வருடம் அல்லது 50,000 பிரதிகளுக்கு உத்தரவாதம்
* 25,000 பிரதிகள் எடுக்கக்கூடிய (Toners) இலவசம்
* முதல் வருடத்திற்கான இலவச திருத்தல் சேவை

சிறப்புச் சலுகை

எம்மிடம் 3000 ரூபா பெறுமதிக்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் அதிஷ்டசாலிகளுக்கு மாதாந்தம் முறையே 3000/-, 2000/-, 1000/- பெறுமதியான பரிசில்கள் அல்லது அடுத்த கொள்வனவில் விலைக்கழிவு

வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

* போலிகள் விலை குறைவானவை தரமற்றவை
* தரமற்ற உதிரிகள் உள்ளீடுகளை (Toners) கொள்வனவு செய்து உங்கள் பெறுமதிமிக்க இயந்திரங்களைப் பழுதாக்கிக் கொள்ளாதீர்கள்.
* அவ்வாறான இயந்திரங்களுக்கு நாம் உத்தரவாதம் வழங்கமாட்டோம்.

விற்பனைக்குப் பிந்திய தரமான சேவை வழங்குநர்கள் மற்றும்
அங்கீகரிக்கப்பட்ட ஏக விநியோகஸ்தர்கள்

டிஜிற்றல் எலக்ரோனிக்ஸ்,
62,16 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(ஸ்ரான்லி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

Authorized Dealer
*Digital Electronics*
62/16, Stanley Road, Jaffna.
தொடர்புகளுக்கு : 021 2224040



அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்

D.G. Brasserie மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள யாழ்.
மாவட்டத்துக்கான ஏகவிநியோகஸ்தர்கள்

D.G. Brasserie

ஞானம்ஸ்
ரெக்ஸ்ரைல்ஸ்

* திருமணப் பட்டுப்புடவைகளுக்கும்
* நவீன ரக ஆடைத் தெரிவுகளுக்கும்
* சிறுவர், சிறுமியர்களுக்கான சிறந்த ரெடிமேர் ஆடைகளுக்கும்

ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
18A, நவீன சந்தை, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். 021 222 5679.

சொகுசுவான்
மீண்டும் பாதுகாப்பான பயணத்துக்கு
யாழ்.-கொழும்பு -யாழ். யாழ் - வவுனியா - யாழ்.

யோகாஸ் கொமினிக்கேசன்,
பிரதான வீதி, வட்டுக்கோட்டை, 021 321 5270



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
அனைவருக்கும் எம் இனிய
நத்தார் வாழ்த்துக்கள்


ரேடியோ, கசெற்ஸ், மின்விசிறிகள்,
IC.VCD, DVD Player LCD T.V.
மின்சார வீட்டுப் பாவனைப் பொருள்
மற்றும் இலத்திரனியல்
உதிரிப்பாகங்களையும்
பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்.

திருத்திக் கொடுப்பதிலும்
விசேஷமான நிறுவனம்

Sony யாழ்.விற்பனை முகவர்

V.K. இராசரத்தினம்
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொ.பே 021 222 2056

எம்மவர்கள் வாழ்வில் அமைதி ஒளி நிலைபெற அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எம்மினிய நத்தார் நல்வாழ்த்துக்கள்




சகலவிதமான கேக், ஐஸ்கிறீம்
குளிர்பானங்களைத்
தயாரிப்பதற்கான பொருள்கள்

கைத்தொழில்
மூலப்பொருள்கள்

வாசனைத் திரவியங்கள்
மற்றும் ஆயுள்வேத மருந்துச்
சரக்குகள்

ஆகிய அனைத்தையும்
பெற்றிட

ஸ்ரீகாந் எசன்ஸ் அன் குறோசறீஸ்
16A, கே.கே.எஸ்.வீதி, (சத்திரச்சந்தி), யாழ்ப்பாணம்.தொ.பே: 2219



நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு...

கொழும்பு
விலையைவிட
குறைவான
விலையில்..

அனைவருக்கும்
நத்தார் வாழ்த்துக்கள்

கபிலா
காலணியகம்
24, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

குபிலா
பாதணியகம்
13, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்களுக்கு
எமது நத்தார், புதுவருட வாழ்த்துக்கள்

எந்நாளும் எப்போதும்
எந்நேரமும்
எழிலும் உறுதியும் நிறைந்த
தளபாடங்களுக்கு
இன்றே விரையுங்கள்

திரேசா
தளபாட மாளிகை
137, 139, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0212227941


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Merry Christmas!

# நத்தார் சிறப்பு மலர்

25.12.2009

## போர் ஓய்ந்தபோதும் பிரச்சினைகள் தீரவில்லை; நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படுவது அவசியம்

### நத்தார் செய்தியில் யாழ். ஆயர்



போர் ஓய்ந்த போதும் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் முழுமையாகத் தீர்க்கப்படவில்லை. எனவே நிரந்தரத் தீர்வொன்று காணப்படவேண்டியது அவசியம்.

இவ்வாறு தமது நத்தார் செய்தியில் வலியுறுத்தியுள்ளார் யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

அவர் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு.

நத்தார் விழாவானது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மானிட மீட்புக்காக குழந்தையாக பிறந்ததை நினைவு படுத்துகின்ற நாளாகும். இருளின் அந்தகாரத்திலும் மரணநிழலிலும் வாழும் மக்கள் ஒளியை காண்பார்கள் என இறைவாக்கினர் உரைத்தனர். எனவே இருள் அகற்றி உலகிற்கு ஒளி தரும் வார்த்தையாகி பாலகன் இயேசுவின் பிறப்பு விழா நல்லுள்ளம் கொண்ட அனைவர்க்கும் அமைதி அளிக்கும் விழாவாக உள்ளது.

30 வருட கொடிய போரின் பின் யுத்த கருவிகள் ஓய்ந்து அமைதி நிலவும் இக்காலத்தில் நத்தார்ப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். துன்பியல் தரும்கொடிய போர் ஓய்ந்து அமைதி நிலவும் இத்தருணத்திற்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

போரின் பயனாக நடந்த பிரச்சினைகள் இன்னும் முழுதும் தீர்க்கப்படவில்லை. இடம்பெயர்ந்த மக்களின் அவலநிலை இன்னும் முடியவில்லை. அவர்கள் தம் இல்லங்களுக்கும் நிலபுலங்களுக்கும் திரும்பி நாளாந்த வாழ்வை மேற்கொள்ளும்போதுதான் அவர்கள் நிம்மதி அடைவார்கள்.

நாளாந்தம் அசுரவேகத்தில் ஏறிவரும் விலைவாசிகளும் அதனால் ஏற்படும் சிரமங்களும் பரந்து நிற்கும் வறுமையும், வாழ்வதற்கு தகுந்த இல்லிட மற்ற நிலைமையும், வேலை வாய்ப்பு இன்றிய நிலையும் இன்று மக்களை வாட்டி நிற்கின்றன. இவற்றிற்கு நிரந்தரத் தீர்வு காண்பது அரசினுடையதும் ஏனைய உதவி நிறுவனங்களினதும் கடமையாகும்.

எனவே இருளகற்றி ஒளியேற்றப் பிறந்த பாலன் இயேசுவின் நத்தார் பெருவிழா துன்புறும் மக்களின் துயர்துடைத்து அனைத்து மக்களையும் சகோதரர்களாக ஏற்று வாழ அர்ப்பணிப்புடன் உழைப்போம். மீட்புக்காக மனிதனாகப் பிறந்த இயேசுவின் ஆசீரை அனைவர்க்கும் தெரிவித்து எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அதிமேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.ஆயர்.

## சிறுமைகளைக் கண்டு சோர்ந்து போகாமல் எதையும் உறுதியுடன் எதிர்கொள்வோம்



ஏறத்தாள 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இயேசுபிரான் பலஸ்தீனா தேசத்தில் உள்ள பெத்லேகேமில் பிறந்தார். அப்போது பலஸ்தீன தேசம் உரோமருடைய அடிமை நாடாக இருந்தது. சவுல், தாவீது, சாலமோன் மன்னர்கள் ஆண்ட காலத்தில் பலஸ்தீனா ஒரு வல்லரசாகத் திகழ்ந்தது. சாலமோன் ராஜா கட்டிய தேவாலயம் அன்னியரால் இடிக்கப்படாது இருந்திருந்தால் அது பண்டைய உலகின் அதிசங்களில் ஒன்றாக கணிக்கப்பட்டிருக்கும் என்று வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுவர். ஆனால், இயேசு பிரான் பிறந்த காலத்தில் பலஸ்தீனா தேசம் தனது அரசியல் பெருமையையும் பொருளாதார சிறப்பினையும் இழந்துவிட்டது. இஸ்ரவேலர் உரோமருக்கு அஞ்சி நடந்தார்கள். இத்தகைய வலுவிழந்த சூழ்நிலையில் ஏழை மாட்டுத் தொழுவத்தில் இயேசுபிரான் தோன்றினார். அவர் பிறந்த எட்டாம் நாள் அவருடைய பெற்றோர் அவரை ஜெருசலேம் தேவாலயத்திற்கு எடுத்துச் சென்றார்கள். அங்கே இரண்டு முதியவர்கள் குழந்தை இயேசுவைக் கண்டு குதூகலம் அடைந்தனர். சிமியோன் என்ற முதியவர் குழந்தை இயேசுவை தன் கைகளில் ஏந்திக் கொண்டு

'புறஜாதிகளுக்கு பிரகாசிக்கின்ற ஒளியாகவும்
உம்முடைய ஜனமாகிய இஸ்ரேலுக்கு
மகிமையாகவும் தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என்கண்கள் கண்டது' என்றார்.

இதனைப் போலவே அன்னாள் என்ற மூதாட்டி அந்த நேரத்திலே தேவாலயத்துக்கு வந்து நின்று கர்த்தரைப் புகழ்ந்து ஜெருசலேமிலே மீட்பு உண்டாக காத்திருந்த யாவருக்கும் அவரைக் குறித்துப் பேசினார்.

இவர்கள் இரண்டு பேருமே தமது காலத்து நிலைவரங்களைக் கண்டு சோர்ந்து போகவில்லை. இஸ்ரவேலரின் முன்னாள் பெருமையை நன்றாக உணர்ந்திருந்தனர். இப்பொழுதுள்ள அவமானங்களும் சிறுமைகளும் நிரந்தரமானவை அல்ல. அவை எல்லாம் நீங்கி நமக்கு மீண்டும் தாவீது அரசன் அல்லது சாலமோன் காலத்தைப் போன்ற ஒரு பொற்காலம் திரும்பவும் வரும் என்று திடமாக நம்பினார்கள். இதனாலேயே தான் இக்கட்டான சூழ்நிலையிலும் மன நிறைவுடனும் குதூகலத்துடனும் வாழ்ந்தார்கள். இயேசு பாலகனின் வருகை இறைவனுடைய உறுதி மொழி நிறைவேறிற்று என்பதனை அவர்களுக்குக் காட்டியது. எனவே நத்தார் என்னும் நன்நாளில் இன்றைய சிறுமைகளைக் கண்டு சோர்ந்து போகாமல் இறைவனின் உறுதி மொழிகளை நம்பி குதூகலம் அடைவோமாக.

முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்
தென்னிந்தியத் திருச்சபை

## விரைந்திடுவாய் பாலகனே......!

ஏழ்மையின் உருவெடுத்து
மண்ணில் வந்த பாலகனே-என்
உள்ளம் தன்னில் நீ வந்திடுவாய்
உலகிற்கு ஒளியாய்
உண்மையின் வடிவாய்
மீட்பின் சுடராய் வந்துதித்த பாலகனே!
என் உயிரோடு கலந்திட எழுந்திடுவாய்
விண்ணை ஒளியே மண்ணகத்தை மீட்டிட
கன்னிமரி மகனாக மானிட உருவெடுத்த பாலகனே!
பாரினை மீட்டுக் பாவம் போக்கிட, தீமைகளை அகற்றி மனித நேயம் மலர்ந்திட
விரைந்திடுவாய் பாலகனே!

பெ. [illegible]

## உலகத்தை உய்வித்த இறைமகன் இயேசுபிரான்



இறைவனின் பிரசன்னம் எங்கும் இருக்கிறது. இதை நாம் வேண்டுமானால் பரிசுத்த வேதாகமத்தில் யோவான் நற்செய்தி நூலில் 1:6 14 இல் பார்க்கலாம். 'வார்த்தை' (வாக்கு) என்னவென்பதை அறியவேண்டும். அதைப்பற்றிச் சிந்தித்து அச்சொல்லின் மீது கருத்துச் செலுத்தி அதை எங்கும் கலந்து நம்மிடம் வாழ்பவர், உள்ளத்தில் உறைபவர் (அந்தர்யாமி) என்றெல்லாம் நாம் விளங்கிக்கொள்ளவேண்டும். மேலும் இவ்வாசகத்தில் மக்கள் எவ்விதமாகக் கிறிஸ்துவின் பால் ஈர்க்கப்படுகிறார்கள் எனக் கூறுகின்றார். இதுவே பக்தியின் முதல்தோற்றம். மேலும் கடவுளிடம் ஈர்க்கப்படுவதில் ஒருவனுடைய பக்தி வளருகிறது. இங்கே நாம் அறிய விரும்புவது யாதெனில் எவ்விதம் கடவுளுடன் மக்களுக்கு ஒன்றிப்பு ஏற்படுகின்றது என்பதே. கடவுளை நாடித்தேடும் அனுபவத்தை ஒருவன் கடவுளையடையும் அனுபவத்திலிருந்து முற்றிலும் வேறுபடுத்த இயலாது. ஏனெனில், நாம் தேடும் அவர் எங்கும் கலந்துள்ள கிறிஸ்துவாக நம்மில் ஏற்கனவே வாழ்கிறார். வார்த்தையாகிய கிறிஸ்து உலகத்தில் மானிடராகத் தோன்றினவர். உலகத்தோற்றத்திற்கு முன்பே இருந்துவந்த அந்த வார்த்தையே மனிதனாகத் தோன்றினார். உலகத்தைப் படைத்த பின்னர் அதற்குள் கடவுள் வாழ்ந்தார். அவ்வுன்னதமானவரை உலகத்தினுள்ளே தான் அறியவேண்டும். கடவுள் உலகத்தில் நிறைந்துள்ளார். மக்களுள்ளங்களிலும் உள்ளார். அவரை மக்கள் அறிந்துகொள்ள அவர்களின் உள்ளத்தில் வாழ்கிறார். ஆனால் மக்களோ அவரை முழுமையாக அவரை அறிந்துகொள்ளவில்லை. ஆகையால் தம்மைத் தாமே வெளிப்படுத்திப் பயனளிக்க கிறிஸ்துவாக அவதாரம் எடுத்தார். உலகெங்கும் பரவி நிற்கும் அவ்வார்த்தையைப் பற்றி நாம் தெரிந்துகொண்டோமேயொழிய அவரின் தன்மையை நாம் அறியவில்லை.

ஆகையினால் மனித உருவெடுத்த இயேசுவின் மூலமாகவும் அவரது அனுபவத்தின் மூலமாகவும் அவரது கடவுள் சொல்லொணாப் பெருமையைக் கண்டோம்.

கடவுள் படைப்பினுள்ளிருந்து அந்தர்யாமியாக இயங்குகிறார். இந்த அந்தர்யாமியே எங்கும் நிறைந்துள்ள கிறிஸ்து. எக் காலத்துமுள்ள சொல்லீசனே அவ்வார்த்தை. அவர் எங்கும் நிறைந்துள்ளார். எனினும் அவர் மனுக்குலத்தை மீட்க வந்த காலத்து பெத்லேகேமில் புனித கன்னிமரியன்னையின் வயிற்றில் அற்புதமாகத் தோற்றமெடுத்துத் தம்மை வெளிப்படுத்தினார்.

இத்தகைய சிந்தனையிலும் நிலையான சந்தேர்ஷத்திலும் நாம் யாவரும் வாழ கடவுளே நம்மை ஆசீர்வதிப்பாராக.

எல்லாம் வல்ல இறைவன் உங்கள் யாவருக்கும் சமாதானம், ஆசீர்வாதம், தரிசனம், நம்பிக்கை, உள, உடல் ஆரோக்கியம் அனைத்தையும் நல்குவாராக.

கடவுளுக்கே மகிமை

அருட்திரு. சத்தியசீலன் கிங்ஸ்பாிகதிர்காமர்,
குருமுதல்வர், இலங்கை மெதடிஸ்த திருச்சபை, யாழ்ப்பாண சேகரம்.

## கருணைவிழி அருள் சுரக்கும் இயேசு பாலா

கருணை விழி அருள் சுரக்கும் இறை யேசு பாலா
கரம் கூப்பி அழைக்கின்றோம் கரை சேர்க்க வாரும்
மருவியும் தடிவருடி அன்பினுக்கு ஏங்கும்
மக்கள் எமை அரவணைத்துக் காத்திடவே வாரும்

சத்தியத்தின் நாயகனே இறையேசு பாலா
சஞ்சலங்கள் நீக்கிமன உறுதியினைத் தாரும்
நித்தியத்தின் வாழ்வளிக்க இரட்சகனே பாலா
நிர்க்கதியாய் அலையுமிந்தத் தமிழர்களைக் காரும்

அன்னைமரி சுமந்தளித்த இறைமகனே பாலா
அகதிகளாய் அடிபணியும் அபலைகளைப் பாரும்
முன்வினையைத் தீர்த்தெம்மை இரட்சித்த பாலா
மூலவுலகை யாளும்பே ரிறையேயெமைக் காரும்



எளியவர்நாம் நின்னிழலில் வாழ்வதற்காய் வந்தோம்
பழிசுமக்கும் பாவியாய்ப் படுமவலம் பாரும்
விழிசொரியும் நீரோடும் அருளினுக்கு ஏங்கும்
அழியுமுடல் சுமக்கின்ற அடியவரைக் காரும்

பசியென்ற உணர்வின்றிப் பஞ்சடைந்து சோர்ந்து
வசிக்கின்ற உறைவிடங்கள் இழந்தவரைப் பாரும்
அசைந்தாடும் மலர்க்கொடியாய் போரினாலே வாடும்
நிசவாழ்வுக் கேங்குகின்ற நீசரெம்மைக் காரும்

நோயுற்று வலுவற்று அருகில்வரத் துடிக்கும்
தாயற்றுத் துணையின்றித் தவிப்பவரைப் பாரும்
சேயுற்ற துன்பமதாய் அவர்குறைகள் நீக்கும்
மாயப்பேய் வினையகற்றிப் பரமனடி சேரும்.

ஞானம்,வன்னி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
Merry Christmas!
நத்தார் சிறப்பு மலர்
25.12.2009

# பாலகன் இயேசுவின் பிறப்பு பாருலகுக்கு அமைதி தரட்டும்



2009 ஆண்டுகளுக்கு முன் இடம் பெற்ற ஓர் உன்னதமான நிகழ்வை மீண்டும் ஒருமுறை நினைத்து மகிழ்வோடு கொண்டாடுகின்றோம். கிறிஸ்து பிறப்பு விழா உலகம் முழுவதும் பெருமகிழ்வோடும் பல முன்னெடுப்புகளோடும் நினைவு கூரப்படுகின்றது. 'இதோ கன்னி கருவுற்று ஒரு ஆண் மகவைப் பெற்றெடுப்பாள். அக் குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர்.' (எசாயா 7:14) என்ற எசாயா தீர்க்கதரிசியின் முன்னறிவிப்பு தூய கன்னி மரியாள் வழியாக இங்கே நிறைவேறுவதை நாம் காண்கின்றோம். கிறிஸ்துவின் பிறப்பால் பாவ இருள் நீங்கி ஒளி வீசியது. இதனால் பெருமகிழ்வு எங்கும் உண்டாயிற்று. இறை அருள் உலகிலே பிரசன்னமாகி நாம் இறைவனுக்கு உரியவர்களாக மாறியுள்ளோம். விண்ணுலக மகிமை விண்விட்டு மண் வந்ததால் அனைவருக்கும் அமைதி ஏற்படுவதோடு தீமைகளில் இருந்து விடுபட்டு ஒளி வாழ்வில் மகிழ்ந்திருக்க நாம் அழைக்கப்படுகின்றோம்.

### நம்பிக்கையின் விழா

''காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர்ஒளி உதித்துள்ளது.'' (எசாயா 9:2) என்ற இறைவார்த்தை எமக்கு நம்பிக்கையைத் தருகின்றது. நாம் வாழும் எமது தமிழ்மண் என்றும் இல்லாத வகையில் மனித அவலங்களைச் சந்தித்துள்ளது. பல்லாயிரக்கணக்கான உயிர் இழப்புக்களுக்கு மத்தியில், எண்ணிலடங்காத மக்கள் உறுப்புக்களை இழந்து ஊனர்களான நிலையில் தப்பிப் பிழைத்தவர்கள் முகாம் வாழ்க்கையில் துன்புற்று வாழ்கின்ற சூழலில் நம்பிக்கையின் கீற்றாகப் பாலக யேசுவின் பிறப்பு அமைகின்றது.

பாவ இருள் சூழ்ந்திருந்த உலகுக்கு ஒளியையும் அடிமைத்தனத்தில் வாழ்ந்திருந்த மக்களுக்கு உரிமை வாழ்வையும் பாவத்தின் பிடியில் சிக்குண்டு வாழ்ந்து கொண்டிருந்த மக்களுக்கு விடுதலையையும் பெற்றுக் கொடுத்தது. ஆண்டவன் இயேசுவின் மனித அவதாரம் நம்பிக்கை தருகின்ற ஒரு மகிழ்ச்சியின் விழாவாக அமைய, இம் மகிழ்ச்சி எல்லா மக்களுக்கும் கிடைக்க இம்முறை அர்த்தமுள்ள விழாவாக முன்னெடுக்க முற்படுவோம். ஆடம்பரமானதாக வேடிக்கை நிறைந்ததாக இல்லாமல் எளிமையும் பகிர்வும் கொண்டதாக நினைவு கூருவோம்.

### எளிமையின் விழா

''இறைவன் நம்மை எவ்வளவு அன்பு செய்தார் என்றால் நாம் வாழ்வு பெறும் பொருட்டுத் தம் ஒரே பேறான திருமகனை உலகிற்கு அனுப்பினார்'' (1 யோவான் 4:9) என்னும் தூய யோவானின் கூற்று இறைவனின் அன்பின் ஆழத்தை எடுத்துச் சொல்கின்றது. இரத்த ஆறும் கண்ணீரும் கலந்து ஓடிய எமது மண்ணில் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களினம் வாழ்கின்ற எமது தாய் நாட்டில் இம்முறை நாம் சந்திக்கும் இவ்விழாவை எளிமைக்கு முதல் இடம் கொடுத்து நினைவுகூருவோம். 'விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத்தொட்டியில் கிடத்தினர்' (லூக் 2:7) தாவீதின் அரசன் மூவுலகை ஆளும் இறைமைந்தன் மாடடைக்குடிலில் எளிமையாகப் பிறக்கின்றார். 'பஞ்சு மெத்தையில் தவழ வேண்டியவர் தீவனத் தொட்டியில் தரிசனம் தருகின்றார்' (லூக் 2: 8 -12). காலம் காலமாகக் காத்திருந்த மக்கள் புறந்தள்ளப்பட எளிய இடையர்களுக்குக் காட்சி தருகின்றார். எனவே நாமும் எளிய மனம் கொண்டோராய் கிறிஸ்து பிறப்பைச் சந்திப்போம்.

### பகிர்தலின் விழா

''பகிர்தல்'' என்பது கிறிஸ்தவ மதிப்பீடுகளில் மிக உன்னதமான செயற்பாடாகவும் உண்மையான களங்கமற்ற அன்பின் வெளிப்பாடாகவும் உள்ளது. ''நம் மீட்பராம் கடவுளின் நன்மையும் மனித நேயமும்

(V ஆம் பக்கம் பார்க்க)


## இலங்கை வங்கி வழங்கும் அடகுச் சேவையின் சிறப்பு அம்சங்கள்

- ஒரு தங்கப் பவுணுக்கு ஆகக்கூடிய தொகை
- குறைந்த வட்டியில் உபசரிப்புடன் கூடிய உடனடிச் சேவை
- கொடுக்கல் வாங்கல்களின் இரகசியத்தன்மை கொடுக்கல் வாங்கல்களுக்கென ஒதுக்கப்பட்ட அறையொன்றில் இரகசியமாக மேற்கொள்ளப்படும்
- அடகு வைக்கப்படும் பொருள்களுக்கு அதிகூடிய பாதுகாப்பு
- நன்கு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள், ஏற்றுக்கொள்ளத்தக்க தரமதிப்பீடு,தங்க ஆபரணங்களின் தரத்தை தவறின்றி பரீட்சித்தலும் மதிப்பிடுதலும்
- கணனிமயப்படுத்தப்பட்ட கிளைகளில் பகுதி பகுதியாகப் பணத்தை மீளச் செலுத்துவதற்கான வாய்ப்பு
- தங்க ஆபரணங்களை அடகு வைக்கும்போது சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்கவும் பணம் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் குறித்த கணக்கில் சேமிப்பை மேற்கொண்டு அடைவை மீட்டுக்கொள்வதற்குமான வாய்ப்பு
- அவ்வாறே கணக்கில் சேமிக்கும் தொகைக்கு வட்டியைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு
- தொடர்ந்தும் தங்கள் விருப்பத்திற்கேற்ப வங்கிக் கணக்கை நடைமுறைப்படுத்திக்கொள்ளும் சந்தர்ப்பம்.
- வியாபார நடவடிக்கைகளுக்காக மேலதிகப்பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்ளத்தக்க வாய்ப்பு

Merry Christmas!

BOC
உங்கள் நம்பிக்கைக்குரிய வங்கி



எமது வாடிக்கையாளர்களுக்கு இனிய நத்தார் நல்வாழ்த்துக்கள்

## Cargo Service to All Countries



## உலகளாவிய பொதிகள் சேவை

ஆகாய மார்க்கமாகவோ அல்லது கடல் மார்க்கமாகவோ உணவுப்பொருள்கள், அன்பளிப்புப் பொருள்கள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றை வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு விரைவாகவும் பாதுகாப்பாகவும் நீங்கள் நம்பமுடியாத குறைந்த கட்டணத்தில் நான்கு வேலை நாள்களில் உங்களது உறவினர்களின் முகவரிக்குக் கையளிக்கப்படும்.

### எமது விசேட முகவர் சேவைகள்

லண்டன் (Wembley), சுவிஸ் (Zurich), அவுஸ்திரேலியா (Sydney), பிரான்ஸ் (Paris), கனடா (Toronto) போன்ற நாடுகளுக்கு உங்களின் தேவைக்கேற்ப வீட்டு முகவரிக்கோ அல்லது எமது முகவர் நிலையங்களிலோ பெற்றுக்கொள்வதற்கு அனுப்பி வைக்கப்படும்.

லண்டன், சுவிஸ், அவுஸ்திரேலியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு 03 கிலோவிற்கு குறையாத பொதிகளுக்கு 1கிலோவுக்கு 400/- வீதமும் கனடாவுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1 கிலோவுக்கு 500/- வீதமும் அறவிடப்படும்.

*London*
Home Delivery 1st kg Rs.1500, Additional 1kg Rs.750
10 கிலோவுக்குக் கூடுதலான பொதிகளுக்கு ரூபா 700.00 வீதமும் அறவிடப்படும்.

பொதிகள் அனுப்பும் சகல வாடிக்கையாளர்களுக்கும் ஒரு மெய்கண்டான் கலண் டர் இலவசம் (இச்சலுகை டிசெம்பர் 31 ஆம் திகதி வரை மட்டுமே)

### G.T.V. ENTERPRISES (PVT) LTD

*VIJEYA ENTERPRISES* *MAHARAJA FOOD PRODUCTS*
Imports Exporters Food Producers Forwarding & Clearing Agents
Cargo Services to All Countries by Air & Sea, Courier Services
Srilankan Airlines Cargo Agents.

Head Office
No: 18/3,Dr.E.A.Cooray Mawatha,
Wellawatta,Colombo-6.
Tel: 0112360 926, 0112 559 849
Fax: 0112361139
e:mail: info@maharaja foodproduct.com

**Branchs**

| | |
|---|---|
| **No:225 ,Kasthuriyar Road, Jaffna.** | **Tel: 021 2224338** |
| No:170,Central Road,Colombo-12. | Tel: 0112 448928 |
| No:288,George R.De.Silva Mw,Kotahena,Colombo-13. | Tel: 0113 150859 |
| No:G-2,146,Negombo Road,Wattala.(Pearl Park) | Tel: 0716 903543 |
| No:37/4,Trinco Road, Batticoloa. | Tel: 065222 7982 |
| No:41,Central Road, Uvarmalai(Thenthamil veethy,Junction) | Tel: 026 2221510 |
| No:22 BusStand Vavuniya ( Sajees Com) . | Tel: 024 222 2166 |
| No:24D, Kanthasamy Kovil Road, Vavuniya. | |

(C-561769)



## இதோ மக்கள் வங்கியின் அனுகூலங்கள்!

உங்கள் வயதிற்கும், தேவைக்கும் பொருத்தமான விதத்தில் மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து வாழ்க்கையின் வெற்றிப் பாதைக்கு பிரவேசியுங்கள்

- உங்கள் குடும்பத்தின் புதிய உறவின் வருகைக்கு முதலாவது அன்பளிப்பாக மக்கள் வங்கியின்
  இசுறு உதான அன்பளிப்புச் சீட்டு
- கல்விச் சிறார்களின் வளமான எதிர்காலத்துக்கு
  சிசு உதான மாணவர் எழுச்சிக் கணக்கு
- இளமைப் பராயத்தில் உயர் கல்வியைத் தொடரவும், வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும்
  YES இளவயதினர் கணக்கு
- இளமைப் பராயத்தினருக்கு பெறுமதியான பல்கலைக்கழக புலமைப் பரிசிலை வழங்கும்
  YES FUTURE STARS கணக்கு
- அதிஷ்டங்களை அள்ளித்தரும் மகளிருக்கான
  வனிதா வாசனா கணக்கு
- முதுமைப்பருவத்தில் கூடுதல் வட்டியையும் பல வரப்பிரசாதங்களையும் வழங்கும்
  பரிணத கணக்கு
- அனைத்துத் தரப்பினருக்குமான
  ஜனஜய கணக்கு

அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்

மழலைப் பருவத்திலிருந்து முதுமைப் பருவம் வரை அனைவருக்கும் தோள் கொடுக்கும்
**மக்கள் வங்கி**

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நத்தார் சிறப்பு மலர் 25.12.2009

Merry Christmas!

**பாலகன்......** (2 ஆம் பக்கத் தொடர்ச்சி)



கிறிஸ்துவின் பிறப்பிலே வெளிப்பட்டது'' (தீத்து 3:4). பகிர்தல் மனித நேயத்தை வெளிப்படுத்துகின்றது என்பதால் இம்முறை கிறிஸ்து பிறப்பு விழா பகிர்வுக்கு நம்மை அழைக்கின்றது என்பதை உணர்ந்து, பகிர்ந்து வாழ முற்படுவோம். பெரும் எண்ணிக்கையான மனித உயிர்களைக் காவு கொண்ட கொடிய யுத்தம் முடிவுக்கு வந்து விட்டது. நாட்டில் அமைதி ஏற்பட்டுவிட்டது என்பது ஒரு மாயையாகவே உள்ளது. பலதேவைகளோடு எமது அயலிலும் பங்கிலும் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மீண்டும் தம் சொந்த இடங்களில் மீளக் குடியமரும் மக்கள் எம்மிடம் இருந்தே பலவிதமான உதவிகளை எதிர்பார்த்து நிற்கின்றார்கள். உணவுத் தேவை மட்டுமல்ல பல்வேறு விதமான அடிப்படைத் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளது.

ஆண்டவர் இயேசு இறை தன்மையில் இருந்து இறங்கி வந்து ஏழையாகப் பிறந்தார். நம்மைத் தேடி வந்த இறைவன் நம்முடனே வாழுகின்றார் என்ற நம்பிக்கை நிதர்சனமாக வேண்டுமாக இருந்தால் போரின் கொடுமையால் ஏழைகளாக்கப்பட்ட மக்களிலே பாலக யேசுவைக் காண முற்படுவோம். அவரின் அன்பையும் இரக்கத்தையும் மனித நேயத்தையும் கொடுக்க முன்வருவோம். எமக்கான கிறிஸ்து பிறப்பு விழாவின் செலவுகளின் ஒரு பகுதியைத் தியாகம் செய்து இவ்வாறான மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதன் ஊடாக எம் உள்ளங்களில் பாலக இயேசுவுக்கு குடில் அமைத்து அவரை வரவேற்போம்.

**இ.அ.அமலரட்ணம், பேராலயம்.**

**முடிவாக**

நம்பிக்கையின் விழாவாக எளிமையின் விழாவாக பகிர்தலின் விழாவாக அமையும் கிறிஸ்து பிறப்பு விழா ''உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக'' (லூக் 2:14) என்ற இறைவார்த்தைக்கு அர்த்தம் கொடுப்பதாக அமையட்டும். நாம் ஒவ்வொருவரும் சமாதானத்தின் 'கருவிகள்' என்பதை உணர்ந்து நிலையான சமாதானத்துக்காக உழைக்கவும் பிறக்கின்ற பாலக இயேசுவின் ஆசீரும் அருளும் அனைவருக்கும் கிடைக்கவும் பிரமாணிக்கமாக உழைப்போம். அவருக்கு உகந்தோராக வாழ்ந்து உண்மையான சமாதானத்தை எமதாக்கவும் பாலக இயேசுவின் பிறப்பு எம் உள்ளங்களில் நிதர்சனமாகவும் வரம் வேண்டுவோம்.





















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
Merry Christmas!
நத்தார் சிறப்பு மலர்
25.12.2009

# மனித அவதாரத்தில் மலர்ந்த மனித நேயம்

''உலகெங்கும் உள்ள மக்கள் அனைவரும் நம் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.''(திரு.பா198:3) மனுக்குல வரலாற்றில் மாபெரும் சாதனையாளனாக தமது சொல்லாலும் செயலாலும் விளங்குபவரே இறைமகனாம் இயேசுக்கிறிஸ்து. ''கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டிய தொன்றாகக் கருதவில்லை; ஆனால் தம்மையே வெறுமையாக்கி , அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்'' (பிலிப்: 2:6-7) என்ற மறைநூல் வாக்கிற்கு ஏற்ப கடவுளாகிய இயேசுக்கிறிஸ்து பாவ உலகில் மூழ்கி அழிவின் வாழ்வை நோக்கிச் செல்லும் மனித குலத்தை மீட்க, உண்மையான மனிதநேயத்துடன் இம் மண்ணுலகில் மனித அவதாரம் எடுத்த உன்னத விடுதலையின் நாளையே இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாக நத்தார் நன்நாளாகக் கொண்டாடி மகிழ்கின்றோம் என்பது அனைவரும் உணர்ந்த உண்மை.

எனினும் சமகால சூழலில் கிறிஸ்துவின் பிறப்பை எதிர்நோக்கிக் காத்திருந்து பல ஆயத்தங்களை முன்னெடுத்து இன்று எம் மீட்பராம் கிறிஸ்து பிறப்பு விழாவில் எம் உள்ளங்களும், இல்லங்களும், ஏன் சமுதாயமும் நாடும் மகிழ்கின்றதென்றால் அதன் உண்மையான அர்த்தத்தை நாம்ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். இன்றும் எம் மத்தியில் பேசப்படும், செயல்படுத்தப்படும் மனித நேயம் மனித உரிமைகளுக்கும் இறைமகன் கிறிஸ்து அளித்த மனித நேயம், மனுக்குலவிடுதலைக்கும் எவ்வாறான தொடர்பு உண்டு? என்பதை உள்ளத்தூய்மையில் விளங்கும் நீதியின் கண்ணோட்டத்தில் உற்றுநோக்க எம் மத்தியிலே பாலகவடிவில் பிறந்துள்ள நீதியின் அரசராம் இயேசு அழைப்பு விடுக்கின்றார்.

இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்பே எம் நாட்டு அரசியல் களத்தில் சிறுதுளியாக ஆரம்பிக்கப்பட்ட மனித நேயம் சமத்துவம், சம உரிமையான ஆட்சிமுறை கொண்ட மனித வாழ்விற்கான நீதியின் குரல்கள், பேச்சுவார்த்தைகளாகி, அகிம்சை வழிப்போராட்டங்களாக முன்னெடுக்கப்பட்டு, அவை வெற்றியளிக்காக பட்சத்தில் ஆயுதப் போராட்டங்களாக உருப்பெற்று கடந்த முப்பதாண்டுக்காலத்தில் பல இரத்தக்களறிகள் சிற்றாராய் ஊற்றெடுத்து கடந்த மூன்றாண்டுக்காலத்தில் பேராறாய்ப் பாய்ந்து வன்னிப்



பெருநிலப்பரப்புவரை பாய்ந்து வலைஞர்மடம் வரைபரந்து பெரும் இரத்த வெள்ளமாகப் பர்ணமித்து ஓய்ந்துள்ள நிலையில் இன்றைய கிறிஸ்து பிறப்புவிழா உதயமாகிறது. எம்மிடையே அசைந்து, ஆடி அலைக்கழித்து, ஓய்ந்துவிட்டபெரும் போர்ப்புயல் எம் இனத்தின் மேல் பதித்துச் சென்ற ஆற்றமுடியாத வடுக்களோ, உடல் உள வேதனைகளோ மாற்ற முடியாதவை; மறுக்க இயலாதவை என்பது உண்மையான நீதி புலப்படும் நாளில் நிஜமாகும்.

எனினும் இவற்றினிடையே இருந்தும் மனிதத்தை வாழ்விக்க வேண்டும் என்ற உறுதியான உறவில் பல மனிதர்களும், மனித அமைப்புக்களும் மனித நேயம் பற்றி அதிக அக்கறை கொள்வதும், அதுதொடர்பாக பல செயற்பாடுகளை முன்னெடுப்பதும் எம்மத்தியிலே வரவேற்கத்தக்கதும், தேவையுமான தொன்றாகும்.ஆயினும் இவ்வாறான மனித மாண்பைக் கட்டியெழுப்பும் செயற்பாடுகள், இறைமகன் கிறிஸ்து வாழ்ந்துகாட்டிய மனித நேய வாழ்வு முறையே ஒத்துள்ளதா என நாம் சிந்தித்தல் இக் காலத்தில் மிகவும் பொருத்தப்பாடாகும்.

இறையியல் பின் தன்மையை விட்டு இறங்குமனித அவதாரம் பூண்ட அவரது உன்னதமான தாழ்மையும், தந்தைக்குக் கீழ்ப்படியும் பெரும் தன்மையும் இன்று எம்மிடையே உள்ளதா? அரசருக்கெல்லாம் அரசராய் விளங்க வேண்டிய அவர் அந்நிலையிலிருந்து விட்டு இறங்கி,அடிமையின் தன்மை பூண்ட நிலை எம்மிலே இருக்கின்றதா? நாமும் பிறர் வாழ்விற்காக, பிறஇனத்தவனின் உரிமைகளை மதித்து வாழ எமது பணம், பதவி, அந்தஸ்து, புகழ், எல்லாவற்றையும் விட்டு இறங்கி மனித நேயம் கொண்ட பணிவுள்ள வாழ்விற்கு எம்மைத் தயாராக்கும் போது தான் இறைமகனில் விளங்கிய உன்னத மனித நேயம் எம்மிலும் துலங்க முடியும்.

மேலும், ''இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவார்.'' (மத்:1:22-23) என்னும் இறைவாக்கின் வழியாக கடவுள் நம்முடன் இருக்கிறார் என்ற நம்பிக்கையின் செய்தி எளிய மனங்கொண்ட இடையர்களுக்கும், எதிர்பார்ப்புடன் காத்திருந்த ஞானிகளுக்கும் வெளிப்படுத்தப்பட்டது போன்று இன்றைய சூழ்நிலையிலும் சொல்லமுடியாத வேதனைகளையும், இழப்புக்களையும் எதிர்கொண்டு எம் எதிர் காலம் எப்படி அமையுமோ என்று ஏங்கி நிற்கும் மக்களுக்கும், தொடர்ந்தும் விடுதலையின்றித்தடுப்பு முகங்களில் இருந்து நீதியின் விடுதலைக்காக ஏங்கும் எமது இளைய தலைமுறையினருக்கும் எம்மால் இயன்ற மனித நேய செயற்பாடுகளை முன்னெடுத்து அவர்களது எதிர்காலம் ஒளியுடையதாக, நம்மை விடுவிக்கும் கடவுள் நம்முடன் இருக்கின்றார் என்ற நம்பிக்கையின் வாழ்வை அவர்களுக்கு அளிப்பதாக எமது வாழ்வும் அமையவேண்டும். இதற்கு அரசன் முதல் அடிமட்ட சமுதாய மக்கள்வரை ஒன்றுபட்டு உழைத்து அவர்களிடையேயும் மனித மாண்பைப் பிரகாசிப்பவர்களாக விளங்கவேண்டும். அவ்வேளையின் தான்,உலகமீட்பராம் கிறிஸ்துவின் மனித அவதாரத்தினால் கிடைக்கப்பெற்ற இறைவனின் நற்செய்தியும் சிறைப்பட்டவர்களுக்கான விடுதலையும் , (அக,புற ) பார்வை அற்றவர்களுக்குப் புத்தொளிநிறைந்த வாழ்வும், ஒடுக்கப்பட்டவர்களுக்கு உரிமை வாழ்வும் ஆண்டவர் அருளும் முழுமையான மீட்பின் காலமும் உதயமாகும். இதனையே இன்று எம் சமூகத்தில் நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் தத்தமக்குரிய மனித நேயத்தில் கேட்டு நிற்கின்றனர்.

எனவே கிறிஸ்து காட்டிய சமத்துவம், நீதி, அன்பு, சமாதானம், முழுமனித விடுதலை,நிறைவாழ்விற்கான ஆன்மீக மீட்பு என்னும் பண்புகளில் எம் வாழ்வையும் அமைத்து தனக்கென்று வாழாது பிறருக்கென்று வாழும் பரந்து பட்ட அன்புறவில், அமைதியின் வழியில் வாழ்ந்த உண்மையான மனித நேயத்தை எம்மிடையேயும் வன்முறைகள், பழிவாங்கல்கள், அநீதிகள் அகற்றி இன்றிலிருந்தே வாழ்விக்க அனைவரும் உறுதிகொள்வதே அர்த்தம் நிறைந்த கிறிஸ்மஸ் தரும் மகிழ்ச்சி.

நிறைவிடுதலைச் செய்தியாக எம் இனத்திற்கும் முழு நாட்டிற்கும் அமையும். இதன் ஊடாக, ''இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளிதரவும் தம்முடைய கால்களை அமைதி வழியில் வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகின்றது.'' (லூக்:1:78-79)என்ற இறைவாக்கு எம்மிடையேயும் நிறைவேறுவதாக அமையும்.

ஜோதுகார்மலிற்றுபினா,
இளவாலை.

# இயேசுவே மெய்ப்பொருள்

கடவுள் தாம் வாக்குப் பண்ணியபடி மனிதனைஇரட்சிக்க மனித உருவெடுத்து பிறந்த நாள் தான் ''கிறிஸ்மஸ்'' பண்டிகை.

இயேசுக்கிறிஸ்து பிறந்து 2009 ஆண்டுகள் ஆகிவிட்டன.

மனித உயர்வுக்காக இறைவனால் வாக்குப் பண்ணப்பட்டவர் இவரே.

இவர் வழியாகவே இவ்வுலகமும் அண்ட சராசரங்களும் படைக்கப்பட்டன.

ஆதிப் பெற்றோருடன் சிங்காரத் தோப்பில் உலாவந்தவர் இவரே.

தன் கைகளையும், கால்களையும் ஆணிகளினால் துளையிடவும், தன் ஜீவனையே மனித உய்விற்காக மனமுவந்து தன்னையே ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கவும் வானில் இருந்து இறங்கிவந்த தேவ ஆட்டுக்குட்டி இவரே.

உலக மக்களின் உயர்வுக்காகப் பலியாக்கப்பட வேண்டிய மாசற்ற ஆட்டுக்குட்டியின் ஒன்பது இலட்சணங்களும் இயேசுவிலேயே நிறைவேறின.

மனிதானாகப் பிறந்தும், தூய்மையாய் வாழ்ந்து காட்டியதன் மூலம் மனிதன் தூய்மையாய் வாழலாம் என்று எமக்கு வழிகாட்டியவர்.

சொல்,செயல் என்பதற்கும் ஒருபடி மேலே போய் உளத்தூய்மையால் மட்டுமே இறைவனைக் காண முடியும் என்று ஞான ஒளி தந்தவர்.

ஒருவரை இச்சையுடன் நோக்கினால் அவர் மனத்தால் விபச்சாரம் செய்தாயிற்று என்பதுபோல் ஒருவரை நாம் மனத்தால் வெறுத்தாலே நாம் கொலை செய்தாயிற்று என்று மெய் ஞானத்தைக் கற்பித்தவர்.

வாழ்க்கையில் வரும் சோதனை களில் இருந்து வெற்றிபெற்று வாழ தன் திருச் சரீரத்தையும் தன் திரு இரத்தத்தையும் உணவாகத் தந்து '' நானே உயிருள்ள உணவு, இதை யாரவது தகுதியுடன் உண்டால் என்றுமே வாழ்வான்'' என்று வாழ்வளித்தார்.

'' நான் உங்கள் உள்ளக் கதவைத் தட்டிக் கொண்டிருக்கின்றேன், யாராவது எனது குரலைக் கேட்டுக் கதவைத் திறந்தால், நான் உள்ளே சென்று அவர்களுளோடு உணவருந்துவேன் '' என்று வாக்குதந்தம் செய்து சமகேயுவை எமக்கு நினைவூட்டி பாவிகளான எமக்கு நம்பிக்கையூட்டுபவர்.

தன்னுடைய சீடர்களுக்காக மட்டும் அவர் வேண்டவில்லை, அவருடைய சீடர்களின் வழியாக இயேசுவில் நம்பிக்கை கொள்ளும் நம் ஒவ்வொருவருக்காகவும் பரம் பிதாவிடம் அவர் வேண்டிக் கொண்டதன் மூலம் தன்னிடம் தஞ்சமடைந்தவர்களைக் கைவிட மாட்டார் என உறுதி தருபவர்.

இயேசு சிலுவையில் மரணித்தபோது, இறைமக்கள் பலர் உயிருடன் கல்லறைகளில் இருந்து எழுப்பப்பட்டனர். இதன் மூலம் சிலுவைச் சாவு ஒரு தோல்வி அல்ல.

தன்சிலுவை மரணம் விசுவாசி களுக்கு உயிர்ப்புத் தரும் என்று கோடி காட்டியவர்.

தாம் வாக்குப் பண்ணியபடி மரித்த மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததன் மூலம் தான் தேவகுமாரன் என்று எண்பித்தவர்.

பாவியான மரியமதவேன் மரியாளுக்கு, உயர்ந்த இயேசு முதலில் தோன்றியதன் மூலம் பாவிகளை நோக்கியே தான் வந்தார் என்று மீட்பின் நோக்கத்தை உணர்த்தியவர். சந்தேகம் நீங்கிய தோமா '' என் ஆண்டவரே, என் கடவுளே '' என்று இயேசுவே நோக்கிக் கதறிய போது தானும் பரம பிதாவும் ஒன்றே என்பதனை வெளிப்படுத்தினார்.

இந்த இயேசுவே பரிசுத்த ஆவியாகி நம்மிடையே வாசம் செய்கின்றார்.

இந்த இயேசுவே மெய்ப்பொருள். இவரால் முடியாதது ஒன்றுமில்லை.

நித்த பிதாவுக்கும் எமக்குமிடையில் பரிந்து பேசுபவர் இந்த இயேசு ஒருவரே.

இவரால் எமக்கு மீட்பும், அமைதியும், சமாதானமும், நித்திய வாழ்வும் உண்டு.

இந்த மெய்ப்பொருள் இயேசுவில் நம்பிக்கை கொள்வோம்.

இவரில் நம்பிக்கை கொள்வதன் மூலம் நமக்கு அடுத்திருப்பவரை மதிப்போம், அன்பு செய்வோம், நித்திய பிதாவின் சித்தத்திற்குக் கீழ்படிவோம்.

இந்த கிறிஸ்மஸ் பண்டிகை நம் எல்லோருக்கும் இனிதாக அமையட்டும்.

வாழ்த்துக்கள்
கிறிஸ்துவே உமக்குப் புகழ்

சேவியர் ஜோசவ்

# புதிய வடிவம்

துயரங்களும், ஏமாற்றங்களும்
தொடர் கதைகள் ஆகிவிட்ட
நிலையில்
மனங்களில் ஏக்கங்களுடனும்
கண்களில் தேடல்களுடனும்
நகர்கின்றன எங்கள் பொழுதுகள்
எங்களுக்கான விடியல் எப்போது-?
என்ற வினாவுடன்......
விழி வெள்ள [illegible]
மலரட்டும் [illegible]
புதிய விடியல்.

A. நிரோ,
புனித ஜோசவாயார் ஆலயம்,
பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
Merry Christmas!
நத்தார் சிறப்பு மலர்
25.12.2009









## இறைமகனை தொழுவோம்

பொழுதுமே சாய்ந்தது பதியிருள் சூழ்ந்தது
பாலகன் யேசுவும் பிறர்தனன் நன்றே
விழுதுகள் போலவே சிந்திடும் பனித்துளி
வையகத்தில் மாட்டிடை குடிலும் மலர்ந்தது
தொழுவோமே மகிழ்வோடு மரியாளின் மைந்தன்
திருமகன் யேசு தூதுவன் ஆனாரோ
மெழுகுகொளி ஏற்றிடும் மங்கல நாளிது
மேய்ப்பனை தொழுவோம் மேன்மைகள் பெறுவோம்

அல்வையூர்
கே.ஆர். திருத்துவராஜா

## மீண்டும் வந்து காட்டிடு ஒளியை

போரினின் வடுக்கள் தீர்ந்து
புதுவாழ்வு நாங்கள் காண
பாரிலே மீண்டும் வந்து
பாலனே பிறந்திடு ஐயா
நேரிலே நீதான் வந்து
நிலைமையைப் பார்த்து நின்று
காரிருள் அகற்றி வாழ்வில்
காட்டிடு ஒளியைத் தானே



வ.யோகானந்தசிவம்


இனிய நத்தார் நன்னாளில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்

தங்கம் உள்ளே
பணம் வெளியே



அதிகூடிய முற்பணம் குறைந்த வட்டி

தங்கத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.
உடனடியாகவே அதன் நன்மையை நாம் உங்களுக்கு வழங்குகின்றோம்.

மாதாந்த வட்டி வீதம் 1.125%

24 கரட் - 27000/=
22 கரட் - 24000/=

வரிசை இல்லை. முத்திரை வரி இல்லை. ஆவணப்படுத்தல் தொல்லைகளும் இல்லை.

விரைவாக மீட்கலாம். தவணைக்கட்டண வசதி. முழுமையான இரகசியத்தன்மை.

மேலதிகப்பற்று/தனிநபர் கடன்/கடனட்டைகளை விட குறைந்த வட்டி

தெரிவு செய்யப்பட்ட வங்கிக்கிளைகளில் சனி, ஞாயிறு தினங்களிலும் இச்சேவையை பெற்றுக்கொள்ளலாம்

செலான் தங்க நகை அடகுச் சேவை

இல.560, 562, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3047,
021 222 3755

செலான் வங்கி

தெரிவு நற்பழக்கங்கள் பெருமகிழ்ச்சி தரும்!




உங்கள் கணக்கு மீதி ரூபா 500 ஆனால்
★ குவளை அல்லது
★ பொம்மை அல்லது
★ சிறிய கார் செற்

உங்கள் கணக்கு மீதி ரூபா 5,000 ஆனால்
★ கைக்கடிகாரம் அல்லது
★ மென் விளையாட்டுப் பொருள் அல்லது
★ புத்தகப்பை

உங்கள் கணக்கு மீதி ரூபா 10,000 ஆனால்
★ DSI அன்பளிப்பு வவுச்சர் அல்லது
★ றேடியோ கசெற் பிளேயர் அல்லது
★ ஸ்கிறபிள் செட்/குறொஸ்வேட்

உங்கள் கணக்கு மீதி ரூபா 30,000 ஆனால்
★ பாடும் பொம்மை அல்லது
★ புத்தகங்கள் வாங்க வவுச்சர் அல்லது
★ பற்றறியில் இயங்கும் கார்

உங்கள் கணக்கு மீதி ரூபா 50,000 ஆனால்
★ BMX பைசிக்கிள் அல்லது
★ V tech கம்பியூட்டர் (மாதிரி 1) அல்லது
★ மெலோடிகா

உங்கள் கணக்கு மீதி ரூபா 75,000 ஆனால்
★ V tech கம்பியூட்டர் (மாதிரி 2) அல்லது
★ இலக்ரோனிக் ஓர்கன் அல்லது
★ டிஸ்க்மன்

உங்கள் கணக்கு மீதி ரூபா 100,000 ஆனால்
★ V tech கம்பியூட்டர் (மாதிரி 3) அல்லது
★ கமரா அல்லது
★ புத்தகங்கள் வாங்க வவுச்சர்

உங்கள் கணக்கு மீதி ரூபா 200,000 ஆனால்
★ தங்க ஆபரணம் வாங்க வவுச்சர் அல்லது
★ டயலொக் ரெலிக்கொம்மிடமிருந்து கையடக்க தொலைபேசி உபகரணங்கள் வாங்க வவுச்சர் அல்லது
★ DVD பிளேயர்

உங்கள் கணக்கு மீதி ரூபா 300,000 ஆனால்
★ சஸ்பென்ஸர் பைக் அல்லது
★ தங்க ஆபரணம் வாங்க வவுச்சர்

உங்கள் கணக்கு மீதி ரூபா 400,000 ஆனால்
★ வைரப் பதக்கம் அல்லது
★ சிங்கர் ஸ்ரீலங்காவிலிருந்து எலக்ரோனிக் உபகரணங்கள்

உங்கள் கணக்கு மீதி ரூபா 500,000 ஆனால்
★ வைரப் பதக்கம் அல்லது
★ Swatch + ஸ்போட்ஸ் வொச்

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் நத்தார் சிறப்பு மலர் 25.12.2009




## மக்களைக் காக்கவேண்டும்

அளவையூர் அமலன்

பாலகனே உன் பிறப்பு
மனங்களில் நிகழவேண்டும்
அதனால்
கனிவுள்ள உள்ளங்கள்
எம்மண்ணில் மலரவேண்டும்

அழுகின்ற உள்ளங்கள்
ஆறுதல் பெறவேண்டும்
உன்பிறப்பு
இருள்தனை அகற்றி
ஒளிதனை ஏற்றவேண்டும்

துன்பங்கள் நிறைந்த
சிறையிலே எம் வாழ்வு
உன்பிறப்பு
சிறைதனை உடைத்து
உரிமை தரவேண்டும்

இழப்புக்கள் எம்வாழ்வில்
கூடவே இருக்கின்றது
உன்பிறப்பு
நொறுங்கிய உள்ளமதில்
ஆறுதலைத் தரவேண்டும்

வன்முறையும் வடுக்களும்
நிறைந்தது எம்பூமி
உன்பிறப்பு
சுதந்திரம் தந்து
மக்களைக் காக்கவேண்டும்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org